Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

டிச. 07 - 13, 2006

# வாரமலர் தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 690



## ஜனாதிபதி - பிரதமர்! வெளிநாட்டு விஜயங்களும்



## புதிய அரசியல் சவால்களும்!











## கருக்கலைப்பு: ஒரு சமூக அழிப்பு!

சிறப்புப் பார்வை



## தயாராகிறது தகர்க்கும் திட்டங்கள்!

# ஆன்மீகம்

## கட்டளையிட்ட பக்தன்!

ஆண்டவனின் விருப்பத்தை - கட்டளையை நிறைவேற்றி அருள் வேண்டி நிற்கும் பக்தர்கள்தான் அனேகமானோர் இருக்கிறார்கள். ஆனால், ஆண்ட வனுக்கே கட்டளையிடும் பக்தர்கள், இறைவனோடு சங்கமித்த புராணக் கதைகளும் உண்டு என்பதற்கு நம்பியாண்டார் நம்பியின் வரலாறு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்திருப்பது எமக்கு வியப்பைத் தரக் கூடியதே! தந்தையின் சொல்லைக் காப்பாற்ற எண்ணித் தன் தலையைப் பாறையில் மோதிய செயலானது, தந்தைக்குச் செய்யும் கடமை என நினைத்து சிறுவன் செய்த சிந்தனையற்ற செயல் என்று வாதிடுவோரும் இருக்கத்தான் இருக்கிறார்கள். கபடமற்ற குழந்தையின் மனதில் இறைவன் குடிகொண்டதன் விளைவே கல்லாக இருந்த சிலை வடிவம் பொல்லாப் பிள்ளையாராக மாறி நம்பியை ஆட்கொண்டமை, குழந்தை உள்ளத்தின் கள்ளமற்ற தன்மை இறைவனை வழிபடுவோருக்கு அவசியம் என்பதனை எடுத்துக்காட்டுகிற தல்லவா?

என். எஸ். ராஜா, தம்பலகமம்.



## கர்த்தரை நாடுவோம்!

இயேசுவாகிய நமது கர்த்தர், பாவங்களில் இருந்து நம்மை இரட்சிக்கவே இம்மண்ணுலகில் அவதரித்தார். அவர் நிகழ்த்திய அற்புதங்கள் அனந்தம், ஆர்ப்பரிக்கும் கடலை அடக்கினார். கடலில் நடந்தார், மரணித்த நபரை உயிர்ப்பித்தார். இது போன்ற அற்புதங்களைப் பரிசுத்த வேதாகமத்தில் இருந்து நாம் வாசிக்கிறோம்.

சூரியன் உதிப்பதும், சந்திரன் பிரகாசிப்பதும், காற்று, மழை, இடி, மின்னல் என்பன தோன்றுவதும் அவர் கட்டளைப்படியே நிகழ்கின்றன. ஆனால் மனித குலம் மட்டும் வேதாகமத்தின் வழிமுறைகளைப் பின்பற்றுவதில் தயக்கம் காட்டுகிறது.

கர்த்தர் உலகைப் படைத்தவர். ஜீவராசிகளையும், மனித குலத்தையும் உருவாக்கியவர். அத்தகைய சர்வ வல்லமை படைத்த - எல்லாம் வல்ல கர்த்தரை நாடி நின்றால் கோடி நன்மையுண்டு.


-எஸ். நிரஞ்சன்குமார், வத்தளை

## சதகா செய்வதால் குறைந்து விடாது!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- 'சதகா செய்வதால் பொருள்கள் குறைந்துவிடுவதில்லை.' சிலர் கஞ்சர்களாய் இருப்பதற்குக் காரணம் என்ன? தாம் ஏழை - எளியவர்களுக்கும், பெற்றோர், உறவினர்களுக்கும் தம் பொருளை அள்ளி வழங்கினால் அதில் குறைவு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினால் தானே! அவ்வாறு அஞ்சத்தேவையில்லை! ஏனெனில் உங்கள் செல்வங்களிலிருந்து ஏழைகளுக்குக் கொடுப்பதால் அதில் சிறிதளவும் குறைந்துவிடாது என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே தன்னுடைய அறச் செயல்களால் ஒருவன் வறிய நிலைக்கு வந்துவிடமாட்டான். மாறாகத் தன்னுடைய பாவச் செயல்களின் விளைவாகவே அவன் அந்நிலைக்குத் தள்ளப்படுவான்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07

## கவிதைப் போட்டி இல.687



பரிசுக்குரிய கவிதை

### அனாதைப் பிள்ளை

அப்பா பிள்ளையாயிருந்தேன்
அம்மா பிள்ளையாயிருந்தேன்
அர்த்தமற்ற யுத்தத்துக்குப்பின்
அனாதைப் பிள்ளையாய் ஆகிவிட்டேன்.
சிறுவர் வேலை வேண்டாமென்று
சீறுகின்றார் மனித உரிமையாளர்
குடலை எரிக்கும் என் பசி தீர
குரக்கன் கூழாவது கிடைப்பதற்கு
வழிவகைகள் செய்ய வக்கில்லை -
இவர்களுக்கு.

– சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு

# கவிதைப் போட்டி இல.690

### படிக்கிற வயசில்..!

புத்தகக் கட்டு
தூக்கும் வயசில்!
கட்டிடக் கற்கள்
தூக்கும் அவலம்!
அவனியில் அமைதி
சமாதானம் தோன்றி
சந்தோஷம் கண்டிட
உதயமாகுமா
புதியவிடியல்?

- கோட்டைமுனை ராஸியா,
பதுளை.

### யுத்தம்!

கல்தூக்கி மண்தூக்கி
வாழும் நிலைமை
யாரால் வந்தது?
வஞ்சகர்களின் கொடூர
யுத்தத்தால்
வந்த வினை....
எம்மை வீதியில்
இறங்க வைத்தது
ஐயகோ! இந்த யுத்தம்
முடிவிற்கு வந்து எமது
வாழ்வு எப்போது
சீர்பெறும்?

– ஏ. எஸ். எம். ரவூப்,
கொழும்பு–15.



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.12.2006.

கவிதைப் போட்டி இல.690
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.




### இன்னமும் உண்டு!

அன்றாடம்
கல் சுமந்து
கால் வயிற்றுக்
கஞ்சிக்காய்..
பாடுபடும் இவளிடமும்
கப்பமும், வரியும்
இன்னமும் உண்டு.

– இர்ஷானா. எம். நிஷால்,
ஏறாவூர்.

### பாவச்சுமை தாங்கிகள்!

பாவப்பட்ட சுமைகளை
எவர்களோ விதைக்க...!?
அதை நாங்களல்லவா
சுமக்கின்றோம்!

– மீராமுகைதீன் – ஹாலித்,
ஏறாவூர்.

### ஏழையின் போராட்டம்!

ஏழையின் அடுப்பில் எரியா
நெருப்பு....
அடிவயிற்றில் எரிவதால்...
பசிக்கு வயிற்றுக்காய்...
பாரந்தான் சுமந்து கால்வலிக்க...
நடக்கும் நிலைதான் மாறிடுமா....?

– தி. தர்சினி,
கொழும்பு–13.

### சுமை!

தாங்கக்கூடிய சுமை
இக்கற்சுமை.
தாங்கமுடியா சுமை
இந்நாட்டின்
வாழ்க்கைச்செலவுச்
சுமை!

– அ. சந்தியாகோ,
கண்டி.

# உங்கள் பக்கம்

## பாதிக்கப்பட்ட மாணவர்களின் பணம் மீளளிக்கப்படுமா?

யாழ்ப்பாணத்தில் சம்ஸ்ரெச் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனமொன்றின் கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி பெருந்தொகையான பணத்தினைச் செலுத்திய ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்களிடமிருந்து கோடிக்கணக்கான பணத்தினைச் சூறையாடி ஏப்பம் விட்ட இந்த நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனத்தில் படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் கவர்ச்சிகரமான சம்பளத்தில் நிச்சயம் வேலை என்று குடாநாட்டுப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக விளம்பரங்களை வெளியிட்ட இந்த நிறுவனத்தை நம்பி ஏமாந்த ஆயிரக்கணக்கான மாணவர்களின் ஆதங்கத்தை இதன் மூலம் நாம் வெளிப்படுத்துகிறோம்.

இந்த நிறுவனத்தின் நம்பகத்தன்மை குறித்தும், ஏமாற்று வேலை குறித்தும் தகவல்கள் வெளியாகிய பின்னர், பணம் செலுத்திய மாணவர்களாகிய நாம் எமது பணத்தை மீளளிக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரிடம் அதற்கு உடந்தையாக உள்ள புலிகளின் பிரமுகர்களிடமும் வலியுறுத்தினோம்.

இந்த நிலையில் எமது பணம் மீளளிக்கப்படும் என சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரால் உறுதி மொழி உத்தரவாதம் வழங்கப்பட்டது. பணம் மீளத்தருவதாக உறுதியளிக்கப்பட்ட கால எல்லை கடந்து ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்ட நிலையில் இதுவரை காலமும் எதுவும் நடைபெறவில்லை.

எனவே பாதிக்கப்பட்ட மாணவர்களாகிய நாம், எமது பணத்தை மீளப் பெற்றுத்தர உரியவர்கள் உடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில்,

*பி.எஸ்.பாதிக்கப்பட்ட மாணவன்,
யாழ்ப்பாணம்.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### வீரத்தின் விளைநிலம் நீயல்லவோ....!

பல்லாயிரக் கணக்கான நேயர்களின் நெஞ்சங்களில்
நிலைத்து நிற்கும் தினமுரசே, நீ 688இல்
சுமந்துவந்த
தகவல் பெட்டியின் தகவல்கள் அனைத்தும்
என்னைத்
திகைக்க வைத்தது, சுவைக்க வைத்தது.
அதுமட்டுமன்றி
இலங்கை அரசியலில் தணிக்கையாகிப் போகும்
தகவல்களை
துணிவாய் ஏற்று, எங்களுக்கு அறிய வைத்தாய்.
உனக்கு
எனது இதயபூர்வமான நன்றிகள். சுமந்துவரட்டும்
உண்மைகளை. தொடரட்டும் உன் பணி.

ஆனந்தத்தில் ஒரு அனல்
துறைநீலாவணை – 06.

### தித்திக்கும் தினமுரசே.....!

அருமையான ஆக்கங்களுக்கு
அகரமிட்ட தித்திக்கும்
தினமுரசே.....!
உந்தன் சேவை
எட்டுத்திசையும் தட்டும் முரசாய்
முழங்க வேண்டும்....!
உண்மைகளை ஒளித்துவிட்டு
கண்டதையும் கண்டபடி கூறி
கலாட்டா பண்ணும்
பத்திரிகையுலகில்
உண்மையைக் கூறி
உள்ளத்தை கவர்கின்றாய்....!
உண்மையில் உன்னில்
இதைத்தான் நானும் விரும்புகின்றேன்!
வாசகர்கள் நேசக்கரம்
நீட்டி நிற்கிறோம்
நிமிர்ந்து செல்!
துணிந்து சொல்!

மனோதீபன்,
நானுஓயா.

### முரசே மிளிர்வாய்!

முரசே! உன்
முன்னேற்றம்
நாட்டுக்கு நல்லது

முன்பு வாசகர்கள்
நேற்று வாசகர் கூட்டம்
இன்று வாசகர் அத்திவாரங்கள்

நாளை உண்மையைக்
கண்டறிந்து
பத்திரிகைகள் வாசிக்கும்
பத்திரிகையாய்
நீ!...மிளிர்வாய்.

–ஆயிஸா ரிஸ்வின்,
மூதூர்.

### முரசே நீ! வாழ்க

திங்கள் மறைந்தது
செவ்வாய் கழிந்தது
புதன் என்று வருமென்று
பூத்திருக்கும் கண்கள்
புதன் காலை
மலர்ந்தவுடன்
பொன்னேடு தினமுரசு
தவழும் எம் கைகளிலே
களிப்புக் கொஞ்சும்
சூடு சுவை
சொல்லொண்ணா
சுவாரசியங்கள் தந்து
எம்மைச்
சொக்க வைக்கும்
முரசே நீ!
வாழ்க பல்லாண்டு!

–என்.சிவராஜா,
திருகோணமலை.

## சர்வதேச வலது குறைந்தோர் தினம்

வலது குறைந்தவர்களை சமூகத்தோடு இணைக்கும் முன்னோடி முயற்சிகள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு முன்னோடியாக சர்வதேச வலது குறைந்தவர்களுக்கான தினத்தையொட்டிய நிகழ்வு கடந்த மூன்றாம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்றது. சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும், கிராமிய ஜீவனோபாய அமைச்சரும் பிரதி சமூகசேவைகள் அமைச்சருமான ஜகத் புஷ்பகுமாரவும் இதில் கலந்து கொண்டனர்.

## மகிந்த - ரணில் சந்திப்பு: முன்னேற்றகரமான இணக்கம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மேற்கொண்ட இந்திய விஜயத்தின் பின்னர், கொழும்பில் கடந்த 5ஆம் திகதி நடத்திய சந்திப்பு மிகவும் பயன் மிக்கதாக அமைந்ததென்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் இயக்கத்தின் மீது கடினமான நடவடிக்கை எடுப்பது மற்றும் வடக்கு, கிழக்கு இணைப்பு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு உள்ளிட்ட பல விடயங்கள் பற்றிப் பேசப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. சிற்சில விடயங்களில் சில சில கருத்து முரண்பாடுகள் காணப்பட்டாலும், தெற்கில் பொது இணக்கப்பாடொன்றினைக் காண்பது தொடர்பாக ஏகோபித்த அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டனவென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பிரிவினை யுத்தத்தை முறியடிக்க அரசுக்கு இருக்கும் ஒரே வழி -'வாஷிங்டன் டைம்ஸ்' சஞ்சிகையில் ஒரு கடிதம்

இலங்கையின் ஆளும் அதிகார வர்க்கம் இன உணர்வுகளுக்கு அப்பால் செயற்படும் விருப்பை நேர்மையாகத் தெரிவித்து சிறுபான்மையினருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் கடப்பாட்டினை வெளிப்படுத்தினால் மட்டுமே பிரிவினைச் செயற்பாட்டிற்கு சவால் விட முடியும். இந்தக் கடப்பாட்டினை அமுல்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் விருப்புகள் இருந்தால் மட்டுமே பிரிவினைவாத இயக்கங்களின் நிகழ்ச்சி நிரல்களைத் தோற்கடிக்க முடியும் என்று இலங்கையரான கலாநிதி ஏ.ஆர்.எம். இம்தியாஸ், 'வாஷிங்டன் டைம்ஸ்' சஞ்சிகையில் எழுதிய ஆசிரியர் கடிதப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் பிலடெல்பியா மாநிலத்திலுள்ள டெம்பள் பல்கலைக்கழகத்தில் அரசியல்விஞ்ஞானத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றும் கலாநிதி இம்தியாஸ், "பய முறுத்தும் வீரர்கள்" என்ற தலைப்பில் இக் கடிதத்தை எழுதியுள்ளார். கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதிய சஞ்சிகையில் அவரது கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

இலங்கை சமூகத்தில் மிகப் பயங்கரமான சக்திகள் புலிகள் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. எனினும் புலிகளின் தோற்றுவாய்க்கு இலங்கை வரலாற்றிலேயே வேர்கள் காணப்படுகின்றன. சிங்கள அரசியல் வர்க்கத்தினதும், பல தசாப்த கால பழைமை வாய்ந்த கொள்கைகள் மற்றும் அரசியலின் பக்கவிளைவே அவர்களாவர். புலிகளின் நிகழ்ச்சி நிரலை அங்கீகரிப்பதற்கு சாதாரண தமிழ் மக்கள் ஒரே இரவில் தீர்மானம் எடுத்து விடவில்லை. தமிழ் மிதவாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள இலங்கையின் அரசியல் தலைமை தவறியமையே அங்கு தமிழ் தீவிரவாதம் தோன்றியமைக்கு முக்கிய அடித்தளமாக அமைந்தது. இலங்கையின் ஐக்கியத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தாமல் பரந்த தீர்வொன்றினைக் காண தமிழ் மிதவாதிகள் எடுத்த முயற்சிகள் 1956ஆம் ஆண்டு முதல் சிங்களத் தலைமைகளால் கட்டுப்படுத்தப்பட்டு, தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண தவறியமையே தமிழ்த் தீவிரவாதம் தோன்றுவதற்குக் காரணமாகும். எனினும் ஏட்டிக்குப் போட்டியான சிங்களவரின் கூட்டு அராஜகம் தமிழ் மிதவாதிகளின் கோரிக்கையைக் கண்டுகொள்ளத் தவறியது.

சிங்கள அரசியல் மேல்வர்க்கம் வன்செயலைப் பயன்படுத்தத் தீர்மானித்ததால், அரசியல் அமைப்பு முறையின் மீது தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையைப் பாவித்ததோடு சில தமிழர்களை வன்செயல்களில் ஈடுபடவும் தூண்டியது. இலங்கையின் ஒரு கோடி தொண்ணூறு இலட்சம் மக்கள் தொகையில் எழுபத்தையாயிரத்திற்கு மேற்பட்டவர்களைப் பலியெடுத்த இன யுத்தத்திற்கு தீர்வாக நாட்டுப் பிரிவினை அமையாது. அது இலங்கையின் ஸ்திரமற்ற தன்மையை மேலும் மோசமாக்கும். எவ்வாறெனினும் குறிப்பிட்ட இனமொன்றின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்படும்பொழுது, ஆரோக்கியமற்ற சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க தீர்வொன்று காணப்பட வேண்டும். அதிகாரப்பகிர்வு பொறிமுறை சாத்தியப்படாதவிடத்து பிரிவினைக் கோரிக்கை வலுப்பெறும்.

ஒரே சமூக அமைப்பில் மக்கள் இணைந்து வாழ மறுதலித்தால் பிரிவினையை இயல்பாகவே நிராகரித்து விட முடியாது என்பதை உலகம் அங்கீகரித்துள்ளது. 1977ஆம் ஆண்டு முதல் தமிழர்களின் அரசியல் கோரிக்கையைக் கையாளுவதற்கு இது வொரு வழிவகையாக இருக்கலாம். ஆனால் சர்வதேச சமூகத்தின் ஆசீர்வாதத்தைப் பிரிவினைக் கோரிக்கை பெற்றுவிடப் போவதில்லை. குறிப்பாக புதுடில்லியும் வாஷிங்டனும் தத்தமக்கு நன்கு தெரிந்த காரணங்களுக்காக பிரிவினையை அங்கீகரிக்கப் போவதில்லை. நாட்டு பிரிவினை விரும்பத்தகாதது என்று சர்வதேச சமூகம் கருதினால் அதிகாரப் பகிர்வுக்கு அரசியல் ரீதியில் இடமளிப்பதன் மூலம் சிறுபான்மையினரின் மனித உரிமைகளை மேம்படுத்துமாறு இலங்கை ஆளும் வர்க்கத்திற்கு கடுமையான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். வெளியுலக அழுத்தங்கள் இல்லையென்றால் பயங்கரவாத தற்கொலைக் குண்டுதாரிகளின் இடமாக இலங்கை தொடர்ந்தும் இருக்குமென்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை வேண்டும்"

கடந்த ஒன்பது வருடங்களாக இந்தியாவிலுள்ள நாகலாந்து தீவிரவாதிகளுக்கும், இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் 50 தடவைகளுக்கு மேல் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இருந்தும் திட்டவட்டமான, தீர்க்கமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. வட - கிழக்கு மாநிலங்களான நாகலாந்து, மணிப்பூர், மிசோராம், திரிபுரா ஆகிய பகுதிகளிலும் கிளர்ச்சி இயக்கங்கள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றன. ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், ஆயுதக் குழுக்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில் ஏற்றத்தாழ்வுகளும் இழுபறிகளும் இருக்கவே செய்யும். எனவே இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் நேர்மையோடும், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் அர்ப்பண சிந்தையோடும் நடந்து கொண்டால் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்கிறார் அரசியல் ஆய்வாளரான மதிவண்ணன்.


## பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்தாக்கிய ஒப்பந்த விதி

பல சிங்களக் கிராமங்கள் மீதும், கண்டி தலதா மாளிகை மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி அந்த இயக்கத்தின் மீது தடை விதிக்கப்பட்டது. அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதையடுத்து அதே ஆண்டு செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட்டது. அரசும் - புலிகளும் சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே இந்தத் தடை நீக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டமும் வாபஸ் பெறப்பட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 2 (12) பிரிவு கீழ்க்கண்டவாறு கூறுகின்றது. "பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கைகள் இனிமேல் இடம் பெறாதென இரு தரப்புகளும் இணக்கம் தெரிவிக்கின்றன. கிரிமினல் குற்றச் சட்டத்திற்கிணங்க கைதுகளை மேற்கொள்ள முடியும்."

## தோட்டத் தொழிலாளர் சம்பளப் போராட்டம்; அரசு தலையிட வேண்டும்

வாழ்க்கைச் செலவுக்கேற்ப தமது நாட் சம்பளத்தை உயர்த்துமாறு கோரி பெருந் தோட்டத் தொழிற்துறை தொழிலாளர்கள் நடத்தி வரும் போராட்டத்தைச் சீர்குலைப்பதற்கு சில மலையக அரசியல் மற்றும் தொழிற்சங்கச் சக்திகள் ஈடுபட்டு வருவதாக தொழிலாளர்கள் பரவலாகக் கண்டனம் தெரிவிக்கின்றனர். வாழ்க்கைச் செலவுக்கேற்ப நாளொன்றுக்கு 300 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று கோரி தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பணிப் புறக்கணிப்பு, கவன ஈர்ப்பு, உண்ணா விரதம், சத்தியாக்கிரகம் போன்ற வடிவங்களில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக இப்போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. 22 தோட்டக் கம்பனிகளை உள்ளடக்கிய முதலாளிமார் சம்மேளனம் 240 ரூபா வழங்க முன்வந்திருக்கிறது. வேறு சில மலையகத் தொழிற் சங்கங்கள் 270 ரூபா அல்லது 280 ரூபாவென்று தொழிலாளர்கள் கோரிக்கைக்கு உச்ச வரம்பு விதித்து வருகின்றன. சில தொழிற்சங்கங்கள் கூட்டுக் கமிட்டியின் நடவடிக்கைகளிலிருந்து விலகி தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறு பணித்து வருகின்றன.

இன்னும் சில தொழிற்சங்கங்களோ, தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாகப் பாசாங்கு காட்டி தொழிலாளர் வர்க்கத்தின் முதுகில் குத்தி வருகின்றன. தொழிலாளர்களின் மெதுவாகப் பணிபுரியும் போராட்டத்தினால் தோட்டக் கம்பனிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தொழிலாளரின் சம்பள அளவு நிர்ணயிக்கப்படுவது வேதனைக்குரியது. வருடாந்தம் வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிக் கொண்டிருப்பதால் அரசாங்கம் தலையிட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். மலையக அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்கள் தமது சொந்த நலன்களைக் கைவிட்டு தொழிலாள வர்க்கத்தின் சுபிட்சத்திற்காக ஐக்கியப்பட வேண்டும் என்று மலையகத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க.

## இராணுவத் தளபதியின் சமாதானப் பேச்சு

புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தப்படாவிட்டால் சமாதானத்திற்கு எவ்வித சாத்தியமும் ஏற்படப்போவதில்லை. புலிகள் இயக்கம் பலவீனப்படுத்தப்பட்டால் மட்டுமே பிரபாகரன் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திற்கு இணங்கி, சமாதான மேசைக்கு வருவார் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரியான நிக்கலஸ் போர்ன்ஸை வாஷிங்டனில் சந்தித்துப் பேசிய போது குறிப்பிட்டார். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று கூறிய இராணுவத் தளபதி அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு தொடர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## யாழ். மக்களின் ஆதங்கம்

யாழ்ப்பாணத்தில் ஒரு போத்தல் தேங்காயெண்ணெய் கறுப்புச் சந்தையில் ரூபா 700க்கு விற்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். கூட்டுறவுச் சங்கக் கடைகளில் கியூ வரிசைகளில் நின்று வெகு குறைந்த அளவு பொருட்களையே பெற்றுக் கொள்ள முடிவதாக மக்கள் அங்கலாய்க்கின்றார்கள். கூட்டுறவு அதிகாரிகளுக்கும் கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகப் புள்ளிகளுக்குமிடையில் இருக்கும் கள்ளத் தொடர்பே இதற்கான காரணம் என்றும் மக்கள் கூறுகின்றார்கள்.

# புலிகள் மீதான நடவடிக்கை அப்பாவித் தமிழர்களைப் பாதிக்கக்கூடாது

## நாடெங்கும் பரந்து வாழும் மக்கள் கருத்துக் கணிப்பீட்டில் அபிப்பிராயம்

இலங்கையின் அமைச்சரவை கடந்த 6ஆம் திகதி கொழும்பில் கூடி, எழுந்துள்ள புதிய சூழ்நிலைகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு முன்னர் எமது பத்திரிகையின் ஆசிரியர் குழுவொன்று வடக்கிலும், கிழக்கிலும் கொழும்பிலும் பல்வேறுபட்ட மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து கொண்டது. பிரபாகரன் தனது பிறந்ததின உரையில் விடுத்த தனி நாட்டுக்கான யுத்தப் பிரகடனம் மற்றும் பாதுகாப்புச் செயலர் கோதபாய ராஜபக்ஷ மீது புலிகள் நடத்திய தாக்குதல் ஆகியவற்றின் பின்னர் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதா? இல்லையா? என்ற காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் எழுந்திருந்த வேளையில் எடுக்கப்பட்ட பேட்டிகளைக் கீழே தருகிறோம்.

**நடராஜா சிவகரன் (கிளிநொச்சி) :-**

"புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள். அந்த இயக்கத்தைத் தடை செய்தால், சமாதானப் பேச்சுவார்த்தைகளினூடாக இனப்பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணும் கதவுகளை அரசாங்கம் அடைத்து விட்டதாகவே அமைந்துவிடும். அரசில் அங்கம் வகிக்கும் இனவாத கட்சிகளின் வலியுறுத்தல்களுக்கு அடிபணிந்து அரசாங்கம் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக்கூடாது.

**சமரபால லியனகே (சட்டத்தரணி) :-**

புலிகள் இயக்கம்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியென்ற கூற்றினை நான் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கென அஹிம்சை வழியில் போராடிய அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து, நீலன் திருச்செல்வம் உட்பட பல மிதவாதத் தலைவர்களை எவ்வித நியாயமான காரணங்களுமின்றி கொன்றவர்கள் புலிகள். மாற்றுக் கருத்துக்கள் கொண்ட சகல தமிழீழ இயக்கங்களையும் வன்செயல் உத்திகள் மூலம் தடை செய்தவர்களும் அவர்களே! மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்கள் என்பதற்காக பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகளைக் கொன்றவர்களும் அவர்களே. சிங்களவர்களால் கொல்லப்பட்ட தமிழர்களை விட புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம். எனவே புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பே ஒழிய விடுதலை அமைப்பல்ல. யுத்தத்தோடு சம்பந்தப்படாத ஆயிரக்கணக்கான சிங்கள அப்பாவி மக்களைக் கொன்றவர்களும் புலிகள் தான். எனவே அந்த இயக்கத்தைத் தடை செய்வதே நியாயமானது.

**சர்மினி தணிகாசலம் (யாழ்.பல்கலைக்கழக மாணவி** :- பாதுகாப்புக் காரணங்களுக்காக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.):- யாழ்ப்பாண மக்களோ அல்லது வடக்கு, கிழக்கிலும், இலங்கையிலும் பரந்து வாழும் தமிழ் மக்களோ தமிழீழம் என்ற தனி இராஜ்ஜியம் கேட்கவில்லை. புலிகள் இயக்கத்தின் வன்செயல்களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் பயந்தே தமிழ் மக்கள் மௌனம் சாதிக்கிறார்கள். தனி இராஜ்ஜியத்தை நிறுவி, முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான பொருளாதார வளம் வடக்கு கிழக்கிலில்லை. மிளகாயையும் உருளைக்கிழங்கையும் வெங்காயத்தையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச்செலாவணியை எம்மால் சம்பாதிக்க முடியாது. அதிகாரம் கையிலில்லாத போது வரம்பு மீறிய புலிகள், அதிகாரங்களைக் கைகளுக்குள் எடுத்துக் கொண்டால்.... அப்பப்பா நினைக்கவே பயமாகவிருக்கிறது.

**ரஞ்சன் தியாகராஜா (மட்டக்களப்பு கல்லூரி மாணவன்) :-** வன்னிக் காட்டுக்குள் பதுங்கியிருந்துகொண்டு பிரபாகரனும் புலிகளும் நடத்தும் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்களே. இலங்கை அரசாங்கத்துடன் பல தடவைகள் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார்கள். நேர்மையும் விட்டுக் கொடுப்புமின்றி பல தடவைகள் புலிகள்தான் செயற்பட்டிருக்கிறார்கள். கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக யுத்தநிறுத்த காலத்தில் 95 சதவீதத்திற்கு மேலான அத்துமீறல்களில் புலிகள் இயக்கம் தான் ஈடுபட்டிருக்கிறதென்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்திருக்கிறது. யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த ஆரம்பகாலத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அமைதிக் காற்றைச் சுவாசித்தார்கள். அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படவில்லை. பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருக்கவில்லை, இயல்பு வாழ்வை இழந்து தமிழ் மக்கள் அவஸ்தைப்படுவதற்கு புலிகளே காரணம்.

**செய்யது முகமட் அபூபக்கர் (அம்பாறை விவசாயி) :-** பிரபாகரனும் புலிகள் இயக்கமும் தமிழ் மக்கள் சார்பாகப் பேசுவதாகக் கூறுகிறார்கள். நான் தமிழ் பேசும் கிழக்கு மாகாண முஸ்லிம் என்ற வகையில் எனது மதம் சார்பாகவும் எனது இனம் சார்பாகவும் பேசும் உரிமை எனக்குண்டு. வடக்கிலிருந்து சுமார் எழுபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் மக்களை ஒரே இரவில் விரட்டியடித்தவர்கள் புலிகளே. காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்களைக் கொன்றவர்களும் அவர்கள் தான். இப்போதும் கூட கிழக்கில் முஸ்லிம்களின் விவசாயக் காணிகள், சொத்துகள், மாட்டுப்பட்டிகள் போன்றவற்றை அபகரித்து வைத்திருப்பவர்களும் புலிகள்தான். இவர்கள் தமிழினத்தின் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறுவது பொய். தமிழை மட்டுமே பேசும் முஸ்லிம்களாகிய நாங்கள் தமிழ் பேசும் முஸ்லிம்களில்லையா? என்று பிரபாகரனைக் கேட்க நான் விரும்புகிறேன். இன்னும் பலர் கருத்து தெரிவிக்கையில், புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதென்பது அரசாங்கத்தைப் பொறுத்த விடயம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவதோ அல்லது அவசர காலச் சட்ட விதிகளை மேலும் வலுவாக்குவதோ அதுவும் அரசாங்கத்தைப் பொறுத்தது. ஆனால் அப்பாவி பொதுமக்கள் அநாவசியமான பாதிப்புகளுக்குள்ளாகாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையென்று கூறினர்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## உழைப்புக்கேற்ற ஊதியம் ஏன் கிடைக்கக்கூடாது.

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

**பெப்ரவரி** மாதத்துக்கு முன்னர் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை அரசு முன்வைக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டோடு ஒரு இறுதித் தீர்வை முன்வைப்பதிலேயே ஜனாதிபதி கூடுதல் கவனம் கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் சாத்தியமானதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கை இல்லையென்றும், தமிழீழத்துக்கான ஒரே வழி போர்தான் என்றும் கூறி சமாதான வழிமுறைகளிலிருந்து பின்வாங்கியுள்ளனர். அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கௌரவமான ஒரு அரசியல் தீர்வை வழங்கும் தன் திட்டத்தை முன் வைக்கவேண்டும், அதுவும் காலம் தாழ்த்தாமல் செய்ய வேண்டும் என்பது நியாயமானதுதான். அதேவேளை, புலிகள் போர் என்று ஒதுங்கிக் கொண்டால், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்திய மாகாணசபைத் திட்டம் போல் அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டமும் புலிகளால் நிராகரிக்கப்பட்டதாகவும், அதற்கு ஒத்துப்போகும் ஜனநாயகச் சக்திகளை புலிகள் கொலை செய்யும் சூழலும்தான் நீடிக்கும்.

ஆகவே போர் அழிவுகள் இந்த நாட்டில் முடிவுக்கு வரவேண்டுமென்றால் புலிகளை தீர்வுத் திட்டத்துக்குள் உள்ளடக்க வேண்டும் அல்லது அவர்களால் நாட்டில் பிரச்சினைகள் ஏற்படாது என்ற நிலைமை உருவாக வேண்டும். தீர்வுத் திட்டத்தை அரசு உடனடியாக முன்வைக்க வேண்டும் என்று கூறும் எந்தத் தரப்பும், அதை நோக்கிப் புலிகளைக் கூட்டிக் கொண்டு வரும் உத்தரவாதத்தையோ அல்லது புலிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கும் திட்டத்தையோ கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

எனினும் அரசு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. இதற்கிடையே புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதால் பயங்கரவாதத் தடைச் சட்டம் அல்லது கடுமையான சட்ட வரைவுகளைக் கொண்ட அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வரவுள்ளது. புலிகளைத் தடை செய்யவும் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டாலும், புரிந்துணர்வு ஒப்பந்தம், புலிகளுடன் பேச்சு என்று எதிர்கால நடவடிக்கைகளுக்குத் தடையாக அத்தடை இருந்துவிடக் கூடாது என்பது பற்றியும் அரசு கடுமையாக சிந்திக்கிறது.

அரசின் இந்தத் தர்ம சங்கடமான நிலையை எதிர்க்கட்சிகள் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முயன்றால், புலிகள் கூறியது போல், தமிழ் மக்களுக்கான தீர்வை மாறி மாறி வரும் எந்தவொரு சிங்கள அரசும் வழங்கப்போவதில்லை என்பது உண்மையாகி வீடும். எனவே இந்த சந்தர்ப்பத்தில் முடியுமான சகிப்புத்தன்மையோடு தென் பகுதி அரசியல் தலைமைகள், தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வொன்றைக்காண முன் வரவேண்டும்.

இது ஒருபுறமிருக்க, மலையகத் தொழிலாளர்கள் தொடர்ந்து நடத்திவரும், சம்பள உயர்வுப் போராட்டம் முடிவில்லாமல் தொடர்வது கவலை தருவதாக இருக்கிறது. தொழிற்சங்கங்களுக்கிடையில் இருக்கும் முரண்பாடுகளையும், காழ்ப்புணர்ச்சிகளையும் தூக்கிப்பிடித்துக்கொள்ளும் நேரம் இதுவல்ல. தொழிலாளர்கள் போராட்டம் நடத்தாமல் என்றைக்காவது ஒரு நாள், ஒரு ரூபாய் அதிகரிப்புச் செய்திருக்கிறீர்களா? என்பதை ஒவ்வொரு தொழிற்சங்கமும் சிந்திக்க வேண்டும். இப்போது மக்களே வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துகின்றனர். அந்தப் போராட்டத்துக்காக கட்சி, அரசியல் பேதங்களை மறந்து வீதியில் நிற்கும் மக்களின் முகங்களைப் பார்த்து பொது இணக்கப்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும். இதில் பிரிந்து நிற்பதும், குருடன் ஊருக்கு வழிகாட்டுவது போல் இழுத்தடிப்பதும், அந்த மக்களுக்குச் செய்யும் துரோகமாகத்தான் முடியும். இரண்டு வார காலத்துக்கு மேலாக அந்த மக்கள் வீதியில் நின்று போராடுகிறார்களே தவிர, அவர்களின் அடுப்படியில் நாயும், பூனையும் உறங்குகின்றன. மெதுவாக வேலை செய்யும் போது கூடப் பாதிப்பு கம்பனிக்கு மட்டுமல்ல, அவர்களுக்கும்தான் என்பதை ஒவ்வொரு தொழிற்சங்கமும் புரிந்து கொள்ளவேண்டும். அரசியல் பலம், அதிகாரம் எல்லாம் இருந்தும் தொழிற்சங்கமும் இந்த மக்களுக்கு விரைந்து நியாயம் பெற்றுக் கொடுக்க முடியாது என்றால் அப்படி ஒரு தொழிற்சங்கமும் தமக்குத் தேவை இல்லை என்ற இந்த மக்களின் கோபங்களின் நியாயங்களை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும். யாரெல்லாம் இதே மக்களிடம் கை நீட்டி சந்தா வாங்கினீர்களோ, உங்களுக்கெல்லாம் அந்தப் பொறுப்பு உண்டு. எனவே, உங்களிடமிருந்து பிச்சைப் பணம் வேண்டாம் எங்கள் உழைப்புக்கான ஊதியத்தைக் கொடுங்கள் என்ற தொழிலாளர்களின் கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கங்களும் உடனடியாகக் கவனத்தில் எடுத்து இந்த மக்களுக்கு நியாயமான தீர்வு உடனடியாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜனாதிபதி - பிரதமர் வெளிநாட்டு விஜயங்களும் புதிய அரசியல் சவால்களும்!

நரன்

**ஜனாதிபதி** மஹிந்த ராஜபக்ஷ அண்டை நாடான இந்தியாவுக்கும், பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்கா கிழக்காசியாவிலுள்ள இந்தோசீன நாடுகளுக்கும் உத்தியோக பூர்வ விஜயங்களை மேற்கொண்டிருந்த வேளையில், புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் வன்னியில் தனது பிறந்த நாள் உரையை நிகழ்த்தினார். ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரின் வெளிநாட்டு விஜயங்களும் இலங்கையின் சமாதானத்தோடும் யுத்தத்தோடும் சம்பந்தப்பட்டவையாக அமைந்திருந்தன. வழமையாக யுத்தப் பல்லவியையே பாடும் பிரபாகரன், மகாவம்ச காலத்திற்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் முடிச்சுப் போட்டுவிட்டு, தனித்தமிழ் இராஜ்ஜியத்திற்கான போர்ப் பிரகடனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்குமிடையில் போடப்பட்ட முடிச்சுதான் என்றாலும் இந்தப் பிரகடனம் வெளிப்படுத்தப்பட்டு 48 மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னதாக, யுத்த நிறுத்தத்தைப் புலிகள் இயக்கம் பின்பற்றுமென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். பிரபாகரனின் பிரகடனமும் தமிழ்ச்செல்வனின் 'ததிங்கிணதோம்' நிலைப்பாடும் வெளிப்படுத்தப்பட்டு நூறு மணித்தியாலங்கள் கழிவதற்கிடையில், பாதுகாப்புச் செயலாளர் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. எனவே பிரபாகரன் தனது யுத்த முனைப்பை முன்னெடுத்துச் செல்லப் போகிறார் என்பது மட்டும் சர்வ நிச்சயமானது.

ஜனாதிபதி தனது நான்கு நாள் இந்திய விஜயத்தின் போது இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகவும் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்குப் பின்னர், இலங்கை - இந்திய கடற்பரப்பில் இரு நாடுகளின் கடற்படையினர் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளனரென்ற செய்தி வெளியாகியுள்ளது. இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் தனிநாடு கோரி போராடும் இயக்கத்திற்கும் இலங்கையின் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடும் புலிகள் இயக்கத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக அஸாம் மாநிலப் பொலிஸார் தெரிவித்தனர். புலி இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பேர், அஸாம் தீவிரவாதிகளுக்கு அஸாமிலுள்ள அவர்களது முகாமில் ஆயுதப் பயிற்சி அளித்துள்ளனர் என்ற தகவலையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர். அத்துடன் அஸாம் தீவிரவாதிகளும் புலி இயக்கத்தவர்களும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டு வருவதாகவும் அஸாம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஸாம் மாநிலம், இந்திய - பர்மிய எல்லையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பர்மா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், கம்பூச்சியா ஆகிய நாடுகளிலிருந்து புலிகள் வன்னிக்கு ஆயுதங்களைக் கடத்தி வருவதாக இலங்கை மற்றும் சர்வதேசப் புலனாய்வுத் தகவல்கள் ஏற்கனவே அம்பலப்படுத்தியிருந்தன. கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி இராணுவத் தளபதி லெப்டினனட் சரத் பொன்சேகாவைக் குறிவைத்துப் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் தோல்வியில் முடிந்தது. இதன் பின்னர் இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தி வந்த சில கப்பல்கள் இலங்கைப் படையினரால் கடலில் வைத்து மூழ்கடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், இரு நாடுகளின் யுத்த சக்திகளுக்கெதிராகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது, கூட்டுக் கடற்படை ரோந்து போன்றவற்றில் இலங்கை - இந்திய நாடுகள் இணைந்து செயற்படுவதானது, இரு நாடுகளுக்குமே பயன்மிக்கதாக அமையும்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை சந்தித்து உரையாடிய போது.

லாவோஸ், வியட்நாம், கம்பூச்சியா ஆகிய மூன்று நாடுகளையும், இந்தோசீன நாடுகளென அழைப்பது வழக்கம். இந்த மூன்று நாடுகளும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக மூன்று தசாப்த காலங்களாகப் போராடி வெற்றி கண்டவை. கெரில்லாப் போராட்ட உத்திகளையும், மரபுவழிப் போராட்ட முறையையும் பயன்படுத்தி வெற்றிகண்டன. விடுதலையின் பேரால் ஆட்சியைக் கைப்பற்றிய கம்பூச்சியாவின் பொல் பொட், இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்களைக் கொன்று குவித்த சர்வாதிகாரியெனக் குற்றஞ்சாட்டப்பட்டார். கடைசியில் கைதாகி, நீதிமன்றில் நிறுத்தப்பட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கையிலேயே அவமானத்தோடு மரணித்தார். கம்பூச்சியாவின் பொல் பொட்டைப் போல, இலங்கையின் பொல் பொட் என்று பிரபாகரனைச் சிலர் வர்ணிப்பதுண்டு. இன்னும் சிலர், இலங்கையின் வடக்கு - கிழக்குப் பொல் பொட் என்றும் அவரை வர்ணிப்பதுண்டு. அது ஒரு புறமிருக்கட்டும்.

நீண்டகால யுத்தத்தால் சீரழிந்த இந்தோசீன நாடுகளிலுள்ள ஆயுத வியாபாரிகளிடமிருந்து, புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வன்னிக்குக் கடத்தி வருவதாக ஏற்கனவே தகவல்கள் புகைந்தன. தாய்லாந்தின் புகெட் துறைமுகம், புலிகளின் கடத்தல் தளமாக விளங்கியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இலங்கை அரசு எடுத்த தீவிர முயற்சிகளின் காரணமாகத் தாய்லாந்திலிருந்து ஆயுதங்களைக் கடத்தி வரும் முயற்சிகள் பெருமளவில் முறியடிக்கப்பட்டன. பல இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்காவின் இந்தோசீன நாடுகளுக்கான விஜயம் வெறுமனே இரு தரப்பு மற்றும் வர்த்தக உறவுகளைப் புதுப்பிப்பதற்காக மட்டுமல்ல, புலிகளுக்கு அங்கிருந்து ஆயுதங்கள் கடத்திவரப்படுவதைத் தடுப்பதற்கான ஒரு முயற்சியுமாகவும் அமைந்தது. இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் மதிப்பளிப்பதாக உறுதியளித்துள்ள இந்த இந்தோசீன நாடுகள், ஆயுதக் கடத்தலை முறியடிக்கவும் உதவி வழங்கப்படுமென்றும் உறுதியளித்துள்ளன.

பிரபாகரன் வன்னியிலிருந்து கொண்டு ஏகக் குரலில் போர்ப்பரணி பாட, ஜனாதிபதியும் பிரதமரும் அவரின் திராணியைத் தவிடுபொடியாக்கும் முன்முயற்சிகளுக்குத் தமது வெளிநாட்டுப் பயணங்களைப் பயன்படுத்திக் கொண்டனரென்றே கூற வேண்டும். இந்தப் பின்புலத்தில் தான் பிரபாகரன் முன்வைத்த யுத்த அறைகூவலின் தொடர் நிகழ்வுகளை ஆராய வேண்டியுள்ளது.

கடந்த ஏப்ரலிலிருந்து நவம்பர் இறுதிவரையிலான ஏழு மாத காலப் பகுதிக்குள் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த, நான்கு உயரதிகாரிகளைப் புலிகள் இலக்கு வைத்துத் தாக்கியிருக்கிறார்கள். இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகாவும் பாதுகாப்புச் செயலர் கோதபாய ராஜபக்ஷவும் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். மேஜர் பரமி குலதுங்கா, மேஜர் உப்புல் விஜயரட்ண ஆகியோர் புலிகளின் தாக்குதல்களுக்கு இரையாகினர். இதற்கு முன்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் முத்தலிப், மேஜர் மீடின் ஆகியோரும் கொல்லப்பட்டனர். இந்த நிலைமையில்தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் யுத்தத்துக்கும் இருமுனைகளில் முகங் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறதென்று அரசு கூறுவதை நாம் நியாயமற்றதெனத் தட்டிக் கழித்து விட முடியாது. இராணுவத் தளபதி மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலையடுத்தே விமானப் படையினர் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்தனரென்பது குறிப்பிடத்தக்கது. அப்பாவி மக்களுக்கும் புலிகளுக்குமிடையில் வேறுபாடுகளைக் கண்டறியும் திறமை, விமானக் குண்டுகளுக்கும் பல்குழல் துப்பாக்கிகளுக்கும் கிடையா. இதனைப் பயன்படுத்துபவர்களுக்கும் சில வேளைகளில் கண்மண் தெரிவதில்லை. இதனால், அப்பாவிகளும் பாதிக்கப்பட்டுள்ளனரென்ற உண்மையை நாம் மறுதலித்து விட முடியாது.

தொடர்ச்சியான பேச்சுவார்த்தை முயற்சித் தோல்விகளும், பிரபாகரனின் யுத்தப் பிரகடனமும், பாதுகாப்புச் செயலர் மீதான தாக்குதலும், தொடர்ந்தும் அரசு 'தலையைச் சொரிந்து' கொண்டிருக்கப் போவதில்லையென்ற

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## பஞ்சாப் பிரிவினையும் புலிகளின் தமிழீழ யுத்தமும்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, இலங்கையின் தனிநாட்டுக் கோரிக்கைப் பிரச்சினைக்கும் பஞ்சாபின் காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கைக்கும் அரசியல் தீர்வு காணப் பெருமுயற்சியெடுத்தார். இதன் விளைவு : சீக்கியப் பிரிவினைவாதிகளால் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்திரா காந்திக்குப் பின்னர், இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாகத் தனிநாடு கோரிப் போராடிய புலிகளை ஜனநாயக நீரோட்டத்துக்குள் கொண்டுவரப் பெருமுயற்சியெடுத்த ராஜீவ் காந்தி, புலிகளால் கொல்லப்பட்டார். 1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் திகதி இந்திரா காந்தி கொல்லப்பட்டார். 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். 1980களிலிருந்து 1990களின் ஆரம்பம் வரை நீடித்த காலிஸ்தான் பிரிவினைப் போராட்டத்தினால், பஞ்சாபில் மட்டும் இருபத்திரெண்டாயிரம் பேர் கொல்லப்பட்டனர். இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலப் போராட்டத்தினால் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்டோர் பலியெடுக்கப்பட்டனர். அதாவது, 1940களின் பிற்பகுதியிலிருந்து இன்று வரை, காஷ்மீர்ப் பிரச்சினையால் இறந்தவர்களின் தொகைக்கு இது சமமானது. காஷ்மீர்ப் பிரச்சினை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பிரதேச மோதலெனப் பொதுவாகக் கருதப்பட்டாலும், அதற்குள் இன வன்முறைகள் இழையோடுவதைக் காண முடியும். இந்திரா காந்தி கொல்லப்பட்டதன் விளைவு, காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கை வேரோடும் வேரடி மண்ணோடும் கிள்ளியெறியப்பட்டது. இன்று பிரபாகரன் தனிநாட்டுக் கோரிக்கைக்காக விடுத்திருக்கும் யுத்தப் பிரகடனமும் பாதுகாப்புப் படையினர், அரசியல்வாதிகள், மக்கள் மீது புலிகள் நடத்தும் தாக்குதல்களும் புலிகளின் இறுதி அத்தியாயத்தை எழுதுவதற்கான ஒரு முனைப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அரசியல் தீர்வுக்கு காலிஸ்தான் பிரிவினைவாதிகள் வந்திருந்தால், சீக்கிய மக்கள் அழிவுகளைச் சந்தித்திருக்க மாட்டார்கள். இந்திய மத்திய அரசுக்கும் பஞ்சாப் மாநில அரசுக்குமிடையிலான முரண்பாடும், சீக்கியப் பிரச்சினைக்கு ஒரு வகையில் வழிவகுத்தது என்பது உண்மைதான். ஆனால், பிரபாகரன் தனது இவ்வருட பிறந்த தின உரையில் "அறிவியலில் ஏற்பட்டு வரும் அதீத வளர்ச்சிக்கு, ஏற்ப சிந்தனையும் கருத்துக்களும், சித்தாந்தங்களும் மாற்றங்களுக்குள்ளாகி சமூகப் புறநிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன." என்று கூறியுள்ளா. பிரபாகரன் இந்தக் கூற்றைச் சரிவரப் புரிந்து கொண்டு, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களுக்கு நீதியான, கௌரவமான தீர்வொன்றைக் காண்பதற்குத் தனது பங்கைச் செலுத்தத் தவறினால், தனக்குத் தானே அவர் தன் புதைகுழியைத் தோண்டிக் கொண்டாரென்பதை எதிர்கால வரலாறு நிச்சயம் உறுதிப்படுத்தும்.

## ஊரிலிருந்து....



'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். வினைவிதைத்தவன்?' எண்டு மாஸ்டர் ஏதோ சொல்லவும் 'என்ன விஷயம் மாஸ்டர்' எண்டு கேட்டன். கல்விக்கூடங்கள் கல்வி அலுவலகங்களில புலிகளின்ட நடவடிக்கைகளை தடைசெய்யிற படை அதிகாரிகளிண்ட கவனம் சூட்டோடசூடாய் முந்தி பளையில இருந்த புலிகளிண்ட நீதிமன்றங்களுக்கு போய் வந்தவை மீதும் திரும்பியிருக்குது. அரச முழுக்கட்டுப்பாட்டில இருக்குற யாழில, நீதிமன்றங்களும் பொலிஸும் இயங்கத்தக்கதாக இருக்க புலிகளிட்ட பிரச்சினைகளையும் வழக்குகளையும் கொண்டு போனவை குறிச்சு விசாரணைகள் ஆரம்பமாகுதாம். ஏனென்டால் அப்படிப்பட்டவைதான் புலிகளுக்கு புகலிடம் வழங்கினம் என்டு ஒரு சந்தேகம் அவையளுக்கு எண்டார் மாஸ்டர். முதல் வரியை திரும்பவும் ஒருக்கால் வாசியுங்கோ.

# தயாராகிறது தகர்க்கும் திட்டங்கள்!


அலசுவது

**- மதியூகி -**

**புலிகளின்** தலைவர் பிரபாகரன் தனது கார்த்திகை மாத உரையில், சுதந்திர தமிழீழத்திற்கான ஒரே வழி போர்தான் என்று கூறுரைத்திருந்தார். அவ்வாறான நிலைக்கு இட்டுச் சென்றது புலிகளின் இயக்கத்திற்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளும், அதிருப்திகளும்தான் என்று புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தெரிவித்திருக்கின்றார். 2005ஆம் ஆண்டு கார்த்திகை உரையில் பிரபாகரன் தெரிவித்திருந்த போரும் இல்லாத சமாதானமும் இல்லாத வெறுமையான சூழ்நிலையானது புலிகளுக்கு பெறும் பின்னடைவையே தந்திருந்ததாகக் கூறியிருந்தார். அதேபோல் இவ்வருட உரையில், சமாதானத்திற்கான காலப் பகுதிகளிலே தமது உறுப்பினர்களும் தமிழ் மக்களும் அதிகமாகக் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனாலும் 2006ஆம் ஆண்டு தமது உறுப்பினர்கள் கொல்லப்பட்டு அதை புலிகள் ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பமானது 25 தொடக்கம் 50 வரையாக இருக்கும். ஆனால் புலிகளின் உத்தியோகபூர்வ தகவல்களின்படி 818 புலிகள் 2006ஆம் ஆண்டு, கார்த்திகை மாதத்திற்கு முன்னர் வரை படுகொலையாகியிருப்பதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கார்த்திகை 27ஆம் திகதி உரை நிகழ்த்திய பின்னர், 28ஆம் திகதி பிரபாகரன் தன் தளபதிகளோடு ஓர் அவசர சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். அதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமது அடுத்த நடவடிக்கைகள் அதிர்ச்சி வைத்தியமாக அமைய வேண்டும் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்தியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதன்படி அடுத்த தாக்குதல்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் விதமாகவும் தென் இலங்கையிலுள்ள முக்கிய இராணுவ தளங்கள், விமானத்தளங்கள் ஆகியவற்றை இலக்கு வைப்பதாகவும் இருக்க வேண்டுமென கூட்டத்தில் கலந்து கொண்ட பொட்டு அம்மான், பால்ராஜ் ஆகியோர் வற்புறுத்தியதாகவும் அறிய முடிகின்றது.

இதன் அடிப்படையில் புலிகளின் தளபதிகள், உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனமாற்றம், மற்றும் அரச படைகளிடம் சரணடைவது என்பன பிரபாகரனுக்கு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு ஒரு முடிவு கட்டியாகும் நிலையிலும் அரசியல் தீர்வொன்றின் மூலமாக வடக்கு - கிழக்கில்



ஜனநாயக சூழல் உருவாகுமிடத்தில் தன்னால் மக்களோடு இணைந்து, பணியாற்ற முடியாதென்பதாலும், ஒரே முடிவு போர்தான் என்று பிரபாகரன் கூறியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. புலிகளின் இறுதி முடிவு இதுவாகத்தான் இருக்கும் என்பதை கடந்த கார்த்திகை உரையில்தான் தெரிந்துகொண்டதாக ஆச்சரியப்பட்டவர்களின் அறியாமைக்காகவும், மடைமைக்காகவும் கவலைப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது.

கார்த்திகை 27ஆம் திகதி உரை நிகழ்த்திய பின்னர், 28ஆம் திகதி பிரபாகரன் தன் தளபதிகளோடு ஓர் அவசர சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

அதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமது அடுத்த நடவடிக்கைகள் அதிர்ச்சி வைத்தியமாக அமைய வேண்டும் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்தியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதன்படி அடுத்த தாக்குதல்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் விதமாகவும் தென் இலங்கையிலுள்ள முக்கிய இராணுவ தளங்கள், விமானத்தளங்கள் ஆகியவற்றை இலக்கு வைப்பதாகவும் இருக்க வேண்டுமென கூட்டத்தில் கலந்து கொண்ட பொட்டு அம்மான், பால்ராஜ் ஆகியோர் வற்புறுத்தியதாகவும் அறிய முடிகின்றது.

புலிகளின் இந்நிலை குறித்து தனது ஏமாற்றத்தை அன்ரன் பாலசிங்கம் மிகுந்த கவலையோடு கூறியிருக்கின்றார். ஆகவே, பெரும்பாலும் நான்காவது ஈழப் போர் என புலிகளால் வர்ணிக்கப்படும் மீண்டும் ஒரு போரானது, வடக்கு - கிழக்குக்கு வெளியான கொழும்பு, அநுராதபுரம், நாவல, பொலநறுவை, கணேமுல்லை ஆகிய பகுதிகளை தாக்கி அழிப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதே சந்தர்ப்பத்தில் முக்கிய பிரமுகர்களைக் குறிவைத்து தாக்குதல்கள் மேற்கொள்வதும் புலிகளின் பிரதான திட்டமாக வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் ஆரம்பமாகவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியாகவுமே டிசம்பர் - 01ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பித்தளை சந்தியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ மீது புலிகளினால் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர் குண்டு துளைக்காத காரைப் பயன்படுத்துபவர் என்று தெரிந்தும், அவரே முதல் இலக்காக இருந்தபடியால் 10 கிலோ வெடி மருந்துகளைப் பாவித்து அத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனாலும் கோத்தபாய ராஜபக்ஷ எதுவிதக் காயங்களும் இல்லாமல் உயிர் தப்பினார்.

ஆரம்பமே தோல்வியில் முடிந்ததால் புலிகளுக்குப் பின்னடைவையும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் மீண்டும் ஒரு அவப்பெயரையும் ஏற்படுத்தியுள்ளது. கோத்தபாய ராஜபக்ஷ மீதான தாக்குதலை வெறுமனவே ஜனாதிபதிக்கான அதிர்ச்சித் தாக்குதல் எனக் கருதிவிட முடியாது. ஏனெனில் கடந்த போர் நிறுத்தக் காலகட்டத்தில் மக்களின் பேயரால் புலிகள் தாக்குதல்கள் நடத்தியபோதும் அதற்கான எதிர்த் தாக்குதல்களை படைகள் நடத்திய போதும் அரசு உத்தியோகபூர்வமான பதில் அடியை, இவ்வருடம் ஏப்ரல் 25ஆம் திகதி கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் வைத்து இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தும் வரையில் மேற்கொள்ளவில்லை. இராணுவத் தளபதி மீதான தாக்குதலின் பின்பே விமானத் தாக்குதலை அரசு முதல் முதலில் மூதூரில் நடத்தியது என்று பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார்.

ஆகவே அரசாங்கத்திற்கு அதிர்ச்சியைக் கொடுப்பது மட்டுமல்லாமல், அரசின் பதில் தாக்குதல் நடத்தப்பட வேண்டும்; அத்தகைய ஒரு பதில் தாக்குதலை அரசின் போர்ப் பிரகடனமாகப் பிரசாரப்படுத்தி தமது தாக்குதலை தொடர்வதும் அதை நியாயப்படுத்துவதும் புலிகளின் திட்டமாக அமைந்திருந்தது. தனது சகோதரர் தாக்கப்பட்ட போதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலிகள் எதிர்பார்த்த விமானத் தாக்குதலையோ, வேறுவகையான தாக்குதலையோ, அன்றைய நாளில் நடத்தவில்லை. ஆனாலும் பிரபாகரன் போர் அறை கூவல் விடுத்துள்ள நிலையில் கோத்தபாய ராஜபக்ஷ மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் இனியும் புலிகளை நம்பமுடியாது. அவர்கள் சமாதானத்தின் மீதான நம்பிக்கையற்றவர்கள். எனவே புலிகளைத் தடை செய்ய வேண்டும். அவர்களுடன் போர் ஒன்றை நடத்துவதை விட, சமாதானத்தின் பேரில் புலிகளிடம் தென்னிலங்கை மக்கள் தொடர்ந்து ஏமாற முடியாது என்ற கருத்துக்கள் மேலெழுந்துள்ளன. இவை ஜனாதிபதி மீது ஒரு அழுத்தமாகவும் மாறியுள்ளது.

இக்கருத்துக்கள் சிங்கள பேரினவாதத்தின் கருத்துக்கள் என்று கூறினால், தமிழ் மக்களின் பெயரால் பிரபாகரனும் அவருக்கு சார்பாகவிருப்பவர்களும் கூறும் கருத்துக்களை தமிழ் இனவாத கருத்து என்று கூறவும் இடமுண்டு என்பதால், பிரபாகரனளவுக்கு அவசரப்பட்டோ, தென்னிலங்கை மக்கள் அளவுக்கு உணர்சிவசப்பட்டோ ஜனாதிபதி முடிவுகளை எடுக்க முடியாது. ஆனால், புலிகள் நடத்துகின்ற பயங்கரவாதத் தாக்குதல்கள், அதனால் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றங்கள் என்பவற்றை கவனத்தில் எடுத்து, புலிகளை மீண்டும் தடை செய்வது அல்லது அவசர காலச் சட்டவிதிகளைக் கடுமையாக்கி சில ஷரத்துக்களை இணைப்பதன் ஊடாக புலிகளைக் கட்டுப்படுத்துவது அல்லது நாட்டின் இறைமைக்குப் பாதகமாகச் செயல்படுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை கூட்டம் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்று வருகின்றது.

இக் கூட்டத்தின் முடிவில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அதன் பின்னரே நோர்வேயின் இலங்கைக்கான சமாதான தூதுவர் ஜோன் ஹென்சன் பௌர், கிளிநொச்சிக்கான பயணத்தை மேற்கொள்வது நல்லது எனவும் அரசு தெரிவித்துள்ளது. பெரும்பாலும் பௌரின் விஜயமானது புலிகளுக்கு எதிர்பாராத செய்திகளை வழங்குமென்று எதிர்பார்க்கலாம். அதே போல் நோர்வே தரப்பினருக்கு இலங்கை விடயத்தில் பெருத்த ஏமாற்றம் காத்திருக்கின்றது. ◎

## அதிரடி அய்யாத்துரை



**உங்களுக்கு** ஞாபகமிருக்குமோ தெரியாது. ஒரு தடவை ரெண்டெழுத் தாரின்ர முக்கிய உறுப்பினர் ஈரோஸ் பாலா சொன்னவர், உலக நாடுகள் வன்னியைத்தான் பார்த்துக் கொண்டிருக்காம்; அங்கதான் செய்தி இருக்காம். அதாலதான் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எல்லோரும் வன்னிக்கு ஓடி வருகினமாம் எண்டு. உதையேன் சொல்லுறன் எண்டால், நாட்டுக்கு வந்திருக்கிற பௌர், போன சனிக் கிழமையே கிளிநொச்சிக்குப் போக இருந்தவர். அவரை அரசாங்கம் தடுத்துப் போட்டுது. அது மட்டுமில்லாமல் தாங்கள் சொன்னாப்பிறகு போகலாம் எண்டும் சொல்லியிருக்கினமாம். அப்பிடியெண்டால் இத்தனை நாளும் யார் போகவேணும், எப்பப் போக வேணும் எண்டதுக்கெல்லாம் உந்த அரசாங்கம் தான் முடிவு செய்திருக்கு எண்டதை ஈரோஸ் பாலா எப்படி வசதியா மறந்த மாதிரி மறைச்சுப் பேசினவர் எண்டதை எங்கட சனம் இப்ப புரிஞ்சு கொண்டிருக்கினம். அரசாங்கம் விரும்பியிருக்காட்டில் ரெண்டெழுத்தார் கிளிநொச்சியில இருந்து வெளிநாட்டுக்கோ, வெளிநாட்டுக்காரர் வன்னிக்கோ போக முடியாதெண்டால் சமாதானத்துக்காக உந்த அரசாங்கம் எவ்வளவு விட்டுக் கொடுப்பைச் செய்திருக்கிறது பார்த்தியளோ எண்டு குழந்தைப் பிள்ளைத்தனமாக வாத்தியார் கேட்கிறார். எனக்கு அவரை நினைச்சு அழுறதோ சிரிக்கிறதோ எண்டு ஒண்டுமாத் தெரியுதில்லையுங்கோ...

**மலையகத்** தொழிலாளர்கள் தங்கட உழைப்புக் கேத்த ஊதியம் கிடைக்க வேணுமெண்டு தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகினம். அவை என்ன பாவம் செய்திச்சினமோ. அவைக்கு ஒரு ரூபா சம்பளம் அதிகரிக்க வேணுமெண்டாலும் அதுக்காகவும் அவை போராட்டம் நடத்தத்தான் வேண்டியிருக்கு. இப்ப தங்கட உழைப்புக்காக நாள் சம்பளம் முன்னூறு ரூபாவாகத் தரப்பட வேணுமெண்டு கேட்டு போராடி வருகினம். அவைக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று தொழிற் சங்கங்களும், அரசியல் கட்சிகளும் முயற்சித்தன. பிறகு காங்கிரஸ் கட்சியினர் சில முடிவுகளுக்குப் போய் முதலாளிமாருடன் போராடி இருநூற்றி ஐம்பது ரூபா வரை சம்பளத்தைப் .பெற்றுக் கொடுப்பதற்கு முடிவு கண்டிச்சினம். முன்னூறு ரூபா கேட்டால் இருநூறு, இருநூற்றி ஐம்பது ரூபா தான் கிடைக்கும் எண்டது தெரிஞ்சும் ஏழு முகத்தாருக்கு நல்ல பேரும், அரசியல் இலாபமும் கிடைச்சுடும் எண்டதுக்காக சில பேர் ஏழு முகத்தார் கண்ட இணக்கத் தீர்வை ஏற்றுக் கொள்ள முடியாதெண்டும், முன்னூறு ரூபாய் கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடருங்கோ எண்டும் சொல்லினமாம். ஒண்டாச் சேர்ந்து அமைச்சுப் பொறுப்பு ஏற்பினம். ஆனால் ஒருவர் ஒரு முடிவு எடுத்தால் அதில இலாபம் யாருக்கு எண்டு கணக்குப் பார்த்து முரண்படுவினம். எப்புடிப் போகுது பொலிரிக்ஸ் பார்த்தியளோ. இருநூற்றி ஐம்பதுக்கு மேலதிகமாகப் பெற்றுக் கொடுத்தால் தனக்கும் சந்தோசம்தான் எண்டு ஏழுமுகத்தார் பந்தை முன்னணிக் காரர் பக்கம் உருட்டி விட்டார். பந்து எந்தப் பக்கம் உருட்டப்பட்டாலும் பரவாயில்லையுங்க. கஷ்டப்படுகிற சனத்துக்கு ஒரு நல்ல தீர்வு கிடைச்சால் சரிதான். அது சரி, உந்த விஷயத்தில ஏன் அரச உயர் மட்டத்தில இருந்து இதுவரைக்கும் ஒரு பேச்சையும் காணயில்லை எண்டதுதானுங்கோ என்ர யோசனை எல்லாம்.

**ரெண்டெழுத்தார்** சண்டைபிடிக்கப் போகினம் எண்டு சொல்லிப் போட்டினம். கட்சிக்குள்ளையும் குழப்பத்துக்கு மேல குழப்பமாகக் கிடக்கு. உதுக்கு நடுவில தான் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் யானைக் கட்சித் தலைவர் ரொம்பவும் குழம்பிப்போய் இருக்கிறாருங்கோ. சமாதானத்துக்காகத்தான் அதிகாரத் தரப்போடை கூட்டு வைக்கிறம் எண்டு யானைக் கட்சி தன்னிலை விளக்கம் சொல்லியும் ரெண்டெழுத்துத் தலைவர், யானைக் கட்சியும், கதிரைக் கட்சியும் பேரினவாதத்துக்குள்ள இருந்து புறப்பட்ட பூதங்கள்தான் எண்டும், கூட்டெண்டது வெறும் பம்மாத்து எண்டும் சொல்லியிருக்கிறார்.

உதுக்குப் பிறகும் ரெண்டெழுத்தாரிட்ட நல்ல பிள்ளையாக நடிக்கலாம் எண்டு யானைக் கட்சித் தலைவர் யோசிக்கிறாரோ எண்டு கட்சியில இருக்கிற சில முக்கியஸ்தர்களுக்குள்ள குழப்பமாம். உப்பிடி குழப்பம் கட்சிக்குள்ள வட்டியும் குட்டியுமாக பெருகிறதாலை தான் ஆளுந் தரப்பு சமாதானத் தீர்வை விரைந்து முன்வைக்காட்டில் ஒப்பந்தத்தில் இருந்து யானைக் கட்சி பின்வாங்க நேரும் எண்டு ஒரு ஸ்டண்டை விட்டிருக்கார் எண்டு கட்சிக்குள்ள இருக்கிறவையே சொல்லினமுங்கோ. என்ன நோக்கத்துக்காக கூட்டுச் சேர்ந்தாரோ அது நிறைவேறாமல் பின்வாங்கினார் எண்டால், அதுவும் கட்சிக்குள்ள மேலுமொரு பிரச்சினையை உண்டு பண்ணுமே என்றும் யானைக் கட்சித் தலைவர் யோசிக்கிறாராம். உவரின்ர உந்தக் குழப்பங்களுக்கு தீர்வுகாண நாம என்னதான் அட்வைஸ் பண்ண முடியுமுங்கோ...


**அதிகாரமானவர்** அண்மையில அண்டை நாட்டுக்குப் போனவரெல்லோ. அதுல அண்டை நாடும் இலங்கையும் இணைந்து கடல் ரோந்து செய்ய வேணும் எண்டு கேட்டவராம். அவை அதை அடியோடை நிராகரிச்சுப் போட்டினமாம் எண்டதாலை அதிகாரமானவரின்ர விஜயம் படுதோல்வியாம் எண்டும் சொல்லிச்சினம். இப்ப அண்டை நாட்டின்ர கடற்படைத் தளபதி ஒரு அறிவித்தல் விடுத்திருக்கார். அதில இரண்டு நாடுகளும் இணைஞ்சு கடல் ரோந்து செய்யிறதெண்டு கூறியிருக்கிறார். இலங்கையின்ர உள் விவகாரங்களில தாங்கள் நேரடியாகத் தலையிடாட்டிலும், பிராந்தியத்தின் பாதுகாப்புக் கருதி உந்த நடவடிக்கையை எடுத்திருக்கினமாம். உதுதான் இராஜ தந்திரம் எண்டதை இனியாச்சும் சில முந்திரிக் கொட்டைகள் புரிஞ்சு கொள்ளுவினமோ தெரியல்லை. எப்பவும் ஒரு இறைமையுள்ள அரசாங்கம் இன்னொரு இறைமையுள்ள அரசினுடைய கவலைகளைப் புரிந்து கொள்ளாமலோ அல்லது பயங்கரவாதத்தின்ர எதிர் பார்ப்புகளை சாத்தியப்படுத்தும் விதமாகவோ ஒரு காலமும் தன்னுடைய நகர்வைச் செய்யாது எண்டது ஒரு பக்கமிருக்க, இன்னொரு நாட்டுப் பிரச்சினை எண்டதுக்கு அப்பாலை பிராந்தியப் பிரச்சினை எண்டதாலை, அண்டை நாடு எப்படிங்கோ அசால்ட்டா இருக்கும். உதில்லையுங்கோ பகிடி இலங்கை அதிகாரமானவரும் அண்டை நாட்டு அதிகாரமானவரும் சந்திக்கேக்க போட்டோ பிடிக்க வேண்டாம் எண்டு 'சிங்'கே சொன்னாராம் எண்டொரு செய்தியையும் இப்ப உலவ விட்டிருக்கினம். எப்புடித்தான் உவைக்கு உப்பிடியான செய்திகள் கிடைக்குதோ! எல்லாம் அவனுக்குத்தானுங்கோ தெரியும்.

**அவனவன்** சண்டை, சமாதானம் எண்டு நாட்டைக் குழப்பிக் கொண்டிருக்கேக்க ஒருவருக்கும் சொல்லாமல், கையில எந்த ஆயுதத்தையும் தூக்காமல் 'சிக்கன் குனியா' நாட்டுக்குள்ள புகுந்து ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டு திரியுதுங்கோ. மருந்து எடுக்க வைத்தியரிட்டப் போனால் அவர் 'சிக்கன் குனியாவை' ரொம்ப. நெருக்கமாகத் தெரிஞ்சவர் மாதிரி உடம்பு நோகுதோ, தலை பாரமா இருக்குதோ, களைப்பாக இருக்குதோ எண்டு சொல்லிப்போட்டு மருந்தைத் தந்து வீட்டில போய் ரெஸ்ட் எடுங்கோ எண்டிறார். ஏன் எண்டால் மருத்துவமனையில இடமில்லையாம் எண்டவர், மூண்டாவது கட்டிலில கிடக்கிறவர் ஒரு வைத்தியர் எண்டு சாதாரணமாகச் சொல்லுறாருங்கோ. உந்த 'சிக்கன் குனியா' நாட்டுக்குள்ள புகுந்து ரெண்டு மாசமாகுது. நுளம்பாலதான் பரவுது எண்டு சொல்லினமே தவிர நுளம்பை கட்டுப்படுத்தவோ, அழிக்கவோ சுகாதாரத் தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுத்த மாதிரித் தெரியயில்லையுங்கோ. மற்ற நாளில வந்து புகையடிப்பாங்கள், மருந்து தெளிப்பாங்கள். ஆனால் பாருங்கோ 'சிக்கன் குனியா' பரவுற காலத்தில உதில ஒண்டைத்தன்னும் சுகாதாரத் தரப்பு முழு மூச்சோடை செய்ய இல்லையே. உதப்பத்தி பொலி டிக்ஸ் பண்ணிற யாரும் வாய் திறந்த மாதிரியும் தெரி யல்லையுங்கோ. ஒருவேளை சினிமாவில பொலிஸ்காரர் வாற மாதிரி 'சிக்கன் குனியா'வே பாவம் பார்த்து போதுமெண்டு நிறுத்திக்கொண்டாப்பிறகுதான் புகை அடிக்கிற இயந்திரங்களோடையும், மருந்துகளோடையும் சுகாதாரத்துறையினர் கிளம்பப் போகினமோ...வெயிட் என்ட் சீ யுங்கோ...

# தீக்குச்சி

***தீபாவளித்*** திருநாள் என்றால் தமிழர்களின் வீடுகளில் சந்தோசமும் புதிய உற்சாகமும் தோன்றும். ஆனால் இந்தியாவில் சிவகாசி மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலைகளிலிருந்தும், தீப்பெட்டித் தொழில்சாலைகளிலிருந்தும் எந் நேரத்தில் துக்ககரமான செய்தி வருமோ என்ற கவலையும் பீதியும் இருக்கும். இந்த இரண்டு இடங்களிலும் நடக்கும் தீ விபத்துக்களால் பெரும்பாலும் சிறுவர்களே பலியாவார்கள். காரணம் இவ்வாறான தொழிற்சாலைகளில் சிறுவர்களே அதிகமாக தொழிலாளர்களாக இருப்பதால்.

தீப்பெட்டித் தொழிற்சாலையில் சிறுவர்களே பெரும்பான்மையான தொழிலாளர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒவ்வொரு குச்சியின் தலையிலும் ஒரு துளி எரி மருந்து. ஒரு தீக்குச்சி போதும் தீயின் சுவாலையைப் பேய் பிடிக்க வைத்துவிடும். ஒரு தீப்பெட்டிக்குள் ஐம்பது தீக்குச்சிகள் இருக்கும். என் சிறு பராயக் காலத்தில் யானைத் தீப்பெட்டிதான் பாவனையில் இருந்தது. சிறிய மரக்குச்சிகளின் தலையில் எரிமருந்துகள் ஏந்தி இருக்கும். இப்போது மெழுகுப் பேப்பர்களின் தலையில் எரிமருந்துகள். ஒரு தீப்பெட்டிக்குள் அடங்கிக் கிடக்கிறது தீக்குச்சிகள். தீப்பொறிகள் உரசும் வரை தீக்குச்சி சாந்த சொரூபி. உரசி விட்டால் தீக்குழந்தை. பெட்டியில் உள்ள ஐம்பது தீக்குச்சிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தடவையில் பற்ற வைக்க முடியுமா என்பது ஒரு போட்டி. சவாலாக ஏற்றுக்கொள்ள சிந்திக்க வேண்டும். தீக்குச்சிப் பிரச்சினை இல்லை, உரசும் தீப்பெட்டியும் பிரச்சினை இல்லை. ஆனால் நாம் ஒவ்வொரு தடவையும் குச்சிப் பிடிப்பதிலும், உரசுவதிலும் ஒவ்வொரு முறையும் சிறிய வித்தியாசங்களைக் கொண்டிருக்கிறோம். மனிதன் ஏன் ஒரே வேலையைக் கூட ஒரே மாதிரியாகச் செய்ய முடிவதில்லை.




நமது எண்ணத்தில், நமது செயற்பாட்டில் நமக்கு நம்பிக்கையும், நேர்த்தியும் இல்லை. நம்மை நாமே நம்பிச் செயல்பட முடியாத போது இன்னொருவர் நமக்கு நம்பிக்கையாக நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறோம். இந்து மதத் திருமண வைபவங்களில் ஒருமுறையிருக்கிறது. மணப்பெண் மாப்பிள்ளையின் வீட்டுக்கு முதன் முதலில் செல்லும் போது, மாப்பிள்ளையின் தாயார் பூஜை அறைக்குக் கூட்டிச் சென்று ஒரு குத்துவிளக்கைக் காட்டுவார். ஒரு தீப்பெட்டியைக் கொடுத்து மணப்பெண்ணை குத்துவிளக்கை ஏற்றச் செய்வார். அப்போது ஒரே தீக்குச்சியில் அந்த குத்துவிளக்கின் ஏழு திரிகளையும் மணப்பெண் ஏற்றிவிட்டால் அந்தக் குடும்பத்துக்கு சாமார்த்தியமான மருமகள் என்று நினைத்துக் கொள்வார்கள். இது ஒரு எழுதப்படாத சட்டம். ஐதீகமுமாகி விட்டது. அப்படி இல்லாவிட்டால் ஒரு குச்சிக்கு மேலதிகமாக எரிய விட்டால் அந்தப் பெண் சாமர்த்தியமில்லாதவள் என்று முதல் நாள் மாமியாரின் மனதில் ஏறி இருந்து கொள்ளும் மிருகம், அந்த மருமகளுக்கு வாழ்நாள் எல்லாம் நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கும். மாமியாரின் முதல் பரீட்சையை தீக்குச்சிகள் தான் ஆரம்பித்து வைக்கின்றன.

என்னைக் கேட்டால் தீக்குச்சிகளே தயவு செய்து மருமகள்களின் வாழ்க்கையை ஒளி வீசச் செய்யுங்கள். உங்கள் அவசரத்தில் வாழப் போகும் ஒருத்தியின் நிம்மதியை கொன்று வீசாதீர்கள்.




இதேபோல் புகைப்பழக்கம் உள்ளவர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். சிகரெட், சுருட்டு, பீடி என்று பெரும்பணத்தைக் கொடுத்து வாங்குவார்கள். ஆனால் அவர்கள் தீப்பெட்டியை மட்டும் கடன் வாங்குவார்கள். என்னவொரு முட்டாள்தனம். ஒரு தீப்பெட்டியை வேண்ட முடியாத உங்களுக்கு எதற்கு சிகரட்டும் புகைபிடிக்கும் பழக்கமும், அதுவும் 2006 டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து இலங்கையில் பொது இடங்களில் புகைப்பிடிப்பதும், மதுபாவனையும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டம் அமுலுக்கு வந்த நாளிலிருந்து என் நண்பர்கள் பலர் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிட்டுவிட்டார்கள். சிலர் விட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். எது எப்படியோ இனிமேல் என் கண்முன்னால் இன்னொருவரிடம் தீப்பெட்டி கேட்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

நண்பர்களே உங்களை நேரடியாக பிரச்சினை வந்து சந்திக்கும் வரையும், உங்களை நோக்கி விரல் நீட்டப்படும் வரையும் இன்னொருவரின் பிரச்சினைகளுக்குள் தலையிடாதீர்கள், உங்களுக்கு இருக்க வேண்டிய சுதந்திரத்தைப்போல் இன்னொருவரும் அவருக்குறிய சுதந்திரத்தை அனுபவிக்க அனுமதியுங்கள். உங்கள் வெளிப்பாடும், செயற்பாடும் ஒரு தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கட்டுமே. தீக்குச்சிகள் பெட்டிக்குள் உறங்கினாலும், அவை உரசப்படும் வரை நெருப்பைக் கக்குவதில்லை. நீங்களும் ஒரு தீக்குச்சி வாழ்க்கையை வாழ வேண்டாமா? கோபம், பொறாமை, எரிச்சல் எல்லாவற்றையும் உங்களுக்குள் இருந்து எடுத்து வீசுங்கள். ஒரு வெப்பம், கொள்கைக்காகவும் வாழ்வின் வெற்றிக்காகவும் உங்களுக்குள் இருந்து கொண்டே இருக்கட்டும்; அது தேவையான நேரத்தில் பிரகாசிக்கட்டும்.


தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைத் தொழிலாளர்களின் பிஞ்சிக் கைகள் அடுக்கி வைப்பதால் தான் தீக்குச்சிகள் அடங்கிக் கிடக்கின்றனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொண்டால் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள், அவர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கலாம் என்றெல்லாம் சில முதலாளி முதலைகள் நினைக்கிறார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குழந்தைகள் வடிக்கும் வியர்வை, சுரண்டப்படும் கொடுமை, பசி நிறைந்த வயிற்றின் பொருமல், எதிர்காலக் கனவுகள் என்பவற்றையெல்லாம் தீக்குச்சிகள் கண்டு நெஞ்சு பொறுக்காமல் பெட்டிக்குள் அடங்கிக் கொண்டாலும், உரசப்படும் போது தன் வெளிப்பாட்டை ஒரு சீறலில் காட்டிவிடுவதாகவே நான் நினைத்துக் கொள்வேன். தீக்குச்சிகள் தங்கள் துக்கங்களையும், கவலைகளையுமே சீறிக்கொள்வதனூடாக வெளிக்காட்டுகின்றன.

சிறுவர் தினங்களில் மட்டும் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி அக்கறையோடு குடல் தெரிய வாய் பிளந்து வம்பு கலந்த உரிமை பேசும் நல்லவர்கள், தந்தையை பறிகொடுத்துத் தவிக்கும் சிறுவர்களுக்காகவோ, அநாதரவான சிறுவர்களுக்காகவோ குழந்தைத் தொழிலாளர்களுக்காகவோ, கல்விக்காக ஏங்கும் சிறுவர்களுக்காகவோ, எதையும் செய்வதில்லையே! ஒரு தீப்பெட்டியும் அதன் குச்சிகளும் கொண்டிருக்கும் ஆவேசம் கூட குழந்தைகள் விடயத்தில் சமூகத்தில் எவருக்கும் இல்லை என்பதுதான் உண்மையில் கொடுமையிலும் கொடுமை.

ஆயிரம் விளக்குகளை வாங்கினாலும் ஒரு தீக்குச்சி தான் தலையை எரித்து ஒளியைக் கொடுக்கிறது. அப்படி இல்லாவிட்டால் அத்தனை விளக்குகளும் காட்சிப் பொருட்கள்தான். அத்தனை தீக்குச்சிகளும் தன் தலையை எரித்து நெருப்பு தரக் காத்திருப்பது போல் நாம் நமக்காக தலையை எரிக்கவேண்டாம். தன்நலம் பாராமல் நம் சமூகத்துக்காக, இன்னொரு மனிதத்துக்காக உதவிக்கரம் நீட்டுவோம். உண்மை அன்பைப் பரிமாறிக்கொள்வோம்.





## மலையாள மாந்திரீகம்

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும்.
வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

## எனது தனித்தன்மை என்ன

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

## இனி உங்கள் பிரச்சினை என்ன?

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே
என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரிக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 மு.ஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின்ச க்தியால் பேசும் மழலை**
மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானகோடி நன்றிகள்.

**ஜெர்மன் அன்பரின் மடல் மகளின் திக்குவாய் குணமாகியது**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**
பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**
தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பிரான்ஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயனம் வெற்றி**
அன்புக்கும் மதிப்பிற்குறிய ஐயா. வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஸ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்**
அன்புக்குறிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள் நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் குறியது பலிதம்**
மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறிந்திருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன் என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை**
மதிப்பு மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்த்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும். அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**கொழும்பு அன்பரின் மடல் அச்சொட்டான கைரேகை பலன்**
அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வாழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கண்டி அன்பரின் மடல்**
பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். தினமுரசில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாக கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை

**இனி உங்கள் மகிழ்ச்சிக்கு**
அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கபோவது இவையனைத்தும் ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ? தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான மகிழ்ச்சியான, குபேரவாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.

உலக மலையாள மாந்திரீக சக்ரவர்த்தி பேராசிரியர்
டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP


ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No- 162 KOTAHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137

FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com

எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.
No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.
Tel: 052-2222508

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அண்மையில் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டி கீழே தரப்படுகிறது.

# இந்தியா பிரிவினைக்கு ஆதரவு வழங்காது!



## பி.பி.ஸி.க்கு அமைச்சர் டக்ளஸ் பேட்டி

**கே** :- இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பான தற்போதைய சர்ச்சை குறித்து இந்தியத் தலைவர்கள் என்ன மாதிரியான கருத்துக்களை வெளியிட்டார்கள்?

*ப* :- இலங்கை - இந்திய - ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடகவுள்ளது. அதாவது, வடக்கு - கிழக்கு ஒரு அலகாக இருப்பதா அல்லது இரண்டாகப் பிரிந்திருப்பதா என்பதை சர்வஜன வாக்கெடுப்பினூடாக உறுதிப்படுத்துவதுதான் இந்தியாவின் நிலைப்பாடு. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களும் இக்கருத்திற்கு இணைவாகவே தன்னுடைய அரசின் கருத்தைக் கூறியிருந்தார். மக்களுடைய தீர்மானத்திற்கு இப்பிரச்சினையை விட்டு விடப்போவதாகவும் கூறியிருந்தார். மேலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதைத்தான் நடைமுறை யில் செயற்படுத்துவதாகவும் கூறினார்.

**கே** :- வடக்கு - கிழக்கு தொடர்பாக இலங்கை உயர் நீதிமன்றம் தெரிவித்த கருத்துகளுக்கு இந்திய அதிகாரிகள் தனிப்பட்ட முறையில், ஊடகங்களுக்கு தங்களுடைய கவலைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மீண்டும் வடக்கு, கிழக்கு இணைப்பை உறுதி செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதியை இந்திய அதிகாரிகள் வலியுறுத்தினார்களா?

*ப* :- அப்படியல்ல. இவ் விடயம் பற்றி இலங்கை அரசாங்கம்தான் தீர்மானிக்க வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அதே நேரத்தில் இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்பட்டால், அதில் தமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லையென்றும் அதைத் தாம் வரவேற்பதாகவும் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களும் தான் மக்களிடமே அதைத் தீர்மானிக்கும்படி விட்டுவிடுவதாகக் கூறியிருப்பதானது, இருதரப்புக்குமிடையில் ஒரு இணக்கப்பாடு காணப்படுவதைக் காட்டுகிறது.

**கே** :- தற்போது தேக்கமடைந்துள்ள இலங்கைச் சமாதான வழிமுறைகளை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து இந்தியாவும் இலங்கையும் தலைவர்கள் மட்டத்தில் ஏதாவது விவாதித்தார்களா?

*ப* :- இந்தியத் தலைவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கூறுகிறார்கள், ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு தான் தங்களுடைய தொடர்ச்சியான நிலைப்பாடு என்றும், பிரிவினைக்குத் தாங்கள் எந்த வகையிலும் ஆதரவு வழங்கமாட்டோம் என்றும், இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு அல்லாமல் ஒரு அரசியல் தீர்வாக, பேச்சுவார்த்தைக் கூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் தான் அவர்கள் தொடர்ச்சியான சந்திப்புகளில் தங்களுடைய நிலைப்பாடாக தெரிவித்திருக்கிறார்கள்.

**கே** :- இராணுவத் தீர்வு ஒரு தீர்வல்ல என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்ததாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் தொடர்ந்து நடைபெறும் வன்முறையினால் பொதுமக்கள் உயிரிழப்பது, குறிப்பாக படையினரின் பதில் தாக்குதல் நடவடிக்கையின் போது பொதுமக்கள் உயிரிழப்பது தொடர்பாக வெளிவந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்திய அதிகாரிகள் ஏதேனும் குறிப்பிட்டார்களா?

*ப* :- ஆம். பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி அவர்கள் கூடக் கூறினார், தான் பேச்சுவார்த்தையூடாகவே இப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாகவும், புலிகள் எந்தளவுக்கு வன்முறைகளை முன்னெடுத்தாலும், தான் தொடர்ந்து புலிகளுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தயாராக இருப்பதாகத்தான் தன்னுடைய கருத்துக்களில் வெளிப்படுத்தியிருந்தார். அதே நேரத்தில் இந்தியத் தரப்பில் கூறப்பட்டது இதுதான். தங்களுக்குக் கிடைக்கின்ற தகவலின் அடிப்படையில் இலங்கையில் நடக்கின்ற செயல்களால் மக்கள் பாதிக்கப்படுகின்ற படியினால் அவ்வாறான பாதிப்புகள் ஏற்படாத வகையில் பிரச்சினைகளைச் சுமுகமாக அணுகுமாறு கேட்டிருந்தார்கள். இது தொடர்பில் ஜனாதிபதி கருத்து தெரிவிக்கும்போது கூறியிருந்தார். புலிகள் சில இடங்களில் மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துகின்றபடியினால் அவ்வாறான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றது. தாங்கள் எதிர்காலத்தில் அவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

# இன்னொருவர் பார்வையில்

# பாதுகாப்புச் செயலாளர் மீதான தாக்குதல்; அம்பலமாகும் அந்தரங்கங்கள்!

***பாதுகாப்புச்*** செயலாளரின் நடமாட்டங்கள் குறித்து கொழும்பிலிருக்கும் புலி இயக்கச் செயற்பாட்டாளர்களுக்குத் தெரிய வந்தது எப்படி? கொழும்பிலுள்ள புலிகளின் வலைப் பின்னலைத் தகர்ப்பதற்குப் புலனாய்வாளர்கள் விடை காண வேண்டிய மிக முக்கியமான கேள்வி இதுவாகும். புலி இயக்கத்திற்காகச் செயற்பட்ட இராணுவ மேஜர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரைப் போன்று புலிகளுக்காகச் செயற்படும் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எம் மத்தியில் இருக்கக் கூடிய புலிகளுக்கு உதவி வரும் துரோகிகளின் ஆதரவுடனேயே கொழும்பு நகரில் சகல பயங்கரவாதத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத் தாக்குதல், துரோகிகளின் உதவி ஒத்தாசையின்றி நடைபெற்றிருக்க முடியாதென்றே நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். பல மாதங்களாக இத் தாக்குதல் பற்றி விசாரணை நடத்திய மாவட்ட நீதிபதியின் அறிக்கைக்கு என்ன நடந்ததென்ற முக்கியமான கேள்வியை இது எழுப்புகிறது. இந்த அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை? பெரிய மனிதர்களின் பெயர்களும் பெருந் தொகைப் பணமும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதால், முழு விடயங்களுமே மூடி மறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது உண்மையா?

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அங்கு பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், விமான நிலையத்தைச் சுற்றியும் விமான நிலையத்துக்குள்ளும் பாதுகாப்புப் படை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், இத் தாக்குதல் எவ்வாறு நடைபெற்றது? ஏன் நடைபெற்றது? என்பதே எழுகின்ற கேள்வியாகும். ஆனால் புலிகள் தமது பணியைக் கச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டார்கள். பணம் கைமாறியதாகவும், விமான நிலையத்தின் வரைப் படங்கள் மற்றும் வசதிகள் குறித்த விபரங்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. உயர் பாதுகாப்புப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுபவர்கள் பற்றி புலனாய்வுகள் நடத்தப்பட்டு, அதில் ஈடுபடுத்தக் கூடியவர்களை மட்டுமா பணியில் அமர்த்துகிறார்கள்? இந்தப் பாதுகாப்புச் சேவையாளர்கள் மந்தைக் கூட்டம் போல் சேர்க்கப்படுகிறார்களா? அல்லது வெறுமனே ஆட்சேர்க்கும் பணிக்கு அமர்த்தப்படுபவர்கள் போல் பணத்துக்காகச் சேர்க்கப்படுகிறார்களா? தனது சேவைகள் பற்றி அறிந்து கொள்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு, தனக்குச் சொந்தமாக ஏன் புலனாய்வு வலைப் பின்னலொன்றை வைத்துக் கொள்ளக் கூடாது? இதுவோர் அவசியமான தேவையல்லவா?

தளக் கமாண்டரிடம் பொறுப்பைக் கையளிப்பதே இலகுவான வழியாகும். சிவில் நீதிமன்றமொன்றில் தளக் கமாண்டர் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யலாம். ஆனால் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று எவ்வாறு நடைபெற்றதென்ற முக்கியமான கேள்விக்கு இது பதிலளிக்கப் போவதில்லை. தாக்குதல் தொடர்பான இரகசியப் பொலிஸ் அறிக்கை ஆணைக்குழு அறிக்கையெல்லாம எங்கே என்று கேட்பதற்கான உரிமை எமக்குண்டு. இந்த அறிக்கைகள் தொடர்பாகத் தகவலைப் பெறுவதற்காக பல வருடங்களாக பத்திரிகைகளைப் பார்த்தவர்கள் இருக்கிறார்கள். இது தொடர்பாகப் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்காகப் பத்திரிகைகளில் பல பத்தி எழுத்தாளர்கள் எழுதியும் இருக்கிறார்கள். பொது மக்களுக்கு இது தொடர்பான அக்கறையின்மை மிக அதிகமாகக் காணப்பட்டதால், இது தொடர்பாக தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்ள எவரும் அக்கறை எடுக்கவில்லை.



மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு.

பாதுகாப்புச் செயலாளர் மீது தற்கொலைத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதை இன்று நாம் காண்கின்றோம். இராணுவத் தளபதி மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதையும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்படப் பலர் கொல்லப்பட்டதையும் நாம் கண்டிருக்கிறோம். மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். பல அரசியல் தலைவர்களைப் பயங்கரவாதிகள் வெற்றிகரமாகக் கொலை செய்தமைக்கு பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களின் அப்பட்டமான திறமையீனமே காரணமென்று குற்றம் சாட்டப்படுகிறது. சிங்கப்பூர் உட்பட அபிவிருத்தியடைந்த நாடுகளில் புலனாய்வுப் பயிற்சி அளிப்பதற்கும், புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதற்கும் தொடர்ச்சியாகவே அழுத்தம் கொடுக்கப்படுகிறது. பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படும் பயிற்சிதான் என்ன? சில வருடங்களுக்கு முன்னர், முக்கியஸ்தர்களின் பாதுகாப்புக்காக வாகனத் தொடரணியில் செல்லும் மெய்ப்பாதுகாவலர்களுக்கு, 'நெருங்கிய பாதுகாப்புப் பயிற்சி' இந்தியாவினாலும் அமெரிக்காவினாலும் வழங்கப்பட்டது. மிக முக்கிய இராஜதந்திரிகளுக்குப் பாதுகாப்பு வழங்குபவர்கள் தொழில்சார் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இந்த வகையில் ஜனாதிபதிக்கும் ஏனைய முக்கிய இராஜதந்திரிகளுக்கும் பாதுகாப்பு வழங்குபவர்கள், தொழில்சார் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். வெறுமனே வேறு காரணங்களுக்காக அவர்கள் பாதுகாப்புச் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடாது.

கொழும்பிலுள்ள நிலைகள் மீது எத்தனை தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன? இத் தாக்குதல்களிலிருந்து நாம் ஏதாவது பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறோமா? நாம் எதனையும் கற்றுக் கொள்ளவில்லை. இத்தகைய தாக்குதல்களைத் தடுக்க முடியாமல் போனமைக்கு அல்லது யுத்தத்தில் ஏற்பட்ட பல பின்னடைவுகளுக்குக் காரணமானவற்றை கண்டறிவதற்கு பாதுகாப்புப் படையினர் முனைந்தார்களா? கொலன்னாவ எண்ணெய்த் தாங்கித் தாக்குதல், மத்திய வங்கித் தாக்குதல், விமானத்தளத் தாக்குதல், சர்வதேச விமான நிலையத் தாக்குதல் ஆகியவற்றில் புலிகள் வெற்றி பெற்றமைக்கான காரணங்களை ஆராய்ந்து பார்க்கப் பாதுகாப்புப் படையினர் தவறியது ஏன்? இந்த விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பமைச்சு, பாதுகாப்புப் படையினருக்கு கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறதா? அல்லது உயர் மட்ட மாநாடுகளில் மட்டும்தான் இந்த விடயங்கள் ஆராயப்பட்டனவா? தாக்குதல்களை எதிர்பார்த்துப் பந்தோபஸ்துப் படையினர் ஒத்திகைகளையும் திடீர் வேட்டைகளையும் நடத்தியிருக்கின்றனரா?

எமது வர்த்தகம் மற்றும் வாழ்வாதாரத்திற்கு நாம் முற்று முழுதாகத் தங்கியிருக்கும் கொழும்புத் துறைமுகத்தின் நிலைமை என்ன? அண்மையில் புலிகளின் தாக்குதலொன்று கைவிடப்பட்டமைக்குக் கொந்தளிப்பான காலநிலையே காரணமென்பதால், எமக்குப் பெரும் அதிர்ஷ்டம் கிட்டியது. பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து துறைமுகத்தைப் பாதுகாப்பது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு துறைமுகப் பந்தோபஸ்து தொடர்பான சில வெளிநாட்டுப் பாதுகாப்பு நிபுணர்களை சில வருடங்களுக்கு முன்னர் நாம் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளவில்லையா? எமது துறைமுகப் பாதுகாப்புக்குத் தேவையான ஒழுங்குகளை அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். நாம் புலிகளின் தாக்குதல்களை எதிர்பார்த்து அவற்றை முறியடிக்க முனைய வேண்டும்.

**இலங்கை வெளிவிவகார அமைச்சின் முன்னாள் அதிகாரியான கே.கொடகே என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. "பாதுகாப்புச் செயலாளர் மீதான தாக்குதலும் துரோகிகள் மீதான தாக்குதலும்" என்ற தலைப்பில் இக் கட்டுரை, கொழும்பிலிருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' ஆங்கிலத் தினசரியில் கடந்த நான்காம் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்தது.**

துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சக்தி நிலையங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், கொலன்னாவ பெற்றோலியத் தாங்கிகள், ஜலசக்தி நிலையங்கள், நீர்த் தேக்கங்கள் ஆகியவற்றிற்கு இருக்கக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து அதிகாரிகள் ஆராய்ந்துள்ளார்களென்று நம்பப்படுகிறது. அமெரிக்காவில் நடைபெற்றது போல் சில அச்சுறுத்தல்கள். சிந்தித்துப் பார்க்கக்

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல்



கூடியவையாகவும் சில சிந்தித்துப் பார்க்க முடியாதவையாகவும் இருக்கின்றன. ஆனால் எதிர்பார்க்கக் கூடிய சகல தாக்குதல்களின் சாத்தியங்களையும் அதனை முறியடிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அதிகாரிகள் இயன்றவரை மேற்கொண்டுள்ளனரா? இது தொடர்பாக ஆராய வேண்டிய இன்னொரு விடயமுமுண்டு. அதுதான் ஆயுதக் கொள்வனவு. கடந்த ஆட்சிக் காலங்களில் பாதுகாப்பமைச்சுக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டன. இதனைக் கையாள்வதில் இருந்த நிலைமைகள் காரணமாக பாரிய பாதிப்புகளும் ஏற்பட்டன. ஆயுதக் கொள்வனவுமுறை ஊழல்களுக்கு வழிவகுத்துள்ளதால், தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முடியவில்லையென்று கருதப்படுமானால், வேறு பல நாடுகளில் இடம் பெறுவதைப் போன்று ஆயுதக் கொள்வனவுக்கென தனியான திணைக்களமோ அமைச்சோ நிறுவப்பட வேண்டும். கடற்படையில் ஏற்பட்ட ஊழல் தொடர்பாக நீதியரசர் சிராணி திலகரட்னவின் அண்மைய அறிக்கை, இது தொடர்பாக சிபாரிசு ஒன்றையும் முன்வைத்துள்ளது. கடந்த காலங்களில் 'பின்னடைவுகள்' என்று பாதுகாப்பமைச்சினால் வர்ணிக்கப்பட்ட பல, எமக்கு ஏன் துன்பங்களை ஏற்படுத்தின என்பதை பொதுமக்களாகிய எங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. இதைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டிய உரிமை எமக்குண்டு. சகலவையுமே மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. துரோகிகளுக்கு, மன்னர்கள் காலத்தில் வழங்கப்பட்ட மரண தண்டனை முறையை மீண்டும் அமுல்படுத்த வேண்டும். இந்த யுத்தத்தைப் பயன்படுத்தி, வர்த்தகம் செய்வோருக்கும் மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.


நன்றி : த ஐலண்ட்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

"உங்களுக்குச் சந்தேகமிருந்தா, நீங்க வேணும்னா அவர்கிட்டயே, போன் பண்ணிப் பேசுங்க..." என்றார் திரு.தர்மராஜ்.

"அதுக்குக் கேக்கலீங்க, அவர் சினிமாவ்ல நடிக்க முடியாதே... அப்படியிருக்கறச்சே, எப்படி உங்ககிட்டே நடிக்கிறேன்னு ஒத்துக்கிட்டாரு? சாத்தியமில்லாத விஷயத்தைச் சொல்லுறீங்களே சார்! This is Highly incredible!" என்று உரக்கக் கூவாத



குறையாகச் சொன்னேன் நான்.

திரு.தர்மராஜ் மெல்லிய புன்னகையை இதழோரம் இழையவிட்டவாறே, "இந்தப் பத்தாயிரம் ரூபாயை அட்வான்சா வாங்கிக்கங்க. அப்புறம், அண்ணனோட நீங்களே பேசி அவர் நடிக்கிறாங்கற விஷயத்தை Confirm பண்ணிக்கிட்டு, கதை எழுத ஆரம்பியுங்க..." என்று என் கையில் காசோலையைத் திணித்துவிட்டு திரு.மாருதிராவுடன் காரில் ஏறிப் போய்விட்டார்.

மறுநாள், அதிகாலையிலேயே நானே என் காரை ஓட்டிக்கொண்டு அன்புக்குரிய என் அண்ணனை அவர் இருப்பிடத்தில் சந்தித்து, "நீங்க படத்திலே நடிக்க ஒத்துக்கிட்டு, என்னைக் கதையெழுதச் சொல்லி தர்மராஜையும், மாருதிராவையும் என் வீட்டுக்கு அனுப்பிச்சீங்களாண்ணே!" என்று ஒரே மூச்சாகப் பேசி முடித்தேன்.

"ஆமாம். நான் நடிக்கப் போகிறேன்... சீக்கிரம் கதையை ரெடி பண்ணுங்க. ஏப்ரல் பதினாலாந் தேதி பூஜை!" என்று அவர் சொன்னதும் நான் வியப்பால் வாயடைத்துப் போனேன்.

ஏனெனில், என்னிடத்தில் படத்தில் நடிக்கப் போவதாகச் சொன்னவர், அப்போது முதலமைச்சராகக் கோட்டையில் கொலுவிருந்த என் அன்பு அண்ணன் திரு.எம்.ஜி.ஆர்.அவர்கள்.

"ஏண்ணே, நீங்க முதலமைச்சரா இருந்துக்கிட்டு சினிமாவ்ல நடிக்கறது..." என்று நான் சொல்வதற்குள், "சாத்தியமான்னு கேக்குறீங்களா? சாத்தியமாக இருக்கத் தொட்டுத்தான் உங்களைக் கதை எழுதச் சொல்றேன்," என்று பாசத்தோடு என் கன்னத்தை வருடினார் திரு.எம்.ஜி.ஆர்.

நான் வீடு வந்து சேர்ந்தேன். இரவு பகலாக உட்கார்ந்து எம்.ஜி.ஆர்.நடிப்பதற்காக ஒரு கதையை உருவாக்கினேன்.

பத்து நாட்கள் கழித்து, 'கதை தயார்.' என்று எம்.ஜி.ஆருக்கு டெலிபோன் செய்தேன்.

அன்று இரவு, அண்ணன் எம்.ஜி.ஆரின் நெருங்கிய உறவினரும், அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான திரு.குஞ்சப்பன் அவர்கள் என் வீட்டிற்கு வந்தார். "நாளைக் காலேல ஆறு மணி Flightல சி. எம். கூட நீங்களும் மதுரைக்குப் போகப் போறீங்க. விமானப் பயணத்திலேயே கதையைக் கேட்டுக்கறேன்னு சொன்னாரு. அடுத்த நாள் Flightல, நீங்க மதுரைலேருந்து மெட்ராஸுக்குத் திரும்பிடலாம். அதுக்கும் ஏற்பாடு பண்ணிவைச்சிருக்கேன்" என்று திரு. குஞ்சப்பன், தான் வந்த விஷயத்தை விளக்கிச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.


விமானத்திலேயே திரு. எம். ஜி. ஆருக்குக் கதையைச் சொன்னேன். அவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

திருநெல்வேலிக்கும் என்னை உடன் அழைத்துச் சென்றார். அன்று இரவு நெடுநேரம், நானும் அவரும் அந்தக் கதையைப் பற்றிப் பேசிப்பேசி மெருகேற்றினோம்.


படத்திற்கு 'உன்னை விட மாட்டேன்' - என்று தலைப்பு வைத்தால் நன்றாயிருக்கும் என்று சொன்னேன். எம். ஜி. ஆர். பொன்னிறம் மின்னப் புன்னகைத்தார். அவர் புன்னகைத்தால் 'சம்மதம்' என்று அர்த்தம்.

சென்னை வந்த பிறகு நான் திரைக்கதையை எழுதும் பணியில் ஈடுபட்டாலும், 'ஒரு மாநில முதலமைச்சர் சினிமாவில் நடிப்பதை, மத்திய அரசு எப்படி ஒத்துக் கொள்ளும்?' என்கிற சந்தேகம் என் சிந்தனை ஓட்டத்தை அவ்வப்போது தடை செய்து கொண்டுதானிருந்தது.

(தொடரும்.......)





# வழக்கு!



பிரபலப் பாடகி பியொன்சேவுக்கு எதிராகப் பாடகியும், பாடலாசிரியையுமான ஜெனிபர் அமர் தொடுத்திருந்த நீதிமன்ற வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பியொன்சே பாடியுள்ள 'Baby Boy' எனும் பாடலின் வரிகள் தனது 'Got a Little Bit of Love' ' எனும் பாடலில் இருந்து திருடப்பட்டுள்ளதாக அமர் வழக்குத் தொடுத்திருந்தார். எனினும், இது வேண்டுமென்றே நடந்த ஒரு சம்பவம் அல்ல என்பதே நீதிமன்றத்தின் தீர்ப்பாக அமைந்துள்ளது!




# தாயும் மகளும்

பிரபல பாடகியும், நடிகையுமான கெயிரா நைட்லி, தனது தாயாரால் எழுதப்பட்டுள்ள திரைக்கதைக்கு ஏற்ப, முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் நடித்து வருகின்றார்.

'த பெஸ்ட் டைம் ஒப் அவர் லிப்ஸ்' என்பதே இத்திரைப்படத்தின் பெயர்! அடுத்த வருடம் இதன் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகின்றன.

பிரபல பிரித்தானிய கவிஞரான 'டைலன் தோமஸின்' வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.




ஓரியன்ட் மாநிலத்தில் யுனைடெட் புரூட் கம்பனி காணி வாங்கிய தொகையை விட, மூன்று மடங்கு பணத்தை அங்கு மரம் வெட்டி விற்பனை செய்ததில் பெற்றுக் கொண்டது. அதே போல், சீனி மற்றும் பழங்கள் ஏற்றுமதி என சீனி ஆலையின் நிர்வாகம் உழைத்த பணத்தை அளவிட முடியாது.

சீனி ஆலையின் ஏகபோக வியாபாரத்தை எவரும் தட்டிக் கேட்கவும் இல்லை, வரி அறவீடுகளுக்கும் சீனி ஆலை உட்படவும் இல்லை. எவராவது எதிர்த்து நியாயம் கேட்டால், அவரை மிதித்துப் புதைத்துவிடும் நிறுவனமாகத் திகழ்ந்த சீனி ஆலையில், ஆறு மாத அறுவடைக் காலத்தின் கழுதை வண்டி ஓட்டுபவராகவும், மீதிக் காலத்தில் எடுபிடியாகவும் பிடல் காஸ்ட்ரோவின் தாத்தா காஸ்ட்ரோ ரஷ் வேலை செய்தார். அவரின் மகன் ஏஞ்சல் ரஷ் காஸ்ட்ரோ. பிடலின் தாத்தா காஸ்ட்ரோ ரஷ்ஷின் வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது பிடலின் தந்தையின் வாழ்க்கை. ஒருவேளை உணவுக்காக கரும்பை ருசிக்கும் அந்தப் பகுதி மக்களில் ஒருவராக காஸ்ட்ரோ ரஷ் வாழ்ந்தார். அந்தக் கஷ்டங்களுக்குள்ளிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவராக பிடலின் தந்தை வாழ்ந்தார்.

தந்தையுடன் கழுதை வண்டியில் ஒவ்வொரு கரும்பு வயலுக்கும் போய்வந்த ஏஞ்சல் ரஷ், கொஞ்சம் வண்டியை ஓட்டக் கற்றுக் கொண்டார். தந்தைக்குச் சுகயீனமான நேரங்களிலும், களைப்பான நேரங்களிலும், தானே கழுதை வண்டியை ஓட்டிக் கொண்டு போய் கரும்புகளை ஏற்றிக் கொண்டு தொழிற்சாலையில் ஒப்படைப்பார். பிடலின் தந்தை ஆறு அடி, இரண்டு அங்குல உயரமும், முரட்டுத்தனமான மீசை, தாடியும் உடையர். வேலை அதிகமாக இருந்த போதும், கூலியும், வாழ்க்கை நிலையும் உயராதது கண்டு ஏஞ்சல் ரஷ், தன் தந்தையுடன் விவாதித்தார். எனினும் ஏஞ்சல் ரஷ், கல்வி வாசம் இல்லாதவர்.

ஒவ்வொரு தடவையும், கரும்புகளை ஏற்றிக் கொண்டு வருவதற்காக, வயல்களுக்குப் போகும் போது, வயலில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தண்ணீருக்காகப் படும் அவலத்தைக் கண்டு கவலைப்பட்டார். சிலர் கரும்பைக் கடித்துத் தாகத்தைத் தீர்த்தனர். சிலருக்கு எத்தனை நாளைக்குத்தான் கரும்பைக் கடித்துத் தாகம் தீர்ப்பது என்ற வெறுப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏஞ்சல் ரஷ்ஷிற்கு ஒரு யோசனை வந்தது. வெயிலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தண்ணீர் தாகத்தைத் தீர்க்க ஒரு வழி செய்தால் என்ன என்று சிந்தித்தார். அடுத்த நாளே கரும்பு ஏற்றிவரப்போகும் கழுதை வண்டியில் எலுமிச்சைப்பழங்களைப் பிழிந்து அதில் சீனியையும் போட்டு விவசாயிகளுக்கு விற்கத் தொடங்கினார்.

கடுமையான வெயிலுக்குள் வேலை செய்து தாகத்தில் அலைந்த விவசாயிகளுக்கு இந்த எலுமிச்சைப் பானம் அமிர்தமாக இருந்தது. விரும்பி வாங்கினார்கள். மக்கள் விரும்பிக் குடிப்பதால் இதே போல் மக்கள் வேலை செய்யும் வேறு சில வயல்களுக்கும் எலுமிச்சைப் பானத்தைக் கொண்டு சென்றார். விற்பனை அமோகமாக நடைபெற்றது. வரவேற்பும், வருமானமும் பெருகவும் ஏஞ்சல் ரஷ் கழுதை வண்டி ஓட்டும் தொழிலைக் கைவிட்டார்.

கரும்பு வயல்களில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமல்லாது, எங்கெல்லாம் தொழிலாளர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் தாகம் தீர்க்கும் முயற்சியில் தனது தொழிலை விரிவுபடுத்தினார். குடிபானம் விற்கும் தொழில் மிகவும் இலாபமாகவும் மனத் திருப்தியோடும் நடைபெற்றது. பணம் வருகிறதே என்று ஓய்வு பெற்றுவிடாத ஏஞ்சல் ரஷ், மரங்களை வெட்டி மரத்தளபாடங்களையும் செய்து விற்கத் தொடங்கினார். அந்த வியாபாரமும் நன்றாகவே நடந்தது.

தொழில் வளர்ச்சி காரணமாகப் பானம், மரத்தளபாடங்கள் என்பவற்றினை ஏற்றுமதி செய்யுமளவிற்குத் தொழில் சீராக நடைபெற்றது. கிடைத்த வருமானத்தைக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக நிலத்தை வாங்கினார். இப்படியாக ஏஞ்சல் ரஷ் 1940 ஏக்கர் நிலங்களை வாங்கி கரும்பு மற்றும் பழ வகைகளையும் பயிரிட்டார்.

தருவது : எம். கேஷிகன்.


அதுவரை சிறிய குடிசையில் வாழ்ந்த ஏஞ்சல் ரஷ், மரங்களால் மாடி வீடு கட்டி நிலச்சுவாந்தாராக மாறினார். இப்படி வசதியும் வாய்ப்பும் பெருகிய போதும், அவர் ஏழை விவசாயிகளிடம் அன்பாகவும், அவர்களுக்கு எந்த வேளையிலும் உதவுபவராகவும் இருந்தார். வாழ்வுக்கும், காசுக்கும் சீனி ஆலையையே நம்பியிருந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஏஞ்சல் ரஷ்ஷின் பிரியமானவர்களாக மாறினார்கள். தான் வாங்கிய காணியில் ஆடு, மாடு, கோழி என்று ஒவ்வொரு பிரிவாக வளர்த்தார். அதற்கும் மேலதிகமாக சீனி ஆலையின் காணிகளிலும் ஆயிரக்கணக்கான நிலத்தை குத்தகைக்கு வாங்கி இவரே பயிர் செய்தார். அங்கு பயிரிடப்படும் கரும்பை அந்த சீனி ஆலைக்கே விற்றார். பணம் தேவைக்கு அதிகமாகப் புரண்டபோதும், ஒவ்வொரு வேலையையும் மிகக் கவனமாகச் செய்தார். அவர் சொன்னால் வேலை செய்ய ஆட்கள் காத்துக் கிடந்த போதிலும், தானே விவசாயிகளுக்கு உணவு கொண்டு போய்க் கொடுத்தார்.

குணத்தில் கோபக்காரராக இருந்தாலும், நேர்மையும் அன்பும் நிறைந்தவராக இருந்தார். ஓரியண்ட் மாநிலத்தில், மதிக்கப்பட்ட பணக்காரர்களில் ஒருவராக ஏஞ்சல் ரஷ் உருவாகிவிட்டார்.

கல்வி அறிவு இல்லாத ஏஞ்சல் ரஷ்ஷூ க்கு கிறிஸ்துவப் பாதிரியார்கள் சொல்லும் பக்திதான் பாடமாக இருந்தது. கேள்வி ஞானம் மிக்கவராகத் திகழ்ந்தார். தனக்குக் கல்வியறிவு பெற வாய்ப்பு இல்லாமல் போனதை நினைத்து சில சமயங்களில் வருந்துவார். இந்தக் கவலைகள் காரணமாக தனது பிள்ளைகளை நல்ல கல்வி அறிவு மிக்கவர்களாக வளர்க்கவேண்டும் என விரும்பினார்.

ஏஞ்சல் ரஷ், மேரி அங்கோடா என்பவரை சம்பிரதாயங்கள் இல்லாமல் துணைவியாக்கிக் கொண்டார். இவர்களுக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும் பிறந்தனர். இவரது முதல் மனைவியும் பிள்ளைகளும் இருக்கும் போதே, வீட்டு வேலைக்காக வந்த லீனாவையும் விரும்பினார். லீனாவுக்கு ஏஞ்சல் ரஷ்ஷை விட இருபத்தி ஐந்து வயது குறைவாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில், ஏஞ்சல் ரஷ்ஷின் முதல் மனைவி பிரிந்து வாழப் போவதாகக் கூறிவிட்டுப் பிரிந்து போய்விட்டார். ஏஞ்சல் ரஷ்ஷின் இரண்டாவது மனைவியாக லீனா ரஷ் கொன்சலஸ் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டார். இவர்கள் இருவருக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தனர். இவர்களில் முதல் மகனானப் பிறந்தவர் தான் பிடல் காஸ்ட்ரோ. பிடலுக்கு அடுத்து தற்போது கியூபாவின் ஜனாதிபதியாகப் பிடலால்



நியமிக்கப்பட்டிருக்கும் ரால் காஸ்ட்ரோ பிறந்தார். மற்ற ஐந்து பேரும் சகோதரிகள்.

பிடலின் பெரியம்மாவின் பிள்ளைகள் பிடலுடன் அன்பாக இருந்தனர். அவர்களில் மூத்தவரான பெட்ரோ எமிலியோ காஸ்ட்ரோ 1952 இல் அப்போதைய கியூபாவின் சர்வாதிகார ஜனாதிபதியாக இருந்த பாட்டிஸ்டாவை எதிர்த்துப் போராடியவர்.

(அசத்தல் தொடரும்)


# நெல்சன் மண்டேலா விடுதலை!

**தென்** ஆபிரிக்கத் (கறுப்பர் இன) தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் இருந்தபின் விடுதலை செய்யப்பட்டார்.

தென் ஆபிரிக்க நாட்டில் கறுப்பர்கள் (நீக்ரோக்கள்) பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். அங்கு வெள்ளையர்கள் சிறுபான்மையினர். ஆனாலும் ஆட்சி பீடத்தில் வெள்ளையர்களே அமர்ந்தார்கள்.

### மண்டேலா

கறுப்பர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக 'ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' என்ற கட்சி உருவானது. அதன் தலைவரான நெல்சன் மண்டேலா, இன வெறி பிடித்த வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப்



போராடினார்.

அரசாங்கம் கடுமையாகக் கெடுபிடி செய்ததால் 1961ஆம் ஆண்டில் மண்டேலா தலைமறைவானார். அவரைப் பிடிக்க வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. 1962ஆம் ஆண்டு மண்டேலா கைது செய்யப்பட்டார்.

தென் ஆபிரிக்க அரசைக் கவிழ்க்க முயன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. மண்டேலாவுக்கு 1964ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது அவருக்கு 46 வயது.

### தனிமைச் சிறை

பல ஆண்டுகள் அவரை தனிமைச் சிறையில் அடைத்து கொடுமை செய்தது தென் ஆபிரிக்க அரசாங்கம். மனைவியைச் சந்திப்பதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு கடுமையான காச நோய் ஏற்பட்டு, மரணத்தின் எல்லைக்கே சென்றார். அதனால் வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

### மன்னிப்பு கேட்க மறுப்பு

மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் எழுந்தது. ஆனால் தென் ஆபிரிக்க நிறவெறி ஆட்சியின் தலைவராக இருந்த போந்தா, மண்டேலாவை விடுதலை செய்ய மறுத்து வந்தார்.

மண்டேலாவை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி மண்டேலாவின் மனைவி தலைமையில் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் தொடர்ந்து நடந்து வந்தன.

'மன்னிப்புக் கேட்டால் விடுதலை செய்கிறோம்' என்று தென் ஆபிரிக்க அரசு ஆசை காட்டியது. ஆனால் மண்டேலா மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டார்.

### ஆட்சி மாற்றம்

தென் ஆபிரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக டெக்ளார்க் பதவிக்கு வந்தார். அவர் மண்டேலாவை விடுதலை செய்ய முன்வந்தார்.

இதனால் மண்டேலாவின் விடுதலை நாளை உலகமே ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தது.

மண்டேலா 11.02.1990 அன்று விடுதலை செய்யப்படுவார் என்று ஜனாதிபதி டெக்ளார்க் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

### 27 ஆண்டுகள் சிறை வாசம்

மண்டேலா 1962இல் சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார்.

உலக வரலாற்றிலேயே மண்டேலாவைப் போல இவ்வளவு நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது. விடுதலை பெற்றபோது அவருக்கு வயது 71.

மண்டேலாவை வரவேற்க உலகம் முழுவதும் ஏற்பாடுகள் நடந்தன. இந்தியா சார்பாக பிரதமர் வி.பி.சிங் தலைமையில் வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

### விடுதலை

தென் ஆபிரிக்க அரசாங்கம் அறிவித்தபடியே 11.02.1990 அன்று மாலையில் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

மண்டேலாவுடன் அவர் மனைவி



வின்னி கை கோர்த்தபடி சிறையில் இருந்து வெளியே வந்தார். சிறைச்சாலையின் வாசலில் ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் அவரை உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

ஏராளமான தொண்டர்கள் ஆபிரிக்கக் கொடியை அசைத்தபடி வரவேற்றனர். சிலர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மண்டேலாவும், அவரது மனைவியும் கூடியிருந்தவர்களை நோக்கி கையை உயர்த்தி வரவேற்பை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் மண்டேலாவை பொலிஸார் பாதுகாப்பாக கேப்டவுன் நகருக்கு அழைத்துச் சென்றனர்.

சிறைச்சாலையின் வாசலில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த டெலிவிஷன் மற்றும் புகைப்பட நிபுணர்கள் அவரைப் படம் எடுத்தனர்.

மண்டேலா விடுதலையான நிகழ்ச்சி தென் ஆபிரிக்க நாடு முழுவதும் டெலிவிஷனில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

### வி.பி.சிங் பாராட்டு

மண்டேலா விடுதலையானதும், பிரதமர் வி.பி.சிங், அவருக்குப் பாராட்டு தெரிவித்தார்.

மண்டேலா விடுதலையான சிறிது நேரத்தில் அவரிடம் பிரதமர் வி.பி.சிங் எழுதிய பாராட்டுக் கடிதம் கொர்டுக்கப்பட்டது. "உங்களது சுதந்திர போராட்டத்துக்கு இந்தியா என்றும் உறுதுணையாக இருக்கும்" என்று வி.பி.சிங் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

மண்டேலா விடுதலை செய்யப்பட்டதை உலகத் தலைவர்கள் பலர் வரவேற்றார்கள்.

கேப்டவுன் நகருக்குத் திரும்பிய மண்டேலா அங்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பேசினார். அவர் கூறியதாவது:-

இனவெறி ஆட்சியைத் தனிமைப்படுத்த சர்வதேச சமுதாயம் தொடர்ந்து பிரசாரம் செய்ய வேண்டும். என்னுடைய விடுதலை மட்டும் பேச்சுவார்த்தைக்குத் தேவையான அடித்தளம் ஆகாது.

நிற வேறுபாடு இல்லாமல் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புதான் நம் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தின் மீது வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்துக்கு முடிவு காண வேண்டும்.

கறுப்பர்களுக்குச் சம உரிமை கிடைக்க வேண்டும். அதுவரை போராடுவோம்.

- இவ்வாறு மண்டேலா கூறினார்.

### மண் குடிசையில் பிறந்தவர்

மண்டேலாவின் முழுப் பெயர் நெல்சன் ரோபிசலா மண்டேலா. நெல்சன் மண்டேலா என்றே பொதுவாக அழைப்பார்கள்.

1918ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி ஆபிரிக்காவில் உள்ள குலு கிராமத்தில் ஒரு மண் குடிசையில் பிறந்தார். இவரது தந்தை சோசா பழங்குடி மக்கள் தலைவர்.

மண்டேலா இளம் வயதில் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டே பள்ளிக்கூடத்தில் படித்தார். போர் புரியும் கலைகளையும் பயின்றார். 1941ஆம் ஆண்டு ஜோகன்ஸ்பர்க் சென்று பகுதி நேரத்தில் சட்டக் கல்வி படித்தார். ஒரு தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், எஸ்டேட் ஏஜெண்டாகவும் வேலை பார்த்தார்.

### திருமணம்

அப்போது நோமதாம் சங்கர் என்ற நர்ஸை திருமணம் செய்து கொண்டார்.

மண்டேலா ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு இருந்ததால் மனைவிக்கும், அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பின்னர் தென் ஆபிரிக்க அரசு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியைத் தடை செய்தது. மண்டேலா மீது வழக்குத் தொடரப்பட்டது.

5 ஆண்டுகளாக அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டு இருந்தபோது 1958ஆம் ஆண்டு வின்னி மடிகி லேனா என்பவரை மணந்தார். வின்னி, தலைவரின் கொள்கைகளுக்காகப் போராடி வந்தார்.

மண்டேலாவுக்கு முதல் மனைவி மூலம் 3 குழந்தைகள்; 2ஆவது மனைவி மூலம் 2 குழந்தைகள்.

உலக சமாதானத்துக்காக



மண்டேலா ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர் சிறையில் இருக்கும்போதே இந்திய அரசு 'நேரு சமாதான விருது' வழங்கியது. கணவர் சார்பில் வின்னி டெல்லிக்கு வந்து அந்த விருதைப் பெற்றார்.

### அதிபர் ஆனார்

மண்டேலாவின் தியாகம் வீண் போகவில்லை. 1994 மே 10ஆம் திகதி அவர் தென் ஆபிரிக்காவின் அதிபர் ஆனார்.

அவர் அதிபர் ஆனபின், 1998ஆம் ஆண்டு முதல் தென் ஆபிரிக்க பள்ளிகளில் தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத், உருது ஆகிய மொழிகளைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார். •

---





**அருவி** எப்பக்கத்திற்குரியது என்பதை கண்டறியும் முகமாக அவர்கள் இன்னும் முன்னேறிச் சென்றார்கள். அவர்களின் முயற்சியில் முன்னேற்றம் தெரிந்தது. தாங்கள் வெளிவருவதற்கு ஏதேனும் வழி முறைகள் இருக்கிறதா என்பதை அவர்கள் கண்டறிந்தார்கள். அருவியானது சுரங்கத்தின் முடிவிடத்தில் கடலுடன் கலந்தது. அவ்விடத்தில் கடற்கரையாதலால் அமெரிக்க கூட்டுப் படையினரின் நடமாட்டம் இருக்கவில்லை. ஆனாலும் சுரங்கத்தின் முடிவு வாயிலை கடந்து அமெரிக்கப் படையினர் முன்னேறிச் சென்றுவிட்டதால் மிகவும் அவதானமாகவே அவர்கள் காலடியினை எடுத்து வைக்க வேண்டியிருந்தது. ஆனாலும் வியட்கொங் இராணுவத்தினரிடம் போதிய இராணுவ தளபாடங்கள் இல்லாததால் அமெரிக்க இராணுவத்தினரை எதிர்ப்பது எப்படி என்று கடுமையாக யோசித்துக் கொண்டார்கள். சென்ற இராணுவ வீரர்களின் அறிவுறுத்தலின் படி வியட்கொங் இராணுவத் தளபதியும் அவர்களின்



இராணுவத்தினரும் வந்து சேர்ந்தார்கள். இராணுவத் தளபாடங்களுக்காக அவர் ரஷ்யாவை நாடினார். கடல் மார்க்கமாக ஆயுதங்களை கொண்டு வருவது இப்போது மிகவும் இலகுவாக அமைந்திருந்தது. கடற்கரைக்கு அண்டிய பகுதியில் மிகவும் மறைவாகவும் விமானத்தில் இருந்து பார்த்தால் கூட தெரியாதளவுக்கு மிகவும் நேர்த்தியாகவும் தங்கள் பாதுகாவலரண்களை அமைத்துக் கொண்டனர் வியட்கொங் இராணுவத்தினர். ஆனாலும் அவர்களின் கைக்கு அமெரிக்க இராணுவத்தினரை தாக்கவல்ல ஆயுதங்கள் கிடைக்கவில்லை. ஆயினும் ரஷ்யாவின் உதவியால் அவர்களின் பெரிய கப்பல் ஒன்று அவர்களை நாடி வந்தது.அக் கப்பலில் இருந்து பல நூற்றுக் கணக்கான ஆயுதங்கள் வந்திறங்கின. அத்துடன் ரஷ்யத் தயாரிப்பான PT â" 76 ரக யுத்தத் தாங்கிகள் மூன்றும் வந்திறங்கின. அத்துடன் ஆட்டிலரி வகையைச் சேர்ந்த தொலைதூர ஏவுகணை செலுத்திகளும் அதற்கான ஏவுகணை செ வந்திறங்கின. தங்களுக்காக இவ்வளவு தூரம் உதவிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஒருநாளும் எங்களால் மறக்கவும் முடியாது அத்துடன் மறக்கவும் கூடாது என்று அடிக்கடி வியட்கொங் இராணுவத் தளபதி கூறி வந்தார். இக் கருத்து மற்றைய சிப்பாய்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்திருந்தது. தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளை எவ்வாறு தொடங்குவது என்று வியட்கொங் இராணுவத் தளபதி திட்டமிட்டார். அவ்வாறே அவர்களின் இராணுவப் படை முகாமின் வட மற்றும் தென் எல்லைகளில் ஆட்டிலரி எறிகணைகளை பொருத்தினார்கள். அவ்விடத்தில் காவலுக்காக பல இராணுவச் சிப்பாய்கள் நின்றிருந்தார்கள். அத்துடன் கிழக்கு எல்லையில் அதாவது கடல் பக்கத்தை பார்த்த படி PT â" 76 தாங்கி ஒன்றினையும் நிறுத்தியிருந்தார்கள். அதனை இயக்குவதற்காக கைதேர்ந்த இராணுவத்தினர் நின்றிருந்தார்கள். அவர்களை மீறி எவரும் வந்துவிடப் போவதில்லை என்பது வியட்கொங் தளபதிக்குத் தெரியும். தளபதியும் தன்னிடம் மிக நவீன ரக ஆயுதங்களைக் கொண்ட 5 பேரினை மெய்ப் பாதுகாவலர்களாக நிறுத்தி யிருந்தார். அவர்கள் எந்நேரமும் வியட்கொங் இராணுவத் தளபதியை விட்டு அகலாமல் இருந்தார்கள்.


அமெரிக்கர்களுக்காக உணவுத் பொருட்கள் போய்வரும் முக்கிய வீதி ஒன்பதாவது மின்ட்வே என்று அழைக்கப்பட்ட பாதையாகும். அப்பாதையைத் தகர்த்தால் அமெரிக்க இராணுவத்தினர் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொள்ள வேறு எந்த வழிமுறையும் இருக்கவில்லை. முதலில் இவர்களின் தொடர்புகளை நிறுத்த வேண்டும் என்று வியட்கொங் இராணுவத் தளபதி திட்டமிட்டார். அதன்படி அப்பாதையினை முற்றாகத் தகர்க்கும் முன் தங்கள் இராணுவ வாகனங்கள் சென்று வருவதற்கான மாற்றீட்டுப் பாதையினை உருவாக்கினார். அது காட்டுப் பாதை வழியாக சென்று மீண்டும் பாதையினை வந்தடையும் வகையில் இருந்தது. இப்பாதையானது வெளியில் இருந்து பார்ப்பதற்குத் தெரியாது. ஆனால் அவ்விடத்தை நன்கு பழகியவர்களுக்கு காணக் கூடியதாகவே இருந்தது.



தங்கள் சுதந்திரத்திற்கான போராட்டத்தை மிகவும் அவதானமாக பெப்ரவரி 7 ஆம் திகதி தொடங்கி வைத்தார் வியட்கொங் இராணுவத் தளபதி. அவர் முதலில் ஒன்பதாவது மின்ட்வேயில் பல குண்டுகளைப் புதைத்து வைத்தார் அக்குண்டுகளை தூர இருந்து இயக்குவதற்காக வயர்களையும் வைத்திருந்தார்கள். அனைவரும் தயாராக இருந்தார்கள். போருக்காக புதிய உத்வேகத்துடன் புதிய ரக ஆயுதங்களை கையாளும் மகிழ்ச்சியில் சிலர் இருந்தார்கள்.

அமெரிக்க இராணுவத்தினரின் பொருட்கொள்வனவு வாகனங்கள் அணி வகுத்து வருவதை அவாதனித்த அவர்கள் மிகவும் கலவரப்பட்ட முகத்தோடு காணப்பட்டனர். அவர்களின் கலவரத்தைப் போக்கி அவர்களுக்கு தைரியமூட்டினார் வியட்கொங் தளபதி. சரியாக எல்லா வாகனங்களும் பாதையில் ஏறி பாதையில் அழகாகச் சென்று கொண்டிருக்கும் போது மரக் கிளை ஒன்று எதேச்சையாக விழுவது போல் விழுத்தினார் வியட்கொங் இராணுவத்தினர். முன்னால் சென்ற வாகனங்கள் எல்லாம் நின்றன அதனால் பின்னால் சென்ற வாகனங்களும் தங்கள் வேலையை நிறுத்தின. அக் கிளையினை அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர் அமெரிக்க சிப்பாய்கள்.


(தொடரும்)



அமரர் போல வாழ்வேன், -என்மேல்
அன்பு கொள்ளை யாயின் ;
இமய வெற்பின் மோத, - நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன்.

**- சுப்பிரமணிய பாரதியார்**

# எஜமானே...



**பின்** என்ற விவசாயி தன் லாயத்தில் மிகச் சிறந்த குதிரைகளை வளர்த்து வந்தான். அவைகளுள் ஒன்று மிக அழகாகப் பளபளவென்று இருந்த கறுப்பு நிறக் குதிரைக் குட்டி. எல்லாக் குதிரைகளையும் அவன் நன்றாகப் பராமரித்தான். இருப்பினும், இந்தக் குட்டியிடம் சற்று அதிகப் பிரியம் இருந்தது அவனுக்கு.

அந்தக் கிராமத்தின் தலைமை அதிகாரி ஒரு குதிரையை வாங்க விரும்பினார். பளபளவென்றிருக்கும் அந்தக் கறுப்புக் குதிரையை பின்னின் லாயத்தில் அவர் பார்த்திருக்கிறார்.

அது ஒரு சிறந்த குதிரை. எனவே அதை வாங்க எவ்வளவு விலைக்குக் கொடுப்பாய்? என்று விவசாயிடம் கேட்டார். விவசாயிக்கு அந்தக் குதிரையை மிகவும் பிடிக்கும். தவிர, அது ஒரு குட்டி குதிரையாயிற்றே. விவசாயி பின்னுக்கு அதை விற்பதில் தயக்கம் இருந்தது. இருப்பினும், அதை விற்றால் கிடைக்கும் பணம் அப்போது அவனுக்கு மிகவும் தேவையாக இருந்தது. பேரம் பேசி முடித்த பிறகு குட்டிக் குதிரை அந்த அதிகாரிக்கு விற்கப்பட்டது.

அதிகாரி அந்தக் குட்டியை மிகவும் விரும்பியதால் அதற்கு அழகாகப் 'பிளாக் பியூட்டி' என்று பெயரிட்டார். அவர் எங்கு செல்வதானாலும் அதன் மீது ஏறிப் பெருமையாக சவாரி செய்வார். பிளாக் பியூட்டி முதல் தரமான குதிரை. மானைப் போல் மிக வேகமாக ஓடும். மனிதர்களிடம் நன்றாகப் பழகும். ஏறிச் சவாரி செய்ய மிக வசதியான, இனிமையான குதிரை என்று எல்லோரிடமும் மிகவும் பெருமையாகக் கூறிக் கொண்டார்.

பின் மீது பாசம் கொண்டிருந்த அந்தக் குட்டி குதிரை, அவர் தன்னை மற்றவருக்கு விற்றதில் சற்று ஏமாற்றமடைந்தது. இருப்பினும் புது முதலாளியை நேசித்தது. ஒரு பெருந்தன்மையான கனவான். பிளாக் பியூட்டியை மிக அக்கறையாகக் கவனித்துக் கொண்டார். எப்போதுமே அந்தக் குதிரையைப் புகழ்ந்து பாராட்டுவார். தான் சூட்டிய அந்தப் பெயரான பிளாக் பியூட்டி காதுகளில் இனிமையாக ஒலிப்பதாகக் கருதினார்.

ஒரு நண்பனைக் காண புது முதலாளி பிளாக் பியூட்டியின் மீது ஏறிச் சென்றார். இரவுப் பொழுதில் அவர் ஒரு விடுதியில் தங்கினார். குதிரைக்கு உணவு அளித்த பிறகு அதைப் பத்திரமாகக் கட்டி வைத்தார். அவர் விடுதியினுள் படுக்கச் சென்றார். நள்ளிரவில் ஏதோ புகை நாற்றத்தைக் குதிரை உணர்ந்தது. சற்று நேரத்தில் புகை அதிகமாயிற்று. விடுதியிலிருந்து புகை வருகிறது என்பதை உணர்ந்த அந்தக் குதிரை அங்குத் தீப்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்தது. பெரிய குரலில் கனைத்தது.

யாருக்கும் அதன் சத்தம் கேட்டதாகத் தெரியவில்லை. மிகச் சத்தமாகக் கனைத்தது. உடனே விடுதியில் ஆள் நடமாட்டமும் பேச்சுக் குரலும் கேட்டன. நெருப்பும் அணைக்கப்பட்டது. குதிரையின் கனைப்புச் சத்தம் கேட்டுக் கண் விழித்ததால் விடுதியைச் சேர்ந்தவர்கள் உடனே நெருப்பை அணைத்தனர். அன்றிலிருந்து அந்தக் குதிரையை எல்லோரும் புகழ்ந்தனர்; விரும்பினர். நண்பரைச் சந்தித்து விட்டுத் திரும்பிய புது முதலாளி, பிளாக் பியூட்டியின் அறிவைப் பெரிதும் பாராட்டி எல்லோரிடமும் அதைப் புகழ்ந்து பேசினார்.

## பாப்பா முரசு சிறுகதை

புது முதலாளியின் மனைவி நோய் வாய்ப்பட்டாள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்காவது அவள் வேறு இடத்தில் வசிக்க வேண்டுமென்று மருத்துவர் ஆலோசனை கூறினார். அதிகாரி முதலில் தன் குழந்தைகளையும், மனைவியையும் வேறு ஊருக்கு அனுப்பி வைத்தார். ஒரு மாதத்திற்குப் பிறகு அவரும் கிளம்பத் தயாரானார். பிளாக் பியூட்டியைச் செல்வந்தரான ஒரு நண்பருக்கு விற்க முடிவு செய்தார். அதிகாரியிடமும் அவருடைய குடும்பத்தாருடனும் பிளாக் பியூட்டி நெருங்கிப் பழகி விட்டது. அவர்களைப் பிரிய அதற்கு விருப்பமேயில்லை. ஆயினும், நிலைமையை உணர்ந்த குதிரை புது வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டது.

புது எஜமான் அதன் பெயரைப் 'சபான்' என்று மாற்றினார். அந்தப் புதுப் பெயர் பிளாக் பியூட்டிக்குப் பிடிக்கவில்லை. எஜமானரும் அவர் மனைவியும் குதிரை மீது அன்பும் அக்கறையும் காட்டவில்லை. அதற்கு இறுக்கமான கடிவாளம் பூட்டப்பட்டது. அந்தக் குதிரையால் தலையை நிமிர்த்தியவாறு தான் ஓட முடிந்தது. இறுக்கிப் பிடித்த கடிவாளம் அதற்கு வலியையும், வேதனையையும் அளித்தது. மிகவும் மோசமாக நடத்தப்பட்டதால் அது ஒரு முறை தன் எஜமானரான அந்தச் செல்வந்தரைத் தூக்கி எறிந்தது.

ஆத்திரமடைந்த செல்வந்தர் வேறு ஒருவருக்கு அக்குதிரையை விற்றார். இந்தப் புதிய எஜமானார் தன்னை நல்லமுறையில் பராமரித்துப் பாதுகாப்பார் என்று குதிரை நம்பியது. ஆனால், நிலைமை அப்படியிருக்கவில்லை. மாற்றுப் பெயராக அவர் அதை 'பிளாக்கி' என்றழைத்தார். இதைச் சற்றும் விரும்பாத குதிரை மிகவும் வருந்தியது. அடுத்தடுத்து மாற்றி, மாற்றி இதைப் பலரும் வாங்கிக் கொண்டனர். யாரிடமும் குதிரைக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்கவில்லை.

இறுதியில் எல்லன் என்ற பெண்மணியின் கைக்குக் குதிரை வந்து சேர்ந்தது. அவள் புது முதலாளியான எல்லனின் தோழி. இதே போன்ற ஒரு குதிரையை அவள் தோழியின் வீட்டில் பார்த்திருக்கிறாள். இந்தக் குதிரை அதே பழைய பிளாக் பியூட்டியாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டாள். புது முதலாளியிடம் பணி புரிந்தவனும் பிளாக் பியூட்டியைக் கவனித்துக் கொண்டவனுமான பழைய குதிரைக்காரனை வேலைக்கு வைத்துக் கொண்டாள். அந்த ஆளைக் கண்டதும் பிளாக் பியூட்டிக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. முன்பு புது முதலாளியிடம் அதைக் கவனித்துக் கொண்ட அதே வேலைக்காரன் தான் அவன்.

இது அதே பழைய பிளாக் பியூட்டி தான் என்று வேலையாள் எல்லனிடம் கூறினான்.

தன் பழைய எஜமானனின் நண்பர் வீட்டில் தனக்குத் தெரிந்த ஆட்களோடு தங்குவதில் பிளாக் பியூட்டிக்கு நிம்மதியும் திருப்தியும் ஏற்பட்டது. எல்லன் என்ற அந்தப் பெண்மணியோடு பிளாக் பியூட்டி பல ஆண்டுகள் நிம்மதியாக வாழ்ந்தது.

# ஆத்திசூடி


## சித்திரம் பேசேல்

**நீ அலங்கார வார்த்தைகளால் உண்மையை மறைத்து பொய்யை மெய்போலக் கோட்பவர் நம்பும்படி பேசாதே.**

*எஸ். நிரஞ்சலா, கண்டி.* -ஔவையார்

# ஊனமில்லை

ஊனம் என்பது குறையுமல்ல!
உணராதவர் மனம்
மனமல்ல!
உடலில் எதுவும்
ஊனமில்லை,
ஊனம் - பார்வையில்தான்!
போதிமரமில்லை எனில்
புத்தர் மனம் ஊனம் தான்!
மீதி மரங்கள்
இல்லையெனில்
பூவுலகே ஊனம் தான்!
மனவளர்ச்சியில்
ஊனமிருந்தால் என்ன?
மனச்சாட்சியில் ஊனமில்லை!
கண்களில் ஊனமிருந்தால்
என்ன?
கற்பனையில் ஊனமில்லை...!



கைகளில் ஊனமிருந்தால் என்ன?
ஈகையில் ஊனமில்லை!
காலில் ஊனமிருந்தால்
என்ன?
நடத்தையில் ஊனமில்லை!
செவிகளில் ஊனமிருந்தால்
என்ன?
செய்கையில் ஊனமில்லை!
வாயில் ஊனமிருந்தால் என்ன?
புன்னகையில் ஊனமில்லை!
ஊனம் என்பதை
மறந்துவிட்டால்
உலக வாழ்வே சொர்க்கமாகும்!
காணும் கண்களில்
ஊனம்வந்தால்
காண்கின்ற காட்சியிலே ஊனம் வரும்!

# அதிசய உலகம்

## ஒரு முட்டையிட ஒரு நாள்...

**வட** அமெரிக்கா கண்டத்தில் காணப்படும் கனடா வாத்துக்கள், நீர்க்கோழிகள் என்றழைக்கப்படுகின்றன. உண்மையில் இவை வாத்துகளை விடவும் நீர்க்கோழிகளை விடவும் உருவத்தில் மிகப் பெரியவை.

உடல் 20 முதல் 50 அங்குல நீளம் வரை இருக்கும். இறக்கையின் நீளம் மட்டும் அதிக பட்சம் 70 அங்குல நீளம் இருப்பதுண்டு. மற்ற வாத்துகளைவிட கனடா வாத்துகளின் கழுத்து மிக நீளமாக இருக்கும். பெரும்பாலும் கழுத்தும், தலையும் கறுப்பு நிறத்தில் அமைந்திருக்கும். இந்த வாத்து எப்போதும் சத்தமிட்டு கத்திக் கொண்டே இருக்கும். இதனால் இதற்கு சத்தமிடும் வாத்து என்றொரு பெயரும் உண்டு.



ஆறு, குளம் ஏரிக்கரையோரங்களில் இது அதிகமாக வசிக்கும்.

'முட்டாள் வாத்து' என்று பெயர் சூட்டியது கனடா வாத்துகளைப் பார்த்துத்தான் போலும்.

காரணம் எந்த இடத்திலாவது ஒரு சிறிய நீர் நிலை இருந்தாலும் அங்கே இது கூடு கட்டிவிடும். அது விமானம் கிளம்பும் இடமாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோல்ப் மைதானமாக இருந்தாலும் சரி அந்த இடத்தில் கேட்கும் இரைச்சல் சத்தம் பற்றிச் சிறிது கூட கவலைப்படாமல் கூடு கட்டி விடும். மனிதர்கள் வசிக்கும் இடமாக இருந்தால் கூட அதையெல்லாம் கண்டுகொள்வதில்லை. கூடு கட்டும் பணிக்கு ஆண் வாத்துக்கள் உதவியாக இருந்து அந்தப் பகுதியை வலம் வந்து கண்காணித்துக் கொண்டே இருக்கும்.


மற்ற வாத்துக்களைப் போல் இது அவ்வளவு சுலபமாக முட்டையிட்டு விடாது. ஒரு முட்டை இடுவதற்கு ஒரு நாள் கூட ஆகலாம். ஒரு பருவத்தில் 5 முதல் 7 முட்டைகளை இடும். அதே போல் குஞ்சு பொரிக்கவும் அதிக நாட்கள் எடுத்துக் கொள்கிறது. ஆம் 30 நாட்களுக்குப் பிறகே குஞ்சு பொரிக்கும்.

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுகள் தங்கள் அலகின் முனையில் இருக்கும் பற்கள் மூலம் முட்டையை துளைத்துக் கொண்டு வெளியே வரும். இதற்கு இரண்டு நாட்கள் வரை ஆகின்றன.

இப்படி பிறக்கும் குஞ்சுகள் உடனடியாக நீந்தவும் ஆரம்பித்து விடுகின்றன. தாய் - தந்தை வாத்துக்களின் உதவியுடன் குஞ்சுகள் நீந்தும். 9 வாரத்திற்குப் பிறகு இவை பறக்கவும் செய்கின்றன.

இலையுதிர் காலத்தின் போது கனடா வாத்துக்கள் தென்பகுதியை நோக்கிப் பயணப்படுகின்றன. குளிர் காலத்தின் போது கனடா பகுதிக்கு இவை பெருமளவு வந்து விடுகின்றன. இதனால் இவற்றுக்குக் கனடா வாத்து என்று பெயர் வந்தது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.12.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 672**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 670

**பரிசுக்குரியவர்:**
எஸ். எல். எப். நஸுஹா, 222/2, பழைய வீதி, காத்தான்குடி -01

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. பிரசாந்தி, 89, பாபாபதி இல்லம், 89, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | மர்ஸியா நாபிர், பாகிர் மாகார் ஒழுங்கை, மருதானை, பேருவளை. |
| கமிலஸ் கிருத்திகன், இல. 9, அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா. | அன்ஸ்க்கா தர்சனா றோச், ஆஸ்பத்திரி வீதி, மன்னார். |
| டி. ஆர்.ஜே. டிவின்சன், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு -15. | க. ஹரிணி, 19, பன்சல வீதி, இராகலை, ஆள்கரனோயா. |
| ஜே. திவாரீசன், மத்திய கொழும்பு இந்து வித்தியாலயம். | எம். ஆர். ரீஹா ஷாஹீன், 30, 3ஆம் குறுக்குத் தெரு, தில்லையடி, புத்தளம். |
| எம். ஜனார்த்திக்கா, இல 31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | எஸ். பவிசாந், 65, கல்வாலா வீதி, கம்பளை. |

# சில விடுகதைகள்

1. அவன் இல்லாவிட்டால் நானில்லை நான் இல்லாவிட்டால் அவனும் தான் ஏது? நாங்கள் யார்?
2. மாற்றங்களை அழித்து தானும் அழிவான் அவன் யார்?
3. அவன் அடிபட்டு மற்றவர்களுக்கு ஆனந்தம் தருவான் அவன் யார்?
4. காற்றுடன் பறப்பான் காலால் உதைத்தால் பறப்பான் அவன் யார்?
5. கொதிக்கும் எண்ணெயில் குளிப்பான் வாய்க்கு ருசியான பதார்த்தமாவான் அவன் யார்?
6. மேலும் கீழும் போவான் வாழ்க்கைத் தத்துவம் சொல்வான் அவன் யார்?
7. சின்னப் பெட்டிக்குள் சிப்பாய்ப்படை உரசினாலே போதும் உயிர் முடிந்து போவர் அவர்கள் யார்?
8. மழை நேரத்தில் அதிகம் பாடுவான் அவன் யார்?
9. எனக்கு மட்டும் தண்ணீரில் கண்டமில்லை நான் யார்?
10. ஓங்கி வளர்ந்தவனை ஒடித்துக் கடித்தால் வாயெல்லாம் இனிக்கும் அவன் யார்?

**விடைகள்**
1. உடல் - உயிர்
2. ரப்பர்
3. மத்தளம்
4. பந்து
5. அப்பளம்
6. ராட்டினம்
7. தீக்குச்சி
8. தவளை
9. மீன்
10. கரும்பு.


# தகவல் பெட்டி

## ஸ்பைடர்



'தெரபோசைடே' என்ற வகையைச் சேர்ந்த சிலந்திகளே உலகில் மிகவும் பிரமாண்டமானவை. பறவைகளை உண்ணும் இந்தச் சிலந்தி வகையில் ஆண்களை விடப் பெண் சிலந்திகளே கட்டுமஸ்தானவை. சூரினாம் என்ற லத்தீன் அமெரிக்க நாட்டிலுள்ள பரமரிபோ எனற இடத்துக்கு அண்மையில் சார்ள்ஸ் ஷெல்டர்மென் என்ற அமெரிக்கர் அந்த இனத்தைச் சேர்ந்த பெண் சிலந்தியொன்றினைப் பிடித்தார். இதன் எடை 4.3 அவுன்ஸ்கள். அதாவது 222 கிராம்கள் 1985ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் சார்ள்ஸ் ஷெல்டர்மன் இந்தச் சிலந்தியைப் பிடித்தார். இதன் கால்களின் நீளம் 26.7 சென்றிமீற்றர் (10.5 அங்குலம்) உடலின் நீளம் 10.2 சென்ரி மீற்றர் அல்லது 4 அங்குலம். உரோமங்கள் கொட்டியதால், 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தச் சிலந்தி இறந்து போனது.

## அசையும் இலக்கு




நிலையான இலக்குகள் மீது துப்பாக்கிச் சுடும் போட்டியைப் போல ஓடிக் கொண்டிருக்கும் இலக்குகளைக் குறி வைத்துச் சுடும் போட்டியும் நடைபெறுவதுண்டு. 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற இவ்வாறான போட்டியொன்றில் ஜேர்மனியைச் சேர்ந்த மான்பிரட் குர்சர் என்பவர் 590 புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்தார். கிரேக்கத்தின் ஏதன்ஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான பத்து மீற்றர் ஓடிக்கொண்டிருக்கும் இலக்கு மீது சுடும் போட்டியிலேயே இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

ஓடிக்கொண்டிருக்கும் இலக்கு, நிலையான இலக்கு ஆகிய இரண்டையுமே சேர்த்துக் குறி பார்க்கும் போட்டியொன்றும் உள்ளது. ஸ்பெயினிலுள்ள பெண்டபோ வெற்று என்ற இடத்தில் 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற இந்த பத்து மீற்றர் போட்டியில் குர்சர் 395 புள்ளிகளைப் பெற்று உலக சாதனையையும் நிலைநாட்டினார்.

## உற்பத்திச் செலவு


உலகிலேயே மிக அதிக உற்பத்திச் செலவுடன் தயாரிக்கப்பட்ட கார், மொர்சிடஸ் பெனஸ் CLK/LM என்று அழைக்கப்படுகிறது. விலையைக் கேட்டு மயங்கி விழுந்து விடாதீர்கள். வெறுமனே 15 இலட்சத்து 47 ஆயிரத்து 620 டொலர்கள் மட்டும்தான். வேண்டுமானால் அண்ணளவாக நூறு ரூபாவினால் பெருக்கிப் பார்த்தால். இலங்கையின் ரூபாய் பெறுமதியில் விலையைக் கண்டுபிடித்து விடலாம். இந்தக் கார் ஒரு மணித்தியாலத்துக்கு 320 கிலோ மீற்றர் அல்லது 198 மைல் வேகத்தில் ஓடக் கூடியது. 1987இல் உற்பத்தி செய்யப்பட்ட இந்தக் கார் 3.8 செக்கன்களில், 62 மைல் வேகத்தில் ஓடக்கூடியது. அதாவது ஸ்டார்ட் செய்ததுமே 3.8 செக்கன்களில் இந்த வேகத்தை எட்டிப்பிடித்து விடும். தகவலைக் கேட்டு வாயைப் பிளக்காதீர்கள்.



## ஒரே தடவையில்...

உயரத்திலிருந்து நீருக்குள் குதித்து தண்ணீருக்குள் அமிழ்ந்து போய் மேலெழும் போட்டியில் தாய்லாந்து நீச்சல் வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். தாய்லாந்தின் 'ஹொஹ் ரோ' என்ற இடத்தில் 2005ஆம் ஆண்டில் நீருக்கடியிலான உலக விழா பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது. ஏககாலத்தில் 722 பேர் இவ்வாறு குதித்துச் சாதனை படைத்தனர். 'ஹொஹ் ரோ'வில் நடத்தப்பட்ட இரண்டாவது விழா இதுவாகும். சூழல் மற்றும் கடல் வளங்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் இந்த விழா நடத்தப்பட்டது.





விக்ராந்த் - ஹனிரோஸ்
முதல் கனவு

# சந்தியா தடால் அடி


பால்சோறு இருக்கும்போது யாராவது பழஞ் சோறு கேட்பாங்களா? தங்கை வேடத்தில் நடிப்பீர்களா? என சந்தியாவிடம் கேட்டால் அவர் கேட்கும் எதிர்கேள்வி இது.

செல்வராகவன் இயக்கத்தில் 'இது மாலை நேரத்து மயக்கம்' படத்தில் நாயகியாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்த சந்தோஷத்தில் மிதக்கிறார் சந்தியா.

தெலுங்கில் 'அன்னாவரம்' படத்தில் தங்கையாக நடிக்கிறீங்களே, தொடர்ந்து அந்த வேடமேற்பீர்களா? என்றால் டக்கென்று முகம் சுருங்குகிறது சந்தியாவுக்கு.

'நான் தங்கையாக நடிக்கிற முதல் படமும் கடைசிப் படமும் அன்னாவரமாகத்தான் இருக்கும். இனி எந்தப் படத்திலும் அந்த வேடம் போடமாட்டேன்.

கூடல் நகர், தூண்டில், மாலை நேரத்து மயக்கம் உட்படப் பல படங்களில் ஹீரோயினாக நடிக்கிற எனக்கு, தினமும் நாயகி வாய்ப்பு நிறையத் தேடி வருது. அப்படியிருக்கும்போது தேவையில்லாமல் தங்கை வேஷத்தை ஒத்துக்கொள்ள நான் விபரம் தெரியாத பொண்ணுயில்ல' தெளிவாகப் பேசுகிறார் சந்தியா.



ஜெயம் ரவி - பாவனா
தீபாவளி

# சூர்யா நடிக்கும் 'வாரணம் ஆயிரம்'

கௌதம் மேனனுக்கு மட்டும் எங்கிருந்துதான் தலைப்புக் கிடைக்கிறதோ! ஒவ்வொரு படத்திற்கும் வித்தியாசமான டைட்டிலால் சினிமா வட்டாரங்களின் கவனத்தை ஈர்த்துவிடுகிறார்.

'மின்னலே', 'காக்க காக்க', 'வேட்டையாடு விளையாடு', 'பச்சைக்கிளி முத்துச்சரம்' படங்களைத் தொடர்ந்து ஐந்தாவதாகத் தான் இயக்கப்போகும் படத்திற்கு 'வாரணம் ஆயிரம்' எனப் பெயர் சூட்டியுள்ளார். வாரணம் என்றால் யானை என்று அர்த்தம்.

'காக்க காக்க' படத்திற்குப் பிறகு கௌதம் மேனனும் - சூர்யாவும் மீண்டும் இப்படத்தில் இணைகின்றனர். சூர்யாவுக்கு ஜோடியாக ஆண்டிரியா நடிக்கிறார். இவர் பச்சைக்கிளி முத்துச்சரம் படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக நடித்துள்ளார்.

ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் வழக்கம்போல தனது கூட்டணியைச் சேர்த்துள்ள கௌதம், ஒளிப்பதிவாளர் ரத்னவேலுவை மட்டும் புதிதாகச் சேர்த்துள்ளார்.

படத்தின் தொடக்க விழா படப்பிடிப்புடன் தொடங்கியது. சென்னை பார்க் ஷெரட்டன் ஹோட்டலில் நடந்த விழாவில் சூர்யா, ஜோதிகா, இயக்குநர் கௌதம்மேனன், இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விழாவிற்காக சிம்பிளாக அழைப்பிதழ் அடிக்கப்பட்டு முக்கிய வி.ஐ.பி.களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. அழைப்பிதழில் இருக்கும் ஸ்டில்களில் சூர்யாவின் கெட்டப்புகளில் பெரிதான மாற்றங்கள் இல்லாமல் சாதாரணமாகவே தோற்றமளிக்கிறார்.

தோள் பையை மாட்டிக்கொண்டு வெறித்த பார்வையுடன் ஓடுவது, ஒற்றைக் காலில் பூமியை ஓங்கி உதைத்து புழுதி கிளப்புவது போன்ற ஸ்டில்களைப் பார்க்கும்போது நிச்சயம் இது ஆக்ஷன் பிலிம்தான் என்பது புரிந்துவிடுகிறது.

ரசிகர்களே ஆக்ஷன் விருந்துக்கு தயாராகுங்க!



பரத் - பாவனா
வெயில்

# சினிமினி

• புனேவிலும் அதன் அருகில் உள்ள பகுதிகளிலும் சுமார் 8 நாட்களாக ரஜினிகாந்த், நயன்தாரா கலந்துகொண்ட ஒரு பாடல் காட்சியை 'சிவாஜி' படத்திற்காகப் படமாக்கியுள்ளனர்.

• ஷங்கர் தயாரிப்பில் பரத் நடித்து விரைவில் வெளிவரவுள்ள 'வெயில்' படத்தின் தெலுங்கு ரீ-மேக் உரிமை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விலை போயுள்ளதாம். இதனால் மகிழ்ச்சியின் உச்சியில் இருக்கிறார் பரத்.

• விஜய் நடிக்க 'ப்ரண்ட்ஸ்' அப்பச்சன் தயாரிப்பில் உருவாகும் 'அழகிய தமிழ்மகன்' படத்தில் அழகிய தமிழச்சியாக நடிப்பதற்கு சினேகா தேர்வாகியுள்ளார். இதனால் சந்தோஷத்தின் உச்சத்தில் இருக்கிறார் அம்மணி.

• சத்யராஜ் நடிக்க பரத்ஹன்னா இயக்கத்தில் உருவாகியுள்ள 'அடாவடி' படக் கதை, ஒரு சினிமா இயக்குநருக்கும், நடிகைக்குமான காதலை மையமாகக் கொண்டது. அதாங்க, சிம்பு - நயன்தாரா மேட்டரெல்லாம் இடைச்செருகலாகத் திணிக்கப்பட்டுள்ளதாம்!

• ஆளாளுக்கு சூப்பர் ஸ்டார் நாற்காலிக்குப் போட்டி போடும் நிலையில் அஜீத்தை நேரில் அழைத்து சூப்பர் விருந்து அளித்துள்ளார் ரஜினி.

## தன் மகள் 18 மொழிகளில், இயக்கும் அனிமேஷன் படத்தில் ரஜினி!

ரஜினியின் இரண்டாவது மகள் சௌந்தர்யா ரஜினிகாந்த், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அனிமேஷன் உட்பட பல்வேறு கம்ப்யூட்டர் வித்தைகளைக் கற்றுக் கொண்டார். அது முடிந்ததும் அப்பாவின் 'சந்திரமுகி' உட்பட சில படங்கள் தயாரான விதத்தைப் படமாக்கினார். சில படங்களுக்கு கிராப்பிக்ஸ் வேலைகளும் செய்து கொடுத்தார்.

இந்நிலையில் தற்பொழுது 75 கோடியில் ஒரு அனிமேஷன் படத்தை தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 18 மொழிகளில் படம் பிடிக்கத் திட்டமிட்டுள்ளார்.

ரஜினியின் நடை, உடை, பாவனைகள் பிரத்யேகமாகப் படம் பிடிக்கப்பட்டு அவர் குரல்வளத்துடனேயே இந்த அனிமேஷன் சித்திரத்தின் நாயகர் பாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'ஹரா' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கும் இந்த அனிமேஷன் படத்தை சௌந்தர்யா ரஜினியே அத்தனை மொழிகளிலும் இயக்கவுள்ளார். இதற்காக பல்வேறு நாட்டினைச் சார்ந்த சுமார் 250 கணிப்பொறி வல்லுநர்கள் சென்னை வரவும் ஏற்பாடுகள் நடக்கிறது. இந்தியாவின் பெரிய தொழில் நிறுவனம் ஒன்று இப்படத் திட்டத்திற்குப் பைனான்ஸ் செய்ய இருப்பதாகவும் தகவல்!



ரம்பா



தனுஷ் - பிரகாஷ்ராஜ்
திருவிளையாடல் ஆரம்பம்



# காதலருடன் மூன்று வருடமாக நிலா!



ஷக்தி - கௌரி மஞ்சால்
தொட்டால் பூ மலரும்

எஸ்.ஜே.சூர்யா ஜோடியாக 'அன்பே ஆருயிரே' படம் மூலம் தமிழில் அறிமுக மானவர் நிலா. தற்போது சிபியுடன் 'லீ' படத்தில் நடித்து வருகிறார். படப்பிடிப்பில் நிலாவுடன் வாலிபர் ஒருவரும் பங்கேற்கிறார். அவர் நிலாவின் காதலர் என்றும் இருவரும் சேர்ந்து வசிப்பதாகவும் கிசுகிசுக்கப்பட்டது.

இது குறித்து நிலாவிடம் கேட்டபோது அவர் கூறியதாவது :-

'என்னுடன் வரும் வாலிபர் பற்றி பலவாறாகப் பேசப்படுகிறது. சொந்த வாழ்வை தொழிலோடு கலக்கக் கூடாது. என் தனிப்பட்ட விஷயங்கள் பற்றி மற்றவர்கள் ஏன் கவலைப் பட வேண்டும். என் காதலருடன் நான் சேர்ந்து தான் வாழ்கிறேன். இதில் என்ன தவறு இருக்கிறது.

நியூயோர்க்கில் நானும் அவரும் ஒன்றாக வேலை பார்த்த போது சந்தித்தோம். பழகினோம். அவர் சஞ்சாபி. அமெரிக்காவில் கட்டுமான தொழில் செய்கிறார். கடந்த 3 வருடமாக நாங்கள் சேர்ந்துதான் வசிக்கிறோம். சில வருடங்கள் கழித்து அவரை நான் திருமணம் செய்து கொள்வேன்.

இது மாதிரி, திருமணத்துக்கு முன்பே ஒருத்தரையொருத்தர் புரிந்து கொண்டு வாழ்வது நாட்டில் விவாகரத்து எண்ணிக்கையைக் குறைக்கும். தமிழில் சிபியுடன் 'லீ' படத்திலும் பரத்துடன் 'கில்லாடி' படத்திலும் நடிக்கிறேன். இந்திப் படமொன்றிலும் நடிக்க கால்ஷீட் கொடுத்துள்ளேன்.

'ஜாம்பவான்' படப்பிடிப்பின் போது பிரச்சினைகள் உண்டு பண்ணியதாகச் செய்தி பரவியுள்ளது. அது வதந்திதான். படப்பிடிப்பில் இருந்தவர்களுக்கு உண்மை தெரியும்.

-இவ்வாறு நிலா கூறினார்.

# விக்ரமின் அடுத்தப் படம்



பிரபா - கார்த்திகா
பிறப்பு

விக்ரம் 'பீமா' படத்தில் நடித்து வருகிறார். இப்படம் முடிந்ததும் அடுத்து கலைப்புலி தாணு தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார். இதை இயக்குபவர் சுசி கணேசன். 'திருட்டுபயலே படத்துக்குப் பின் இந்தப் படத்தை அவர் இயக்குகிறார்.

விக்ரமின் பீமா படத்தை ஏ.எம்.ரத்னம் தயாரிப்பதாகச் செய்தி வெளியானது. பிறகு அப்படம் லிங்குசாமி கைக்குப் போனதாகச் சொல்லப்பட்டது. இப்போது மீண்டும் ஏ.எம்.ரத்னமே தயாரிக்கிறார்.

ஆந்திர திரையுலகில் தமிழ் டப்பிங் படங்களுக்கு ஏகப்பட்ட கெடுபிடிகள் சமீபத்தில் போடப்பட்டுள்ளன. இனி, 'ஜெயம்' ரவி, விஷால் ஆகியோர் நடிக்க அடுத்தடுத்து பூஜை போடப்பட்டு தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் தயாராகவிருக்கும் படங்களுக்கு ஐதராபாத்திலேயே பூஜைப் போட்டு படப்பிடிப்பை ஆந்திராவிலேயே பெரும்பாலும் நேரடி தெலுங்குப் படம் மாதிரி, நடத்திவிடும் உத்தேசத்தில் உள்ளார்களாம் தயாரிப்பாளர்கள்.

# ஆந்திராவில் பூஜை

# ஜோடி சேர நடக்கும் போட்டி

கோடம்பாக்கத்திற்கு பல பக்கங்களிலிருந்தும் அழகிகளின் படையெடுப்பு நாள் தோறும் நடந்த வண்ணம் இருக்கிறது. கேரளத்து பைங்கிளிகள், மும்பை ரசகுல்லாக்கள், கர்நாடகக் கட்டழகிகள், ஆந்திரா அஜந்தாக்கள் என அழகிகளின் அணி வகுப்பு பெருகிக் கொண்டே போகின்றன.

இதனால் களத்தில் உள்ள நடிகைகள் கலக்கத்தில் தன்னை தற்காத்துக் கொள்ளவும், மார்க்கெட்டில் தொடர்ந்து நிற்கவும் தங்கள் அள்ளக்கைகளின் வாயிலாக நட்சத்திரங்களை அணுகி வாய்ப்பு வேட்டைப் பெற்று வர அனுப்பி கொண்டிருக்கிறார்கள்.



உச்ச நட்சத்திரங்கள் (ரஜினி, கமல்) இளம் உச்ச நட்சத்திரங்கள் (விஜய், அஜீத், சூர்யா, விக்ரம், ஜெயம் ரவி) நட்சத்திர நடிகர்கள் (சிம்பு, மாதவன், விஷால், எஸ்.ஜே.சூர்யா, ஆர்யா, பரத், ஸ்ரீகாந்த், தனுஷ், ஜீவா, பிரசாந்த், சரத்குமார், சத்யராஜ், அர்ஜுன்) இளம் நாயகர்கள் (சிபி, ரமேஷ், பிரசன்னா) இப்படி நான்கு பிரிவுகளில் வைத்து நடிகர்களை மேற்படி நடிகைகளின் மானேஜர்கள் அணுகி வாய்ப்பு வாசல்களைத் தட்டி கொண்டிருப்பார்கள்.

இப்படி நான்கு பிரிவுகளில் வாய்ப்பு வேட்டை நடக்கிறது. இதில் முன்னணி நாயகிகளின் வேட்டை களம் இளம் உச்ச நட்சத்திரங்களுடன் தான் அதில் வாய்ப்புகள் வாய்க்கவில்லை என்றால் அடுத்த ரோலில் உள்ள நட்சத்திர நாயகர்களின் படங்கள் பிடித்து விடுவார்கள். இவர்களின் பார்வை இளம் நாயகர் பக்கம் திரும்புவதில்லை. இதே போல நடிகைகளிலும் சில பிரிவுகள் உண்டு. A) த்ரிஷா, அசின் அடுத்த கிரேட் B) ரீமாசென், பாவனா, மீராஜாஸ்மின், நயன்தாரா, ஸ்ரேயா, சதா, அடுத்து நமீதா, நிலா, பூஜா, கோபிகா, சினேகா, மல்லிகா கபூர் அடுத்து சமிக்ஷா, மாளவிகா, ஷூலா, கனிகா, கிரண்.

சரி இந்த திடீர் சர்வே எதற்கு என்று குழம்பி போயிடாதீங்க விஷயத்துக்கு வருகிறோம்.

'ஆழ்வார்' படத்தை அடுத்து தல அஜீத் நடிக்கும் படம் 'கிரீடம்'. இந்த பிரமாண்டமான படத்தில் தல அஜீத்துடன் ஜோடி சேர பெரிய போட்டியே கோலிவுட்டில் நடந்து கொண்டிருக்கிறது. அசின், த்ரிஷா, சதா, நயன்தாரா, ஸ்ரேயா, இலியானா, மல்லிகாபூர், மீராஜாஸ்மின், பாவனா, ரீமாசென் என நாயகிகள் கிரீடத்தைக் கைப்பற்றும் வேட்டையில் இறங்கி இருக்கிறார்கள்.

'வரலாறு' வெற்றிக்குப் பிறகு ஆழ்வாரில் அசின் தான் ஜோடி. அதனால் வாய்ப்பு அவருக்கு வருவதில் சிக்கல். சதா திருப்பதியில் ஜோடி சேர்ந்து விட்டார். நயன்தாராவும், பாவனாவும் தங்கள் மலையாள மானேஜர்களை அனுப்பி எப்படியாவது அந்த பட வாய்ப்பைப் பெற்று வரச் சொல்லியிருக்கிறார்கள்.

ஹீரோயின்களின் சான்ஸ் தேடும் இந்த சுவாரஸ்யமான தங்கவேட்டையில் த்ரிஷா மாமி வெற்றி பெற்று விடுவார் போலும். 'ஜி'யில் அஜீத்துடன் ஜோடி சேர்ந்த த்ரிஷா 'மறுபடியும் அஜீத் ஜோடியாக நடிக்க விரும்புகிறார். இதற்காக தமது சம்பளத்தைக் குறைத்து கொள்ளவும் தயார் என்று தனது கால்ஷுட் மானேஜரைத் தூது அனுப்பி வைத்தார். தமிழ், தெலுங்கு மார்க்கெட்டை மனதில் வைத்து பார்த்து அஜீத்துடன் கிரீடம் சூடும் வாய்ப்பு த்ரிஷாவுக்கு கிடைத்திருக்கிறதாம்.

'கிரீடம்' படத்தை விஜய் ஆனந்த் இயக்குகிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகர் பாலாஜியின் மகன் சுரேஷ் பாலாஜி தயாரிக்கிறார்.

முகப்பில் :
ஜீவா - பூஜா



சிந்து தொலானி




## நானெனும் நீ... நீயெனும் நான்!

நீலத்துகிலுடுத்து
நின்றொளிரும் பெண்ணிலவே!
கோல மகளே!
கொவ்வைக் கனியிதழால்,

சாலம் காட்டி
சாகடிப்பதேனடியே!
நாளம் விறைத்து
நடுங்குதடி - உன்னழகால்.

ஏலம், கராம்பே!
ஏற்காமற் போறாயே!
காலம் கனிந்திடுமா
கன்னியுனை கரந்தழுவ.

ஈழத் திருநாட்டில்
இன்பமுடன் வாழ்ந்திடவே,
பாலம் போடேண்டி
பனி மலரே - நம்
காதலுக்கு.

அத்தை மகளே!
அழகு மணிப் பெட்டகமே!
பள்ளிக் காலத்து
புள்ளி மயிலே!
நீயின்றும்...
நீயாகவிருக்கலாம்;
ஆனால் - நான்
நானாகயில்லை!

*—சப்றோஸ் ஜமால்,*
*நற்பிட்டிமுனை.*

## மாற்றம் வேண்டும்

மலையகத்தில் மாற்றம் தேவை
மக்களின் வாழ்க்கையில் மாற்றம் வேண்டும்
மலையகத்தில் மறுமலர்ச்சி வர வேண்டும்
மக்களின் தொழிலிலே மாற்றம் வேண்டும்

சிந்தனை மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்
சில பேரை ஒதுக்கிட வேண்டும்
பல பேர்களை ஓரங்கட்ட வேண்டும்
பேர் போடும் (அன்றாடம்) பழக்கம் மாற
வேண்டும்

மூச்சு விடும் போது ஆக்கத்திறன் மிகுதியால்
பேச்சு திறன் உயர வேண்டும்
சொல்லிலே தெளிவு வேண்டும்
செயலிலே புதிய சிந்தனை வேண்டும்

மலையகத்திலே காணி, நிலம் வேண்டும்
சொந்தமாக வாழ வழி வேண்டும்
தொழில்சார் கல்வி ஏராளம் உருவாக
வேண்டும்
தோட்டங்கள் என்ற பெயர் மாற வேண்டும்

கசிப்பு, கஞ்சா மக்கிப் போக வேண்டும்
கள்ளுத் தவறணை தரைமட்டமாக வேண்டும்
பழக்கத்திலும் பண்பிலும் மாற்றம் வேண்டும்
புதிய கருத்துக்கள் ஓங்க வேண்டும்

சொந்தமாகச் சிந்தித்து செயல்பட சுதந்திரம்
வேண்டும்
சொத்துக்கள் பல மக்கள் சேர்க்க வேண்டும்

ஆட்சியைப் பிடித்து மாட்சிகள் புரிய வேண்டும்
கட்சிகளை ஆட்டம் காண வைக்க வேண்டும்
அவர் அவர் முன்னேற வேண்டும் -
அப்போதுதான்
அடுத்தவர் முன்னேற முடியும்!

*—ஆறுமுகம் சந்திரமோகன்,*
*புஸ்ஸல்லாவ.*

## முயற்சியே திருவினையாக்கும்!

இயலாமை
உன் முதுகில் இருப்பாகி,
சவாரி செய்யுமாயின்,
இருப்பவை அனைத்தையும்
இழந்து விடுகின்றாய்...
இமைப் பொழுதில் நீ!

இயல்பளந்து,
இறைவனால் இரட்சிக்கப்பட்டவற்றை
இயன்றவரை சோரம் போகாமல்
காப்பாற்றிக் கொள்வன்தான்,
உண்மையில் புத்திசாலி!

பகடை யாட்டத்தில்
பலவற்றையும் இழந்து,
பாஞ்சாலியையும்
பணயம் வைத்தனர்...
பாண்டு வமிசத்தினர்!
அந்த அபாக்கிய நிலை
உனக்கு வர வேண்டாம்.

இறக்கை இருக்கும் வரைதான்
இமய வரம்புக் கப்பால்
உன்னால் பயணிக்கவும்,
பரலோகத்தில்
சயனிக்கவும் முடிகின்றது!

சொர்க்கத்தின் கதவும்
தட்டித் திறக்கப்படுமாயின்,
சுந்தரச் சீர் மல்கிய - அந்தச்
சுவனமே...
சோம்பேறிகள் மடமாகிவிடும்!

போட்டதுதான் முளைக்கும்!
கேட்டது கிடைக்குமென்று
உன் உடம்பு
கேள்விக் குறியாகும் வரை
காத்திராமல்,
சுவனத்தின் சாவியைச்
சுறுக்காய்ப் பற்றி,
சுருதியை மீட்டு வாழ்வில்!
என்றும்,
முயற்சியே திருவினையாக்கும்!

*—த.மீரா லெவ்வை,*
*ஏறாவூர் - 03.*

## ஆசை

போரில்லாத பூமியிலே
பிறக்க ஆசை
பிறந்த தாய் நாட்டு வளம்
பெருக்க ஆசை!

ஆறறிவு மனிதனாக
வாழ ஆசை
அழகு தமிழ் 'முரசில்' கவிதை
அரங்கேற்ற ஆசை!

சேனை ஊரிலிருந்து
மூதூர் வரை
அடையாள அட்டையின்றி
சென்று வர ஆசை!

ஊர் தோறும்
தடைகள் அற்ற
சுற்றுலாவை
சுதந்திரமாய்
சுற்றி வர ஆசை!

இந்து, இஸ்லாம்
கிறிஸ்து, பௌத்தம்
இணைந்த நாட்டில்
இரத்தம் சிந்தும் யுத்தம்
ஒழிய வேண்டுமென்ற ஆசை!

சட்டம் ஒழுங்கு
தர்மம் அமைதி
தவழும் நாட்டில்
சொத்து சுகம் சேர்த்து
சுற்றம் சூழ்ந்து
சுதந்திரமாய் வாழ ஆசை!

*—கவிக்குயிலன்,*
*சேனையூர்.*

## யுத்தத்தால்...

மழையாய்
விழுந்த ரவைகளால்
ஷெல் வீச்சுக்களின் ஆர்ப்பாட்டத்தினால்
எங்கள் பூமி ரத்தச் சேறாயிற்று.

இதனால்
எஞ்சியோரே அகதிநாமம் பெற்று
விரும்பாத இடம்தனில்
விதி தள்ளிட்டவர்களே
நலம்புரி முகாம்களில் நாங்களே!

சிங்கத்திற்கும் புலிக்குமிடையில்
ஏற்பட்ட கலவர நடுவில்
கண்விழிக்காத குஞ்சுகளாய்
துடிதுடித்துப் போனோம் நாங்களே!
பசியின் மடியில்
மழலைகளின் அழுகைச் சத்தமும்
உம்மாக்களின் பதறல்களும்
சூடு கொண்டதே முகாம்களுக்குள்.

சிறு தண்ணீரும் பெறுமதியுற்று
கண்ணீரில் குழிக்கும்
எம் முகங்களின் சோகப்படரல்கள்தான்
எத்தனையோ!

வாழ்க்கைத் தேரோட்டவும்
தொழிலற்று, போரினால்
நடைப்பிணமாய்க் கிடக்கும்
இல்லத் தலைமை இதயங்கள்தான்
எத்தனையோ!

வேரறுந்த
விருட்சமாய் நாங்கள்
தூக்கியெறியப்பட்டவர்கள்
தூக்கியெறிந்து விடாதீர்கள்!!

*—எச்.எம்.எம்.பாஹிம்,*
*இறக்காமம்.*

## ஒரு விதவையின் பாடல்...

சற்றென்று பற்றிக்கொள்ளும்
பதற்றத்தின் எதிரொலி
பார்வைக்குள் தேங்கிவிட
அலைமோதித் திரியும்
ரகசியத் தேடல்...

அழுத்திப் பிடித்தும்
மீறப்பார்க்கும் இதயத்துடிப்பில்
காமம் கலந்த காதல் பசியின்
அத்துமீறிய
அவசியநாடல்...

நாணம் அறுத்து விலகல் மறுத்து
நொடிகள் கடத்தும்
அன்புச் செறிவில்
பிரிவுத் தகிப்பின்
ஏகாந்த வாடல்...

சுற்றம் தவிர்த்த சூழல் அமைத்து
ஓரங்கவாசியாய் சற்றே தனித்து
கவிழும் இமைகளுக்குள்
நிழலாடும் நினைவுகளின்
உக்கிரச்சாரல்...

நெருங்கிவரும் தூரத்தனர்த்தம்
பரிகசிக்கும் பரிதாபப் பார்வையில்
தொக்கி நிற்கும் நீசவேட்கையின்
துச்சமான
விண்ணப்பக்கோரல்...


ஆழமான எதிர்பார்ப்பு
சிதறலுடன் திசைமாற
அவஸ்தையின் ஒடுங்கலுடன்
பேதலித்துக் கொதிக்கின்றது
ஒரு விதவையின்
வேதனைக் கதறல்...

*—பிரமிளா செல்வராஜா,*
*ஹாலி - எல.*

# கருக்கலைப்பு ஒரு சமூக அழிப்பு


**சிறப்புப் பார்வை**

**ஒரு** ஜனநாயக நாட்டிலே தனிமனித சுதந்திரம் மதிக்கப்படுவதோடு அதற்கு யாரும் தடையாக இருக்க முடியாது. இலங்கை ஒரு ஜனநாயக நாடாக மதிக்கப்பட்டாலும் இங்கும் சில பகுதிகளில் சீனா போன்ற கம்யூனிஸ நாடுகளில் நிலவுகின்ற கட்டாய குடும்பக்கட்டுப்பாடு திணிக்கப்படுவதைக் காணமுடிகிறது. குறிப்பாக மலையகப் பகுதிகளிலே கட்டாயக் குடும்பக்கட்டுப்பாடு, போதிய விழிப்புணர்வின்மை, வறுமையினூடான வாழ்க்கைப் போராட்டம் என்பவற்றின் விளைவாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கருக்கலைப்பினால் அச் சமுதாயத்தின் எதிர்காலச் சந்ததி



மறைமுகமாக அழிக்கப்படும் துரதிர்ஷ்டமான நிலைமை பற்றி பெரியளவில் யாரும் அக்கறை செலுத்தவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

மலையகப் பகுதிகளில் சட்டவிரோதமான கருக்கலைப்பு நடைபெறுவதற்கு பல அடிப்படைக் காரணங்களுள்ள போதிலும் வறுமையும் முக்கிய இடம் வகிக்கின்றது. நாட்டில் நிலவும் வாழ்க்கைச் செலவீனத்திற்கு ஈடுகொடுக்க முடியாத குடும்பத்தவர்கள் தமது இளம் பெண் பிள்ளைகளை கொழும்பு போன்ற வெளி இடங்களிற்கு வீட்டு வேலைக்காக அனுப்பி வைக்கின்றனர். அங்கு அப் பெண்கள் தமது எஜமானர்களினால் சீரழிக்கப்பட்டு கர்ப்பமாகும் சந்தர்ப்பத்தில், சமூகத்தின் பழிச்சொல்லுக்குப் பயந்தும், அதிக பணம் செலவழிக்க முடியாத காரணத்தினாலும் பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்துகொள்ளும் நிலை ஏற்படுகிறது.



மேலும் அங்கு ஒரு இன அழிப்பு என்று கருதக்கூடிய கருக்கலைப்பு நடைபெறுவதற்கு தோட்ட நிர்வாகங்களான கம்பனிகளின் இலாபம் கருதிய சுயநலமும், ஆச்சமுதாயத்தின் மீது பொறுப்பற்ற தன்மையுமே முதன்மை பெறுகிறது.

1994ஆம் ஆண்டு தோட்ட நிர்வாகங்களை முறையாக நிர்வகிக்க முடியாத சூழ்நிலையில் அரசாங்கம் நிர்வாகங்களைக் கம்பனிகளிடம்

**எஸ். வர்மன்**

கையளித்தது. அதன் பின்னர் தொழிற்சங்கங்களையும் முதலாளிமார் சம்மேளனத்தையும் தமது வசம் ஈர்த்துக் கொள்ள கம்பனிகள் பல உடன்பாடுகளைச் செய்து கொண்டன. இதன்படி தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் சகல செலவீனங்களும் கம்பனியிலே தங்கியிருப்பதால் தொழிலாளர்களுக்கு கர்ப்பக் காலத்தில் வழங்கவேண்டிய மருந்துகள், திரிபோஷா உட்பட பிரசவ விடுமுறை, பிறக்கும் பிள்ளைகளுக்கு வழங்கவேண்டிய முற்பணம், பிரசவத்திற்குப் பின் ஏற்படும் மருத்துவச் செலவுகள் என்று கம்பனிக்கு ஏற்படும் செலவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இரண்டு பிள்ளையுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும் என அம்மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் மீறுவோர் வேலையிலிருந்து நீக்கப்படுவர் எனவும் மறைமுகமாகவும் நேரடியாகவும் அச்சுறுத்தப்படுவதாக தகவல்கள் வெளியாகின்றன. அத்துடன் அங்குள்ள சுகாதார ஊழியர்களும், சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து மக்கள் மத்தியில் குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென அவர்களின் வறுமையை சாதகமாக பயன்படுத்தி பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர். அங்குள்ள அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் கம்பெனிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதாலும் இவை தமது இலாப நோக்கம் கருதி கம்பனிகளின் அத்துமீறல்களைக் கண்டு கொள்வதில்லை. இதன் விளைவாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி மலையகப் பகுதிகளில் 42 சிறுவர் பாடசாலைகள், மாணவர் பற்றாக்குறையால் மூடப்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக சில கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மலையகத்தில் எதிர்கால சந்ததி அழிவடைந்து வருவதற்கு இதுவொரு சிறந்த உதாரணம்.

இது தவிர சட்டவிரோதமான கருக்கலைப்பின் ஆபத்து, முறையான குடும்பக்கட்டுப்பாடு, தரகர்களின் ஏமாற்றும் தன்மை போன்றவை தொடர்பான விழிப்புணர்வினையும் இக்கருக்கலைப்பு நடவடிக்கைக்குத் தூண்டுதலாக உள்ளது. பாதுகாப்பற்ற முறையிலான கருக்கலைப்பின்போது ஏற்படும், அதிக இரத்தப்போக்கு, கிருமித் தொற்று என்பவற்றின் மூலம் அனேகமாக மரணம் ஏற்படும் என்பதுடன் நிரந்தரமாக தாய்மையடையும் தன்மை அற்றுப்போகவும் வாய்ப்புள்ளதை மக்கள் கவனத்திற்கொண்டு, முறையற்ற கருக்கலைப்பினை தவிர்ப்பது அவசியம். மேலும் வெளிமாவட்டங்களிற்கு பெண்பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தும் இடைத்தரகர்கள் தமக்கு கிடைக்கும் தரகுப் பணத்தை இலக்காகக் கொண்டு ஆசை வார்த்தைகளைக் கூறி பெண்பிள்ளைகளை அழைத்துச் செல்கின்றனர். எனவே பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கவனத்திற் கொண்டு, பெற்றோர்கள் பணம் சம்பாதிப்பதை மட்டும் இலக்காகக் கொள்ளாது இவ்விடயத்தில் அதிக கவனம் எடுக்கவேண்டும்.

எனவே மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களால் மலையகப் பகுதியில் நிகழும் சட்டவிரோத கருக்கலைப்பில் பல மரணங்கள் சம்பவிப்பதோடு ஒரு சமூகம் படிப்படியாக அழிக்கப்படுவதையும் உணர்ந்து, அரசாங்கம் இது விடயத்தில் கூடிய கவனமெடுப்பதுடன் கம்பனிகளின் அரவணைப்பில் செயற்படும் போலி டாக்டர்களையும், சட்டவிரோதமான தனியார் மருத்துவமனைகளையும் இனங்கண்டு, தகுந்த நடவடிக்கை எடுப்பது சுகாதார அமைச்சின் கடமையாகும். கம்பனிகளிடமிருந்து கிடைக்கும் இலாபத்தை இலக்காகக் கொண்டு அரசாங்கம் இவ்விடங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களையும் உதாசீனப்படுத்த முடியாது. எனவே ஒரு சமுதாயத்தின் எதிர்கால சந்ததி, கல்வி வளர்ச்சி, வறுமை என்பவற்றை கவனத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இந்த மறைமுக இன அழிப்பை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு ஊடகங்களும் தகுந்த பங்களிப்பு செய்வதும் வரவேற்கத்தக்கது.




# லேடிஸ் ஸ்பெஷல்

## மன உளைச்சல் நீங்க சில வழிகள்!

**இன்றைய** துரித வாழ்க்கைக்கு ஈடு கொடுக்க முடியாமல் நம்மில் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகிறோம். அதிக வேலை, தூக்கமின்மை, துரித உணவு என்று வாழ்க்கை ஓட, இதில் முதலில் அடிபடுவது மனம் தான்.

மனதிற்கும் உடலுக்கும் எப்போதுமே தொடர்பு உண்டு. ஸ்ட்ரெஸ், டிப்ரெஷன் என்பவை எல்லாம் மன அழுத்தத்தின்



எதிரொலிகள் தான்.

நமக்கு உள்ள கடமைகளையும் செய்து கொண்டு அதே சமயம் மன அமைதியும் இழக்காமல் இருப்பதற்கான சில வழிமுறைகள் இதோ...

♣ அதிக வேலைப்பளு காரணமாய் ஸ்ட்ரெஸ் ஏற்படும். அதனால் டென்ஷன் வந்து விடும். இதற்கு நேரத்தைத் திட்டமிடுதல் அவசியம். ப்ளான் செய்து கொண்டு வேலைகளை முடித்தால் மன இறுக்கம், அழுத்தம் ஆகியவை அண்டாது.

♣ கஷ்டமான சூழ்நிலைகளிலும் ரிலாக்ஸாக இருந்து விட்டால் டிப்ரெஷன் வர வாய்ப்பு இல்லை. எதையுமே அதன் போக்கில் எடுத்துக் கொண்டு சிரிப்பும் உற்சாகமுமாய் இருப்பவர்களுக்கு டிப்ரெஷன் வருவதில்லை.


♣ மனம் விட்டுப் பேசுதல் எதற்குமே வடிகால் எனலாம். ஆத்ம நண்பர்களிடம் மனம் விட்டுப் பிரச்சினையைப் பேசி முடிக்கும் போது ஏதோ பாரத்தை இறக்கி வைத்த உணர்வு ஏற்படும். எதையுமே பகிர்ந்து கொள்ளுதல் நன்மையில் முடியும்.

♣ தூக்கமின்மையும் டிப்ரெஷனுக்குக் காரணமாகலாம். இதற்கு சீக்கிரமே இரவு படுத்து விடியலில் எழும் பழக்கத்தை மேற்கொண்டால் புத்துணர்ச்சி ஏற்படும்.

♣ நல்ல இசை, மனதுக்கு இனிய இயற்கைக் காட்சிகள் முதலியன மன இறுக்கத்தை தளர்த்தும்.

♣ உடற்பயிற்சி அல்லது யோகா மிகவும் நல்லது. வேகமான நடைப்பயிற்சி உடலுக்கு மட்டும் ஆரோக்கியமானதல்ல, மனதுக்கும் தான். ப்ராணாயாமம் எனும் மூச்சுக்காற்றை இழுத்து விடும் பயிற்சியில் பெருமளவு மன இறுக்கம் குறைவது உறுதி.

♣ சிகரெட், மது போன்ற பழக்கங்கள் மன இறுக்கத்திற்குக் காரணமாகும். அவைகள் இல்லாவிட்டால் உயிரே போய் விட்டாற் போலிருப்பவர்கள் அந்தப் பழக்கத்தை அடியோடு நிறுத்த முடியாவிட்டாலும் சற்றுக் குறைப்பது நல்லது. ஏனெனில், சிகரெட்டும் மதுவும் மனஇறுக்கம்



விளைவிக்கும் ஹார்மோன்களோடு தொடர்பு கொண்டவைகள்.

♣ உடலுக்கும் தலைக்கும் மசாஜ் செய்து கொள்வது நல்ல வாசனைத் திரவியங்களை முகர்வது இவையெல்லாம் கூட மன இறுக்கத்தைக் குறைக்கும் என்கிறார்கள்.

## அழும் குழந்தைகளை உடன் கவனியுங்கள்!

குழந்தை பிறந்ததிலிருந்து சில மாதங்கள் வரை அழுது கொண்டுதான் இருக்கும். ஒரு குழந்தை தன் தேவையை ஆரம்ப காலங்களில் தனது அழுகையின் மூலமாகத் தான் தெரிவிக்கிறது. பச்சிளங் குழந்தைகள் அழுவதும் அவர்களின் நுரையீரலுக்கு நல்ல பயிற்சி என்பது சிலரின் அபத்தமான வாதம். அழும் குழந்தையை உடனே கவனிப்பதுதான் சிறந்த செயல் என்று ஆராய்ச்சிகளின் முடிவில் தெரிய வருகிறது. பிறந்து சில நாட்களே ஆன குழந்தையின் அழுகையை உடனே கவனித்து அதன் தேவையை நிறைவேற்றி விட்டால் அடுத்த ஆறு மாதங்களுக்கு அதன் அழுகை பெருமளவு குறையுமாம்.




தாய்க்கும் சேய்க்கும் இடையே நம்பிக்கையான உறவும் பிணைப்பும் உருவாக இதுவும் ஒரு காரணம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### குழந்தை ஏன் அழுகிறது?

✦ பசி தான் முதல் காரணம். பால் குடித்ததும் அது அழுகையை நிறுத்தி விடும்.

✦ சில நேரங்களில் குழந்தையின் வயிற்றில் காற்று ஏறி விடும். அப்போது குழந்தைக்கு வயிறு வலிக்கும். அது மாதிரியான நேரங்களில் குழந்தையை தோளில் போட்டு முதுகில் தட்டி விட்டால் போதும். குழந்தையின் உடைகளையும் கவனிக்க வேண்டும். சின்னச் சின்ன எறும்புகள், பூச்சிகள் கடித்தாலும் குழந்தை அழும். குழந்தை மிகவும் குளிர்ச்சியாகவோ, சூடாகவோ உணர்ந்தாலும் அழும்.



✦ சில குழந்தைகள் தங்களைச் சுற்றி மனித நடமாட்டம் இருந்து கொண்டே இருக்க நினைக்கும். அப்படி யாருமே இல்லை என்றால் அதற்கு அழும். இது போன்ற நேரங்களில் தாய், வீட்டில் எங்கிருந்தாலும் தன் குரலைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். குழந்தையுடன் விளையாட வேண்டும்.

✦ குழந்தையின் நாப்கினில் ஈரம் பட்டு அது உடம்பில் பட்டாலும் குழந்தை அழும்.

✦ அதிக நேரம் தாய் தன்னை விட்டுப் பிரிந்திருந்தால் தாயின் ஸ்பரிசத்திற்காக குழந்தை ஏங்கி அழும்.

✦ அதிக நேரம் விழித்தாலும் குழந்தைகள் எரிச்சலாகி உடல் சோர்வாகி அழ *ஆரம்பித்து விடுவார்கள்.* குழந்தைக்கு ஓய்வு தேவை. அது களைப்பின்றி விழித்திருக்கும் நேரத்தில் மட்டும் விளையாட வேண்டும்.

முதல் சில மாதங்களிலேயே குழந்தையின் அழுகையைக் கட்டுப்படுத்தித் தேவையை நிறைவேற்றி சிரிப்பை மலரச் செய்தால் பின் வரும் காலங்களில் குழந்தையின் மன வளர்ச்சியை எதுவும் பாதிக்காது. உடல் வளர்ச்சியும் இதனால் சீராக இருக்கும்.

## கண்களின் அழகைப் பேணுங்கள்!

◉ தினசரி எட்டு மணி நேரத் தூக்கம்.

◉ போஷாக்கான ஆகாரம்; அதாவது கல்சியம் வைட்டமின்கள் நிறைந்த உணவு, கண்களுக்கான பயிற்சிகள்.

**கண்களின் அழகிற்கு உணவுகள்...**

◉ பால், பால்பொருட்கள், கீரை, முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப் பழங்கள் மற்றும் காய்கள்.

◉ போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டியதும் மிக முக்கியம்.



◉ உடலுக்கு மட்டுமின்றி கண்களுக்கும் பயிற்சி அவசியம். ஏனெனில் கண் தசைகளோடு மூளையுடன் தொடர்புடைய ஏராளமான நரம்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

◉ கண்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் க்ளாக் வைஸ் மற்றும் ஆன்டிக்ளாக் வைஸ் டைரக்ஷன்களில் மூன்று முறைகள் சுழற்ற வேண்டும்.

◉ கிட்டத்தில் இருக்கும் பொருளைப் பார்த்துவிட்டு உடனடியாக தொலைவில் உள்ள ஒரு பொருளையும் பார்க்க வேண்டும்.

◉ நீண்ட நேரம் கம்பியூட்டர் மானிட்டர் போன்றவற்றின் முன் அமர்ந்து வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி ஏதேனும் பச்சை வெளியைப் பார்க்கலாம். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும் நீலம் மாதிரியான நிறங்களையும் பார்க்கலாம்.

**கண்களுக்கான மேக்கப்...:-**

இதை ரொம்பவும் கவனமாகச் செய்ய வேண்டும். முதலில் நல்ல தரமான பவுண்டேஷன் தடவ வேண்டும். பிறகு விருப்பமான நிறத்தில் ஐ ஷேடோ தடவ வேண்டும். காலை வேளைகளில் லைட்டான ஷேடுகளிலும் மாலை மற்றும் இரவு வேளைகளில் டார்க் நிறங்களையும் உபயோகிக்கலாம். பிறகு ஐ லைனர் தடவ வேண்டும். இப்போதெல்லாம் திக்காக ஐ லைனர் தடவுவதுதான் பேஷன் சிறிய கண்களாக இருந்தால் ரொம்பவும் திக்காகப் போட வேண்டாம். கீழ்ப் பாகத்தில் முழுவதுமாக ஐ லைனர் தடவ வேண்டாம்.

பிறகு மஸ்காரா, காலை வேளைகளில் ஒரு கோட்டும் மாலை வேளைகளில் இரண்டு மூன்று கோட்டுகளும் தடவலாம். மஸ்காராவிலேயே இப்போது பிரவுண் நீலம் மாதிரி நிறங்கள் கூட வந்துவிட்டன. விருப்பமுள்ளோர் அவற்றையும் தடவிப் பார்க்கலாம்.

கடைசியாக, காஜல் அதாவது கண் மை. இது கண்களுக்குள்ளே போகக் கூடியது என்பதால் தரமானதாக இருக்க வேண்டியது அவசியம்.

**சில ஆலோசனைகள்:-**

கண்களில் போடப்பட்ட மேக்கப்போடு இரவு தூங்கக் கூடாது. அதை அகற்றி விட்டே தூங்கச் செல்ல வேண்டும்.

தினசரி இரவு தூங்கும் முன்பாகக் கண்களுக்குள் ஒரு துளி சுத்தமான விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டால் காலையில் கண்கள் பளிச்சென்று இருக்கும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

50

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

..........................................

தே.அ. அட்டை இல : ..........................................

கையொப்பம் : ..........................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

☞ ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

☞ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

☞ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -50**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**

12.12.2006

**பரிசுப் போட்டி இல - 48**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கே. எம். எம். கலீல், 21 குளியாப்பிட்டிய வீதி, புதிய நகரம், ஹொறம்பாவ.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

### இலை அடை

***தேவையானவை :-***

பச்சரிசி - 1 கப்

தேங்காய்த்துருவல் - 1 கப்

வெல்லம் - தேவைக்கேற்ப

ஏலக்காய் - சிறிதளவு.

***செய்முறை :-***

அரிசி மாவைச் சப்பாத்திக்குப் பிசைவதுபோல் பிசைந்து கொள்ளவும். தேங்காய், வெல்லத்தூள், ஏலக்காய்த் தூள் - மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவும். பிசைந்த பச்சரிசி மாவினை அழகாக ரவுண்டாக வெட்டி எடுக்கப்பட்ட வாழையிலையில் வைத்துத் தட்டி அதன் மேல் தேங்காய்க் கலவையை வைத்து இரண்டாக மடித்து இட்லித் தட்டில் வைத்து வேக விடவும். வெந்தபின் எடுக்கவும். சூடான சுவையான இலை அடை தயார்.




**டூஸானுக்கும்** சரி, மற்றவர்களுக்கும் சரி, எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. மருத்துவச் சேவகன் ஒரு சிறிய டின்னில் கொஞ்சம் பஞ்சுப்பட்டை, சாராயம், ஆஸ்பிரின், பாண்டேஜ் துணி, அயோடின், கத்திரிக்கோல், சிறிது ஒட்டுப் பிளாஸ்திரி ஆகியவற்றைப் போட்டுக் கொடுத்தான்.

இன்னொரு பெரு வியாதிக்காரன், பஞ்சுக் கட்டும், ஆண்டிசெப்டிக் மருந்துப் புட்டி இரண்டும் கொண்டு வந்து தந்தான். புத்தம் புதியவை. ஜோன்ஸின் கால் முறிவுக்குப் போட்டுள்ள சிம்புகளை மாற்றுவதற்காக இந்தப் பொருள்கள்.

ஐந்து மணி சுமாருக்கு மழை பெய்யத் தொடங்கியது. "நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள். இப்போதே கிளம்பிவிட்டால் யாரும் உங்களைப் பார்க்க மாட்டார்கள். குறைந்த பட்சம் அரை மணி நேரம் இலாபம் கிடைக்கும். விடிகாலை நாலரை மணிக்கு, நீங்கள் மறுபடி புறப்படும் போது முகத்துவாரத்துக்கு இன்னும் அருகில் இருப்பீர்கள்" என்றான் ஜீன்.

"எப்படி மணி தெரிந்துகொள்வது?" என்றேன்.


"ஆற்றின் ஓட்டமே சொல்லும். தண்ணீர் உட்பக்கம் வருகிறதா, வெளியே போகிறதா என்பதை வைத்து மணி அறியலாம்."

படகைத் தண்ணீரில் இறக்கினோம். முந்திய படகைப் போல் இது இருக்கவில்லை. நாங்களும் ஏறி, எங்கள் பொருட்களையும் ஏற்றிய பிறகு கூட, தண்ணீர் மட்டத்திற்கு மேல் பதினெட்டங்குலம் நீட்டிக்கொண்டிருந்தது படகு. பாய்மரம் சுருட்டி வைக்கப்பட்டுக் குறுக்கு நெடுக்காகக் கிடந்தது. ஆற்றின் முனையை அடையும் போதுதான் மற்றப் பகுதிகளையும் ஏற்றினோம். நான் உட்காருவதற்காக, செடி கொடிகளால் பலகை போல் செய்து போட்டுக் கொண்டேன். படகின் அடிப்புறத்தில் ஜோன்ஸுக்காக விரிப்புக்கள் போட்டு வசதியாக இடம் செய்து கொடுத்தோம். காலில் போட்டுள்ள பாண்டேஜை மாற்ற வேண்டாமென்று அவன் சொல்லிவிட்டான். என் காலடியில் எனக்கும், தண்ணீர் பீப்பாய்க்கும் நடுவே அவன் படுத்துக்கொண்டான். மாசுரெட்டும் கீழேயே இருந்தான் - ஆனால் கொஞ்சம் முன்புறமாக.

சிறிய படகில் வந்தபோது தோன்றாத. ஒரு பாதுகாப்பு உணர்வும், பத்திரமும் எனக்கு இந்தப் படகில் அமர்ந்த உடனேயே ஏற்பட்டுவிட்டன.

இன்னும் மழை பெய்து கொண்டுதானிருந்தது. ஆற்றின் நடுமத்தியில், ஆனால் சற்று இடப்புறமாக, டச்சுப் பகுதியின் பக்கமாக, படகைச் செலுத்த வேண்டும். "போய் வாருங்கள்! சீக்கிரமாய்ப் படகைத் தள்ளுங்கள்!" என்றான் ஜீன்.

"நல்ல அதிர்ஷ்டம் உண்டாகட்டும்!" என்று சொல்லிவிட்டு, காலால் ஒரு பெரிய உதை கொடுத்துப் படகை



உந்திவிட்டான்.

"நன்றி டூஸான்! நன்றி ஜீன்! எல்லோருக்கும் நன்றி! ஆயிரமாயிரம் நன்றி!" என்றேன்.

பெரும் வேகத்துடன் எங்கள் படகு பறந்தது.

ஒரே சீராக மழை பெய்து கொண்டிருந்தது. எங்களுக்கு முன்னால் பத்து கெஜ தூரத்துக்கு மேல் பார்க்க முடியவில்லை. கீழண்டைப் புறத்தில் இரண்டு சிறிய திட்டுக்கள் இருந்தன. எனவே மாசுரெட் துடுப்புப் போடும் பக்கத்தில் எம்பிப் பார்த்து பாறைகளின் மீது மோதி விடாதபடி எச்சரிக்கை தந்து கொண்டிருந்தான்.

இரவு வந்தது. ஆற்றில் எங்களுடனேயே மிதந்து வந்து கொண்டிருந்தது ஒரு பெரிய மரம். ஆனால் ரொம்ப வேகமாக வரவில்லை.

எழுதியது: ஹென்றி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

அதன் கிளைகளில் சிக்கிக் கொண்டது எங்கள் படகு. நல்ல வேளை, விரைவாக விடுவித்துக் கொண்டோம். ஏறத்தாழ மணிக்கு இருபது மைல் வேகத்தில் சென்றது படகு. புகை பிடித்தோம். ரம் குடித்தோம். வைக்கோல் சுற்றிய அரை டஜன் புட்டிகளில் 'டாபியா' நிரப்பித் தந்திருக்கிறார்கள் பெருவியாதிக்காரர்கள். அதன் சுவை ஒரு தினுசாக இருந்தது.

பெருவியாதிக்காரர்களின் கோரமான உடல் ஊனங்களைப் பற்றி எங்களில் யாரும் பேசவில்லை. நாங்கள் பேசிக் கொண்டதெல்லாம் அவர்களுடைய கருணையைப் பற்றி; தாராளத்தைப் பற்றி; அவர்களுடைய நேர்மையைப் பற்றி; பிரிட்டனைச் சந்தித்ததும், அவன் அவர்களுடைய தீவுக்கு எங்களை அழைத்து வந்ததும் எத்தனை அதிர்ஷ்டம் என்பதைப் பற்றி.

மேலும் மேலும் கடுமையாக மழை கொட்டியது. நான் முற்றிலும் நனைந்து விட்டேன். ஆனால், நாங்கள் அணிந்திருந்த மேலங்கிகள் மிக உயர்தரமானவை. சொட்டச் சொட்ட நனைந்த போதிலும் உள்ளே கதகதப்பாகவே இருக்கும்படி செய்தது. எங்களுக்குக் குளிர் தெரியவில்லை. சுக்கானைப் பிடித்திருந்த என் கை மட்டும் தான் விறைத்துப் போயிற்று.

"இப்போது மணிக்கு இருபத்தைந்து மைலுக்கு மேல் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறோம்" என்றேன் நான். "நாம் புறப்பட்டு எவ்வளவு நேரம் ஆகியிருக்குமென்று நினைக்கிறாய்?"

"ஒரு நிமிஷம் இரு. நான் சொல்கிறேன்." என்றான் ஜோன்ஸ். "மூன்றே கால் மணி நேரம் ஆகிறது."

"என்னப்பா பைத்தியமா உனக்கு? எப்படி உன்னால் சொல்ல முடியும்?"

"புறப்பட்டது முதல் ஒன்று இரண்டு என்று நான் எண்ணிக்கொண்டே வந்திருக்கிறேன். நூறு எண்ணினால் நூறு வினாடி. முந்நூறு எண்ணிக்கைக்கொரு முறை, இங்கே அட்டையிலிருந்து ஒரு துண்டு கிழித்துப் போட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது முப்பத்தொன்பது துண்டு இருக்கிறது. ஒரு துண்டுக்கு முந்நூறு வினாடி - அதாவது ஐந்து நிமிஷம் - என்றால் மூன்றே கால் மணி நேரம் ஆகிறது. இன்னும் பதினைந்து அல்லது இருபது நிமிடத்தில் நாம் ஆற்றின் மறுபக்கத்தில் போகத் தொடங்கிவிடுவோம்."

ஆற்றின் குறுக்கே சென்று, டச்சுப் பக்கத்துக் கரையோரமாகச் செல்ல வேண்டி, சுக்கானின் பிடியை வலப்புறமாக வளைத்தேன். கரையை அடையுமுன் ஆற்றின் ஓட்டம் நின்றுவிட்டது. நாங்கள் ஆற்றின் பின்பக்கமும் போகவில்லை. முன்பக்கமும் செல்லவில்லை. மழை இன்னும் பெய்து கொண்டிருந்தது. புகை பிடிப்பதை நிறுத்திவிட்டோம். பேசிக்கொள்வது கூடக் கிசுகிசு வென்றுதான். "துடுப்பைப் போட்டு உந்து" என்றேன். நானும் வலது காலிடுக்கில் சுக்கானை அமுக்கிக் கொண்டு துடுப்பை வலித்தேன். கரையோரத்துப் புதர்களை மெல்ல அடைந்தோம். மரங்களின் கீழாக, கிளைகளைப் பற்றி இழுத்துக் கொண்டெ சென்றோம். மரங்களின் இருட்டு அடர்த்தி எங்களைச் சூழ்ந்திருந்தது. மூடு பனியால் முற்றும் மூடப்பட்டிருந்த ஆறு பழுப்பு நிறமாகக் காட்சி தந்தது. அலைகளின் ஓட்டமும், இழுப்பும் மட்டும் இல்லாதிருந்தால், கடல் எங்கே இருக்கிறது, ஆறு எங்கே இருக்கிறது என்பதை உணர்ந்திருக்க முடியாது.

அலையோட்டம் ஆறு மணி நேரம் நீடிக்கும். அதன் பிறகும் ஒன்றரை மணி நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். ஆகக்கூடி, இருப்புக் கொள்ளாமல் தவித்த போதிலும் நான் ஏழு மணி நேரம் தூங்க முடியும். கொஞ்சமாவது தூங்கியாக வேண்டும். கடலுக்குப் போய்விட்டால், பிறகு எங்கே படுத்துக்கொள்ள நேரம் கிடைக்கப் போகிறது?

பாய்மரக் கம்பத்துக்கும், தண்ணீர்ப் பீப்பாய்க்கும் நடுவே காலை நீட்டிப் படுத்தேன். படகு முனைக்கும் பீப்பாய்க்குமாகக் குடை மாதிரி ஒரு போர்வையைப் பந்தலிட்டிருந்தான் மாசுரெட். அந்தப் பாதுகாப்பில் தூங்கினேன், தூங்கினேன், அப்படித் தூங்கினேன். கனவுகள், மழை, கால் கையை முடக்கிக் கொண்டு படுத்திருந்த நிலை - எதுவும் என்னுடைய ஆழ்ந்த, கனத்த உறக்கத்தைக் கலைக்கவில்லை.

மாசுரெட் என்னை எழுப்பும் வரை நித்திரை செய்தேன். "பட்டு எழுந்து கொள். சரியான நேரம் வந்துவிட்டது. தண்ணீர் கடலில் பாய்ந்து கொண்டிருக்கிறது" என்றான்.

கடலைப் பார்த்தாற் போலிருந்தது படகு. தண்ணீரில் விரல் வைத்தேன். ஆற்றின் ஓட்டம் புலப்பட்டது. மழை நின்றுவிட்டது. பிறை நிலவின் வெளிச்சத்தில் ஆறு தெளிவாகத் தெரிந்தது. நூறு கெஜ தூரத்தில் மரங்களும், செடி கொடிகளும், கறுப்பு வடிவங்களாக நீர்ப் பரப்பில் மிதந்து செல்வதைக் கண்டோம். பெரிய வேரில் பிணைத்திருந்த படகை வெளிக் கொணர்ந்தோம். தொலைவில் ஆறு முடிந்து கடல் தொடங்கும் கடற்கரை தெரிந்தது.

(பட்டாம்பூச்சி பறக்கும்)




**தொ**ழிலாளர்களுக்கான உரிமை கிடைக்கப்பட வேண்டுமென்றே இத்தினம் ஆரம்பிக்கப்பட்டு, நடைமுறையில் உள்ளதென வரலாறு கூறுகின்றது.

சிக்காகோ என்ற இடத்தில் 'மோர்கமின் ஹகர்வெஸ்டர் வேர்க்ஸ்' என்ற நிறுவனம் உள்ளது. அதில் உள்ள தொழிலாளர்கள் 1886 ஆம் ஆண்டு, (1) 8 மணி நேரம் வேலை (2) 8 மணி நேர ஓய்வு (3) 8 மணி நேர உறக்கம் என்ற மூன்று நிபந்தனைகளை நடைமுறைப் படுத்த வேண்டுமென, வேலை நிறுத்தம் செய்த போது, பொலிசாரின் தாக்குதலினால் நான்கு பேர் கொல்லப்பட்டனர். இதன் மூலம் இந்நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மே மாதத்தின் முதலாம் திகதியை தொழிலாளர்களின் தினமாக 1889 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் . இரண்டாவது சர்வதேச தொழிலாளர் காங்கிரஸ் பிரகடனப்படுத்தியது. இதன் பின், இது எல்லா நாடுகளிலும் அமுலாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.



இவ்விதம் ஆரம்பித்த இம் 'மேதினம்' பலவிதத்தில் மாற்றப்பட்டு, கோஷத்துடன் தலைவர்களைவ வாழ்த்தி தொழிலாளர்கள் செல்வதும், தொழிலாளர்க்கு அதையும் இதையும் செய்து தருகின்றோம் என்ற அழகு வார்த்தையினால் அடுக்கடுக்காய் கோபுரம் கட்டித்தருகின்றோம் என்று தலைவர்கள் பேசுவதிலும் இன்று கூட்டம் முடிவடைகின்றது. மலையகத்தை ஒடுக்கி வைத்திருக்கும் ஆடக்குமுறைகளிலிருந்து வெளிவருவதற்கான வழிமுறைகளையும் அதை நடைமுறைப்படுத்தி முன்னேற்றம் காணப்படவேண்டும் என்ற உந்துதலைப் பெற்று, தாங்கள் இருக்கும் இடத்தில் செயலாற்ற வைப்பதற்கான வழிகளையும் மே தினத்தில் அர்த்தமுள்ளவைகளாக மாற்றவேண்டும். தலைவர்கள் ஏதோ பேசுகிறார்கள். நாங்கள் கேட்கிறோம் என்றல்லாமல். புதிதாக செய்ததில் பலனுண்டு என்ற நிலை உருவாக வேண்டும். இவ்விதமாக தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கு மே தினம் வழிவகுக்க மேண்டும்.

### குடியுரிமைச் சட்டம்

'எல்லாருக்கும் அவரவர் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆட்சி முறையே', குடியாட்சி முறையாகும் என J.R. லவல் கூறுகிறார். குடியாட்சி முறையில் மக்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். அதே வேளை மற்றவர்கள் இதனால் பாதிக்கப்படுவது முறைகேடாகும். இதனடிப்படையில் மலையகத் தேயிலைத் தோட்ட மக்களின் குடியுரிமை சட்டங்களை அவதானிக்க வேண்டும்.

(1) 1986 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம்.

(a) சிறிமா - சஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கை குடியுரிமைக் கோரி விண்ணப்பித்தார்கள்.

(b) இந்திய குடியுரிமை வேண்டுமென விண்ணப்பிக்காதவர்கள்.

(c) இருநாடுகளிலும் குடியுரிமை வேண்டுமென விண்ணப்பிக்காதவர்கள்.

(d) இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள், குடியுரிமை பெறுவார்கள்.

இவை ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படவில்லை

(11) 1988 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க சிறப்பேற்பாட்டுச் சட்டம்

இதில் இந்திய வம்சாவளியினர் எல்லாரும்,

இலங்கை குடிமக்கள் என உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய குடிமக்கள் சட்டரீதியாக அனுபவிக்கும் சிறப்புரிமைகள் அனைத்தையும் இம்மக்கள் பெற்று அனுபவிப்பதாகும்.

### இச்சிறப்பேற்பாட்டுச் சட்டத்தின் சிக்கல்

இச்சட்டத்தின்படி குடியுரிமைப்பத்திரம் தேவைப்பட்டால் ஆணையாளருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.இப்படியாக சட்டப்படி உரிமை வழங்கப்பட்டிருந்தாலும், தேவையேற்படும்போது சத்தியக் கடதாசிப் பத்திரம் சமர்ப்பிக்கலாமெனவும் கூறி, முன்னுக்குப் பின் முரணான சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இச்சட்டத்தை வலியுறுத்த, உள் நாட்டலுவல்கள், பொது நிர்வாக, மாகாண அமைச்சு, இதன் சுற்று நிருபத்தை அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், வாரியத் தலைவர்கள், பொது கூட்டுத்தாபன தலைவர்கள், மாகாணச் சபைகளின் தலைமை செயலாளர்கள், போன்றவர்களுக்கு அதுப் பற்றிய விபரம் பின்வருமாறு உள்ளது.

1.நாடற்றவர்களின் பிரச்சினை தீர்வு காணப்பட்டு விட்டது.

2.இச் சட்டம் அனைவருக்கும் தெரியாததினாலேயே இது அனுப்பப்படுகிறது.

3. அமுல்படுத்தப்பட வேண்டியவைகள்:-

அ. தேர்தலில் வாக்களிப்பதற்கு, வாக்குரிமை பதிவு செய்துகொள்ளல்

4. புலமைப் பரிசில், பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி பெறல்.

5. அரசாங்கம், தனியார்துறையில் வேலை வாய்ப்புக்கள் பெறல்

6. வியாபாரம் தொடர்பான பதிவுகள், இறக்குமதி, ஏற்றுமதி விவசாயம் கைத்தொழில் முயற்சிகள் செய்தல்

7. தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு பெறுதல்.

இதனைப் பற்றி அறியாததினால்

ஸ்ரீ முகன்

தேயிலைத் தோட்டங்களில் இன்னமும் இவற்றைப் பெறாமல் உள்ளனர். எனவே இதனைக் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

### தேசியமயமாக்கலும் தேயிலைத் தோட்டமும்

'கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள தூரம்' என்று தேசத்தின் பொது வாழ்வின், ஒரு மோசமான, அபாயகரமான அம்சத்தை பாரதியார் காட்டுகிறார். அந்தக் காலத்தில் மட்டுமல்ல, எல்லா காலத்திலும் மிகப் பொருத்தமாகும். கொள்கை, இலட்சியம், குறிக்கோள் என்றெல்லாம் வாய்சவடால் அடித்துவிட்டு பேசும் கொள்கை குறிக்கோளுக்கு முரண்பட்டு நேரெதிராக செயற்பட்டு வாய்ப்பேச்சு வீரர்களாக திகழ்கின்றனர். இவ்விதமாகத் தேசிய மயமாக்கல் கொள்கையில் எதிரிகளின் சொத்துக்களை தேசிய மயமாக்கி தங்கள் சொத்துக்களை காத்துக்கொண்ட தலைவர்கள் உலகில் பலர் உள்ளனர். இத்தேசிய மயமாக்கல் மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும்.இதனடிப்படையில் தேயிலைத் தோட்டத்தில் தேசிய மயமாக்கல் எவ்விதமாக உள்ளதென பார்ப்பது நன்மை பயக்கும்.

(துளிர்க்கும்)

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



அதைப் பார்த்த சாப்ளினும் கண் கலங்குகிறார். இந்த உருக்கமான காட்சி உலகெங்கும் மக்களைக் கதறி அழ வைத்தது. கூகனின் உணர்ச்சி மிக்க நடிப்பைப் பார்த்து எல்லோரும் அசந்து போனார்கள்.

கூகன் அழ வேண்டிய காட்சியைப் படமாக்கும் பொழுது அவனுக்கு அழுகை வரவில்லை. சாப்ளின் பலமுறை முயற்சி செய்தும் அதற்குப் பலன் இல்லாமல் போய்விட்டது. அப்பொழுது அவன் தந்தை அவனை அழ வைக்கிறேன் என்று முன்வந்தார். அடித்து நொறுக்கி விடுவானோ என்ற பயத்தில் அதைப் பார்க்க விரும்பாமல் அவனை மிரட்டிவிட்டு செட்டிற்கு வெளியே சென்றார். சில விநாடிகளில் கூகன் அழுது, அலறும் சத்தம் வெளியே கேட்டது. உடனடியாக உள்ளே வந்து காட்சியைப் படமாக்கினார் சாப்ளின்.

சாப்ளின் அவனை வாரி அணைத்து முத்தமிட்டுக் கொண்டு, "தந்தை உன்னை என்ன செய்தார்?" என்று கேட்டார். "சரியாக நடிக்கவில்லையென்றால் உன்னை அனாதை விடுதிக்கு அனுப்பி விடுவேன் என்றார் அவர். உடனே அழத் தொடங்கி விட்டேன்." என்றான் அந்தப் பையன்.



அப்பொழுது சாப்ளினின் காதுக்கருகில் வந்து கிசுகிசுத்தான். "அவர் அப்படியெல்லாம் செய்ய மாட்டார் என்று எனக்கு நன்றாகவே தெரியும். அவர் மிரட்டலை நம்புவது போல் நடித்து அழத் தொடங்கினேன். எல்லாம் நடிப்புதான்" என்றான் அந்தப் பொடிப் பையன்.

அதைக் கேட்ட சாப்ளின் அவனுடைய திறமையையும், கெட்டிக்காரத்தனத்தையும் கண்டு பிரமித்துப் போனார். அதே நேரத்தில் அவருடைய கடந்த கால வாழ்க்கையை நினைத்துப் பார்த்து மீண்டும் அழத் தொடங்கினார். அதைப் பார்த்த கூகனும் அழுதான். அந்தக் காட்சியைக் கண்டு செட்டிலிருந்த எல்லோரும் அழத் தொடங்கினார்கள்.

உலகத்தில் பல நிறுவனங்கள், முக்கியமாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் சில வருடங்களுக்கு ஒருமுறை உலக வரலாற்றிலேயே முக்கியமான நூறு படங்கள் என்று பட்டியலிடுவார்கள். அந்தப் பட்டியல்களில் அன்று முதல் இன்று வரை தவறாமல் இடம் பெற்று வரும் படம் (The Kid) "தி கிட்."

இந்தப்படம் இந்தியாவிலும் பல மொழிகளில், பல வகையான திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டது. இதை இருபத்தோராவது நூற்றாண்டிலும் வெளியிட்டால் இன்று தயாரிக்கப்படும் படங்களை விட நன்றாக ஓடும் என்பதில் சந்தேகமே இல்லை.

நான் ஹாலிவூட்டில் பழைய படங்கள் காட்டும் தியேட்டரில் இதைப் பார்த்த பொழுது உள்ளே நிற்கக் கூட இடம் இல்லாத அளவுக்குக் கூட்டம். படக் காட்சி முடிந்து வெளியே வரும் பொழுது, அடுத்த காட்சிக்கு உள்ளே செல்ல நின்று கொண்டிருந்தது, அதைவிட அதிகமான கூட்டம்.

"தி கிட்" படத்தை ஓராண்டு காலம் உழைத்து வெற்றிகரமாக முடிப்பதற்குள் சாப்னிள் பலவிதமான இன்னல்களை எதிர்க்க வேண்டி வந்தது. மில்பிரிட்டின் விவாகரத்துச் சம்பந்தமாக சாப்ளின் அவளுக்குச் செலுத்த வேண்டிய பெருமளவு பணத்தை உடனடியாக வாங்கிக் கொள்ள அவள் தாயாரும், அவளும் சாப்ளினுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப் போவதாகச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. 'தி கிட்' படத்தை நீதிமன்றம் மூலமாக ஜப்தி செய்து விடுவார்களோ என்ற அச்சம் அவரை வாட்டத் தொடங்கியது. இது போதாதென்று சாப்ளின் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த "பர்ஸ்ட் நேஷனல் நிறுவனம்" இவருக்குக் கொடுக்க வேண்டிய பண விஷயத்தில் தகராறு செய்யத் தொடங்கியது. படம் ஆறு ரீல் நீளமுள்ள "பீச்சர்" (Feature) படமாக இருந்த போதிலும், அவர்கள் வழக்கமாகக் கொடுக்கப்படும் இரண்டு ரீல் படத்திற்கு உரிய தொகையை அடிப்படையாக வைத்துக் கொடுக்க முயன்றார்கள். "பீச்சர்" நீளப்படம் வேறு; சிறுபடம் வேறு என்ற வகையில் சாப்ளின் அந்த நிறுவனத்தின் ஷரத்துக்களை நிராகரித்து விட்டார்.



ஆரம்ப காலத்தில், ஹாலிவூட்டில் படத்தைத் துணியைப் போல ஒரு அடிக்கு இவ்வளவு தொகை என்று கொடுத்து வந்தார்கள்! இது பலர் அறியாத உண்மை. ஒரு படம் நூறடி என்றால், ஒரு அடிக்கு பத்து டாலர் என்றால், அந்தப்படத்தின் விலை 1000 டாலர் தான். படத்தின் கதை என்ன? கருத்து என்ன? நடிப்பவர்கள் யார்? இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி படம் வாங்கும் வியாபாரிகள் கவலைப்படவில்லை! இந்த நம்ப முடியாத நிலைமை மாற சில ஆண்டுகள் தேவைப்பட்டது. அக்காலத்தில் இன்னொரு வேடிக்கை... திரைப்படக் கலையின் ஆசானான "க்ரிபித்" முதன்முறையாக க்ளோஸப் ஷாட்டுக்களைத் தன் படங்களில் அதிகமாகப் புகுத்த ஆரம்பித்தார். படம் ஊமையானதால் திரையில் காணும் பாத்திரங்களின் உணர்ச்சிகளை முகத்தில் காட்ட அது ஜனங்களுக்கு நன்றாகப் புரிய க்ளோஸப் ஷாட்டுகள் தேவைப்பட்டன. இதற்கு பட விநியோகஸ்தர்கள் பலமாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள்! காசைக் கொடுத்து டிக்கட்டை வாங்குபவன் நடிகனையோ, நடிகையோ முழுமையாகப் பார்க்க விரும்பான். அப்படிப்பட்டவனுக்கு உடலில் ஒரே ஒரு பாகத்தை மட்டும் காட்டுவது ஏமாற்று வித்தை என்று ஓலமிட்டார்கள்! இது இன்று சிரிக்கும் படியாக இருந்தாலும் அன்று பலமாக அலசப்பட்டது.

'தி கிட்' படத்தை ஜப்தி செய்து விடுவார்கள் என்ற பயத்தில் சாப்ளின் படச் சுருள்களையெல்லாம்.... பல லட்ச அளவில் சுருட்டி எடுத்துக் கொண்டு கலிபோர்னியா மாகாணத்தை விட்டு வெளியேறினார். அருகில், உட்டா என்று ஒரு மாகாணம். கலிபோர்னியாவின் சட்டங்கள் அங்கு செல்லாது. அந்த மாகாணத்தின் பிரபல நகரம் 'ஸால்ட் லேக் ஸிட்டி' (Salt Lake City). அங்கு ஒரு சிறிய ஹோட்டலில் தங்கினார் சாப்ளின். தன் படத்தை எடிட் செய்யத் தேவையான வசதிகள் இல்லாவிட்டாலும் ஹோட்டல் அறையிலேயே இரகசியமாகப் படத்தை எடிட் செய்தார்.

1950கள் வரை திரைப்படச் சுருள் சில்வர் நைட்ரேட் என்ற இரசாயனப் பொருளை மையமாக வைத்துச் செய்யப்பட்டு வந்தது. இது மிகவும் சுலபமாகத் தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிடும். கடுமையான வெயிலில் வைத்தாலே தீப்பிடிக்கும். ஆகையால் ஹோட்டல்களில் அவைகளை வைக்க விட மாட்டார்கள். அதனால் தான் சாப்ளின் இரகசியமாகத் தன் வேலைகளைச் செய்ய வேண்டிவந்தது.

***(தொடரும்)***

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

34

## டெஸ்பினா ராணி

ஒட்டோமான் தேசம் என்பது பாரசீக பிரதேசத்தில் இருந்த ஒரு தனி இராஜ்ஜியமாகும். பிற்காலத்தில் இத்தேசமானது, வழக்கொழிந்து தற்போதைய தென் மேற்காசிய நாடுகளுடன் இணைந்துவிட்டது. கி.பி 13ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஒட்டோமான் தேசத்தினை மூரத் மன்னர் ஆட்சிபுரிந்தார்.

அராபிய, சீன, பாரத எல்லைப் பகுதிகளில் ஒட்டோமான் அமைந்திருந்தபடியால் வர்த்தக நடவடிக்கைகளிலும் பெயர் பெற்று விளங்கியது. அத்துடன், அந்நாட்டு மக்களும் எவ்விதக் குறையும் இன்றி வாழ்ந்து வந்தனர்.

மூரத் மன்னர் தம்பதியினருக்கு வாரிசாக ஒரு மகன் இருந்தான். அவன்தான் இளவரசன் பாஜஸெட். முடிக்குரிய இளவரசனான பாஜஸெட் சகல கலைகளிலும் தேர்ச்சிபெற்று விளங்கியதுடன். ஓர் போர் வீரனாகவும் பயிற்சி பெற்று அனைவரினதும் மதிப்பிற்குரியவனாக விளங்கினான். சுருங்கக் கூறின் ஒட்டோமான் தேசத்தின் அடுத்த மன்னராக வருவதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் அவன் கொண்டிருந்தான்.

அக்காலத்தில் கிழக்காசிய நாடுகளில் ஒன்றான சேர்பியநாட்டு வீரர்கள் பலர், ஒட்டோமான் தேசத்துப் பாதுகாப்புப் படைகளில் பணிபுரிந்து வந்தார்கள். இதற்கு ஒரு முக்கிய காரணம், ஒட்டோமான் தேசத்தில் போர் வீரர்களின் பற்றாக்குறை நிலவியதே ஆகும். நாட்டிலுள்ள ஆண்களில் அநேகர் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமையினாலும், தேசத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் செல்வச் செழிப்பில் இருந்த படியினாலும் இளைஞர்கள், படையில் இணையப் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை. ஆயினும் நாட்டின் இறைமையினைப் பாதுகாக்க எப்படியும் ஓர் இராணுவம் தேவை. ஆனால் கட்டாய இராணுவ சேவைக்காக இளைஞர்களைப் படையணிகளில் இணைத்து மக்களின் அதிருப்தியைச் சம்பாதிப்பதை விடவும், சேர்பிய நாட்டில் இருந்து இளைஞர்களை வரவழைத்து இராணுவத்தில் தொழில் வாய்ப்பினை வழங்கி, படையினை பலப்படுத்துவதே சிறந்தது என மூரத் மன்னர் எண்ணினார்.

சேர்பிய நாடானது, ஒட்டோமான் நாட்டுடன் நிலத் தொடர்புகளைக் கொண்டிருக்காமல் தொலைவில் இருந்தமையினாலும், அங்கு வேலைவாய்ப்பு இன்மையினாலும் அதனைவிட இரு நாடுகளுக்குமிடையில் வேறு எந்தப் பிரச்சினைகளோ, பகையோ இல்லாதபடியினாலும் சேர்பிய வீரர்கள் தாமாகவே படைகளில் இணைந்தனர்.

ஒட்டோமானின் அயல் தேசங்களில் ஒன்றாக விளங்கிய மற்றுமொரு நாடு, மங்கோலியா. சேர்பிய வீரர்கள் எவ்வாறு சம்பளத்திற்குப் படைகளில் இணைந்தார்களோ அவ்வாறன்றி மங்கோலியர்கள் பலரும் அடிமைகளாகவே கொண்டுவரப்பட்டிருந்தனர். ஏனெனில், தேசத்தில் படைவீரர்களுக்குப் பற்றாக்குறை இருந்தது போலவே, வேலையாட்களுக்கும் பற்றாக்குறை நிலவியிருந்தது.

ஒட்டோமான் தேசத்து செல்வந்தர்களுள் ஒருவராக விளங்கியவர் மிர்ஷா என்பவராவார். மிர்ஷா ராஜ வம்சத்தைச் சேராத ஒருவராக இருந்த போதிலும் மன்னருடைய செல்வச் செழிப்பிற்குச் சற்றும் குறையாத செல்வம் அவர் வசம் இருந்தது.

அவரது ஒரே மகள்தான் டெஸ்பினா. சிறு வயது முதலே செல்வச் செழிப்பில் மிதந்தாள் டெஸ்பினா. பருவமடைந்தது முதல் மிகுந்த காம வேட்கை கொண்டவளாகவும் விளங்கினாள். மிர்ஷாவின் மாளிகையில் சேவைக்காக அமர்த்தப்பட்டிருந்த மங்கோலிய அடிமைகளை அவள் தனது காம வேட்கைக்குத் தீனியாக உபயோகித்தாள்.



செல்வாக்கு மற்றும் செல்வச் செழிப்புக் காரணமாக டெஸ்பியாவின் துர்நடத்தைகள் வெளி உலகிற்குத் தெரியவில்லை. ஆனால் மிர்ஷாவின் காதுகளுக்கு அவரது மகள் டெஸ்பினாவின் காம லீலைகள் தெரியவந்தபோது, காதும் காதும் வைத்தது போல விடயத்தை அமுக்கிய அவர், அவளுக்கு மன்னனின் மகனையே திருமணம் பேசினார்.

முரத் மன்னருடைய செல்வச் செழிப்பிற்கு சற்றும் குறையாத செல்வச் செழிப்புக் கொண்ட மிர்ஷாவுடன் சம்பந்தம் வைக்க அரச குடும்பத்தினரும் விரும்பினர். இதன்படி, இளவரசர் பாஜஸெட் - டெஸ்பினா ஆகியோரின் திருமணம் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

திருமணம் நடைபெற்ற 1389ஆம் ஆண்டு எவருமே எதிர்பாராத வகையில் அரண்மனைக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சேர்பிய வீரன் ஒருவனினால் முரத் மன்னர் படுகொலை செய்யப்பட்டார். இச்சதித் திட்டத்தின் பின்னணி கடைசிவரை கண்டறியப்படவில்லை என வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஆயினும், மன்னரின் கொலைக்குப் பின் சந்தேகத்திற்கிடமான வகையில் செயற்பட்ட சேர்பிய வீரர்கள் நாடுகடத்தப்பட்டனர்.

மன்னரின் மரணதின் பின் பாஜஸெட் மன்னராக முடிசூடிக்கொண்டார். டெஸ்பினா மகாராணி ஆனாள். ஆயினும் அவளது நடத்தையில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. அரண்மனையில் வேலையாட்களாகவும், தோட்டக்காரர்களாகவும் பணிபுரிந்த மங்கோலியர்களை, தனது படுக்கை அறைக்கு அழைப்பித்து தன் காம இச்சையினைத் தீர்த்துக் கொண்டாள்.

இச்சமயம் யாரும் எதிர்பாராத வண்ணம் மங்கோலியாவிற்கும், ஒட்டோமானுக்கும் இடையில் யுத்தம் வெடித்தது.ஏற்கனவே கணிசமான சேர்பிய வீரர்கள் நாடுகடத்தப்பட்ட நிலையில், ஒட்டோமான் படைகள் பலத்த இழப்புக்களைச் சந்தித்தன. அத்துடன் மங்கோலிய மன்னன் தாமர்லேன் ஓர் முரடனாகவும் காணப்பட்டான். சுமார் ஒரு வார காலப் பகுதியிலேயே மங்கோலியா ஒட்டோமானைக் கைப்பற்றியது.

அரண்மனையினை முற்றுகையிட்ட மங்கோலியப் படைகள், அரச குடும்பத்தினைக் கைது செய்தன. பாஜஸெட்டை சிறைப்பிடித்த தாமர்லேன் மன்னன், தனது படிக்கட்டுக்களுள் ஒன்றினை அகற்றி அதில் அவனைக் கிடத்தி அவனை மிதித்தே நடந்து சென்றான். அதாவது இறக்கும் வரை அவனை படிக்கட்டாகவே உபயோகப்படுத்தினான்.

மறுபுறம், சிறைபிடிக்கப்பட்ட டெஸ்பினா, முன்னர் மங்கோலியர்களை காம இச்சைகளுக்குப் பயன்படுத்தியமையை அறிந்த தாமர்லேன், மங்கோலிய படைவீரர்களின் கூடாரத்திற்கு அவளை அனுப்பி, அவர்களுக்கு உணவு பரிமாற வேண்டுமெனவும் அதுவும் நிர்வாணமாகவே பரிமாற வேண்டும் எனவும் கட்டளையிட்டான். செல்வச் செழிப்பிலும், காம இச்சையிலும் மிதந்த டெஸ்பினா, இறுதியில் ஏராளமான மங்கோலியர்களினால் சீரழிக்கப்பட்டே மறைந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

***(இரகசியங்கள் தொடரும்...)***

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## அமிர், யோகேஸுக்கு அஞ்சலி செலுத்த திரண்டது ஜன சமுத்திரம்

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகிய தலைவர்களின் பூதவுடல் தாங்கிய பேழைகள் அன்றைய தினம் மாலையே மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. திருகோணமலையிலிருந்து பேழைகள் எடுத்துச் செல்லப்பட்ட பொழுது, இலங்கை விமானப் படையினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர். மட்டக்களப்பு நகர மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்த இரவென்றும் பாராமல் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டனர். மக்களின் அஞ்சலிக்கு வசதி செய்யும் முகமாக இந்திய பாதுகாப்புப் படையினர் அன்றைய தினம் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தியிருந்தனர். "எனது வாழ்நாளில் இவ்வாறான ஒரு துயரக் காட்சியை நான் கண்டதேயில்லை. சகல இடங்களிலிருந்தும் மக்கள் பெருமளவில் வந்து குவிந்தனர். எல்லோரும் உணர்ச்சி வசப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். பெண்கள் சத்தமிட்டு அழுதார்கள். ஆண்கள் மௌனமாகக் கண்ணீர் வடித்தார்கள். ஓர் சோக சமுத்திரத்தையே அங்கு காண முடிந்தது" என்று இந்தியப் படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மறுநாள் காலை பூதவுடல் தாங்கிய பேழைகள் மட்டக்களப்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. யாழ்ப்பாணம் சோகமயமாகக் காட்சியளித்தது. கறுப்புக் கொடிகள் காற்றில் அசைந்தாடி யாழ்ப்பாணத்தை சோகத்தில் ஆழ்த்தியிருந்தது. யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்டேடியத்தில், மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் தகனக் கிரியைகள் இடம்பெற்றன. "அந்திசாயும் வேளையில் தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் தாங்கிய பேழைகள் கொண்டுவரப்பட்ட பொழுது, யாழ்ப்பாணம் ஜன சமுத்திரம் போல் காட்சியளித்தது. இறுதிக் கிரியைகளின் போது, யாழ்ப்பாணம் என்றும் கண்டிராத உணர்வுபூர்வமான காட்சிகளைக் காணக்கூடியதாக இருந்தது" என்று லேக்ஹவுஸ் நிருபர் ஒருவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்திருந்தார். இலங்கை - இந்திய அரசாங்கங்களின் சார்பிலும் தமிழக அரசியல் கட்சிகளின் சார்பிலும் சிரேஷ்ட தலைவர்கள் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றினர். இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மகாவலி அமைச்சர் காமினி திஸாநாயக்காவும், இந்திய அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகாரத்துறை இணையமைச்சர் நட்வார் சிங்கும் கொழும்பில் அப்போது இந்திய உயர்ஸ்தானிகராகப் பணிபுரிந்த லால் மஹ்ரோத்ராவும் பங்குபற்றினர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் (இந்திரா காங்கிரஸ்) அதன் பொதுச் செயலாளர் திருமதி டி.யசோதாவும் அ.இ.அ.தி.மு.க.வின் சார்பில் அதன் பிரதிப் பொதுச்செயலாளர் ராகவானந்தமும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பில் ஹாஜா மொகிடீனும் பங்குபற்றினர். இறுதிக் கிரியை ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப்.இயக்கம், மூன்று நாட்களுக்குத் துக்க தினம் அனுஷ்டிக்குமாறு மக்களை வேண்டி கொண்டது. ஜூலை மாதம் 14ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் சோகத்தில் ஆழ்ந்திருந்தது. வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் தனது இறுதி அஞ்சலியுரையை நிகழ்த்தினார். தமிழ்ப் பேசும் மக்களின் நலனுக்காக அமிர்தலிங்கம் எப்படித் தனது சொந்த வாழ்க்கையையும் சொகுசையும் அர்ப்பணித்தாரென்பதை விலாவாரியாக வரதராஜப்பெருமாள் விளக்கினார். "ஒரு சிறிய சூட்கேஸ் பெட்டிக்குள் தனது உடைகள், முகச்சவரம் செய்யும் உபகரணம், பற்பசை, பற்தூரிகை ஆகியவற்றைக் காவிக் கொண்டு வடக்கு, கிழக்கின் மூலைமுடுக்கெல்லாம் பயணித்து, தமிழ் பேசும் மக்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர் அமிர்தலிங்கம்" என்று வரதராஜப்பெருமாள் கூறினார். வடக்கு, கிழக்கு மாகாண சபையிலும், பாராளுமன்றத்திலும் இத் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தும்




*(அரசியல் தொடர்)*

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த இரு சபைகளிலுமே அமிர்தலிங்கத்தின் அருமையான குணாம்சங்களைப் பாராட்டிப் பலர் பேசினர். 1980ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட ஒரு விடயத்தை எம்.பி. ஒருவர் தனது அனுதாப உரையில் சுட்டிக்காட்டினார். "எனது வாழ்நாளில் ஒரு சிகரெட்டைக் கூட நான் தொட்டதில்லை. இருந்தாலும் ஒரு சிகரட்டின் விலை நான்கு சதத்தால் உயர்த்தப்பட்டிருப்பதானது, புகைபிடிப்பவர்களுக்கு நிச்சயமாக ஒரு சுமையாகவே இருக்கும்" என்று பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் குறிப்பிட்டாரென அந்த எம்.பி. சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்திய வெளிவிவகார இணையமைச்சர் நட்வார்சிங் இறுதிக் கிரியைகளின்போது நிகழ்த்திய தனது அஞ்சலி உரையில், தமிழ் தீவிரவாதக் குழுக்களை ஐக்கியப்படுத்த அமிர்தலிங்கம் எடுத்த பெருமுயற்சிகளைத் தொட்டும் பேசினார். அவர் சொன்னார். "தமிழர்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் அயராது பாடுபட்டனர். தமிழர்களிடையே ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது, தற்போது அவசியத் தேவையாகிவிட்டது" என்று நட்வார் சிங் கூறினார்.

1984ஆம் ஆண்டு முதல் தமிழீழக் குழுக்களிடையே ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்காக அவர் பெருமுயற்சியெடுத்தார். இதற்காக தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களுடன் அவர் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சகோதர இயக்கங்களிடையே மோதல்கள் நடத்துவதைக் கைவிட்டு, ஐக்கியப்பட்டு செயற்படுமாறு அவர் பல தடவைகள் தீவிரவாதிகளிடம் மன்றாட்டமாகக் கேட்டுள்ளார். தீவிரவாத இயக்கங்கள் தமக்கிடையே சண்டையிட்டு ஆட்களைக் கொன்று குவித்தபோது, அவர் மிகவும் மனம் வருந்தினர். நட்வார் சிங் நிகழ்த்திய உரை மனதைத் தொடுவதாக அமைந்திருந்தது. இலங்கை அரசின் சார்பில் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய அமைச்சர் காமினி திஸாநாயக்கா ஆற்றிய உரையும் பலரின் மனங்களைத் தொட்டது. அமைச்சர் காமினி தனதுரையைக் கீழ்க்கண்டவாறு ஆரம்பித்தார். "எனது பாராளுமன்ற சகாக்களும் நண்பர்களுமான இருவருக்கும் எனது இறுதி மரியாதையைச் செலுத்துவதற்காக நான் யாழ்ப்பாணம் வந்திருக்கிறேன். நான் இப்போது உரை நிகழ்த்தும் இந்த மைதானத்தில், அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் பெருமளவு மக்கள் மத்தியில் உரையாற்றியுள்ளனர். அவர்கள் இன்று அமைதியாகி விட்டனர். எனினும் அவர்களின் இந்த அமைதி, அவர்கள் பேசியிருக்கக் கூடிய சகல வார்த்தைகளையும் விட மிகவும் உரத்துச் சத்தமிடும்" என்று அமைச்சர் காமினி திஸாநாயக்கா கூறினார். "இந்த இருவரினதும் மரணத்திலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது வன்செயல்களைக் கைவிட்டு சமாதானம், அஹிம்சைப் பாதையை நாம் பின்பற்ற வேண்டும். ஜனநாயக உணர்வுகள் மெதுமெதுவாக அழிந்து வன்செயல் அரசியல் வெளிவந்து கொண்டிருந்த ஒரு கஷ்டமான நேரத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை அமிர்தலிங்கம் கையேற்றுக் கொண்டார். இந்த முரண்பாட்டுத் தன்மையுடன் அவர் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார். அமிர்தலிங்கம் இந்த நிலைமையைக் கையாண்ட விதம் குறித்து எம்மிடையே அபிப்பிராய வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அவருடைய நேர்மைக்கும் விசுவாசத்தன்மைக்கும் எவரும் சவால் விட முடியாது. கடந்த காலங்களில் இலங்கைக்கு நாசம் விளைவிக்கக்கூடிய பிரிவினை அரசியல் 1983ஆம் ஆண்டுக்குப் பிந்திய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. இவ்வேளையில் தான் இலங்கை அரசியல் அமைப்பிலிருந்து தமிழ்த் தலைமை வெளியேறத் தீர்மானித்ததோடு, இந்திய அரசாங்கத்தை மத்தியஸ்தம் வகிக்குமாறும் கேட்டுக் கொண்டது" என்று அமைச்சர் காமினி திஸாநாயக்கா கூறினார். அவர் மேலும் கூறியதாவது :- "பல்வேறு கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தம் இலங்கையின் ஒற்றையாட்சி அரசாங்கத்துக்குள் அதிகாரப் பகிர்வுக்கும் தேசிய ஒருங்கிணைப்புக்கும் வழிவகுத்தது. வடக்கு, கிழக்கில் சிறிது காலம் சமாதானம் நிலவியது. ஆனால் மீண்டும் வன்செயல் வெடித்தது. இந்திய அமைதிப்படை தற்போது இலங்கையிலுள்ளது. அவர்கள் இலங்கையை விட்டுப் போக வேண்டும். பேச்சுவார்த்தையூடாகவும் நல்லெண்ணத்தின் ஊடாகவும் இது மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இலங்கையின் ஜனநாயக முன்னெடுப்புகளுக்கு சேவை யாற்றுவதன் மூலம், தமது சொந்தக் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பேணுவதற்காக சகல தமிழ் மக்களும் சமாதானம், சௌஜன்யம், ஐக்கியத்துடன் வாழ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் இதற்காகவே பாடுபட்டனர். அவர்களின் இந்த நோக்கம் நிறைவேறுவதற்காக தமிழ் மக்கள் பாடுபட வேண்டும். நாம் கடந்த கால தவறுகளைக் கைவிட்டு விட வேண்டும். எமது தேசத்தின் இறைமை மனித மற்றும் ஜனநாயக பெறுமானங்களைப் பேணுவதற்கு நாம் செயற்பட வேண்டும்." என்றும் அமைச்சர் காமினி திசாநாயக்கா கூறினார்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**



அமிர்தலிங்கத்தின் பூதவுடலுக்கு முன்னாள் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா இறுதி மரியாதை செலுத்துகிறார்.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை




ஜயந்தன் ஸ்ரீதேவியின் எலும்புக்கூட்டை எரிக்கிறான். ஏதோ வெளிச்சம் தெரிவதைக் கண்டு குமாரும் தேவதத்தன் நம்பூதிரியும் அங்கு வருகிறார்கள். நிரபவன் பிரபாகரன் உருவில் உள்ள கோவிந்தன் என்பதும் எரிவது ஸ்ரீதேவியின் எலும்புக்கூடு என்பதும் தெரிய வருகிறது. நெருப்பை அணைத்து எலும்புக் கூட்டை எடுத்துச் செல்கிறார்கள். கோவிந்தன் அங்கிருந்து மறைகின்றான்.

மறுநாள் காலை சந்து நாயரும் ஜயந்தனும் வந்த போது அங்கே எலும்புக் கூட்டின் சாம்பலையோ அல்லது கோவிந்தனையோ காணவில்லை.

தேவதத்தன் நம்பூதிரி ஹோமத்தை தொடங்குகிறார். சிலநிமிடத்தில் ஜெயலட்சுமியின் கண்களில் மாற்றம் தென்படுகிறது.

**விரைவிலேயே** அவை ஸ்ரீதேவியின் கண்களைப் போல் மாறிவிட்டன.

அதைப் பார்த்த குமார் அதிர்ந்தார். 'இந்த உடலுக்குள் ஸ்ரீதேவி எதற்காக நுழைந்திருக்கிறாள்? பிரபாகரனின் ஆத்மா ஏன் வரவில்லை...?' அவரைக் கேள்விகள் துளைத்தன. தேவதத்தன் நம்பூதிரியும் இதே மாதிரி யோசனையில்தான் இருந்தார்.

அவர்கள் இருவரும் ஆர்வத்துடன் ஜெயலட்சுமியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவள் பேச ஆரம்பித்தாள். பேசும் போது குரல் தழுதழுத்தது.

"என் எலும்புக் கூடு மேல நெருப்பு விழுந்துவிட்டதால, இனிமேல் அதுல நான் பிரவேசிக்க முடியாது. இனி நான் பழையபடி அலைய வேண்டியதுதான்." என்றாள் ஸ்ரீதேவி.

தேவதத்தனும், குமாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

குமார், கண்களை மூடிக்கொண்டு தீர்க்கமாக யோசித்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக, "நீ ஜெயலட்சுமியோட உடம்புலேயே இப்போதைக்கு இரு. அந்தப் பொண்ணோட ஆத்மாவ, உங்கிட்டயே அடக்கி வைச்சுக்க. நான் கூடிய சீக்கிரம் எல்லாத்துக்கும் ஒரு நல்ல மாத்து வழி செய்யறேன்" என்றார். அன்று இரவு அவர்கள் மூவரும் அவரவர் பிரச்சினைகளைப் பற்றியே யோசித்தபடி கழித்தனர்.

மறுநாள் காலையில் காலேஜுக்குப் புறப்பட்டார் குமார்.

அவர் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்ததும் மாணவர்களும், வேறு சில ஆசிரியர்களும், அவரைச் சுற்றிக்கொண்டனர். 'பிரபாகரன்தான் எலும்புக் கூட்டைத் திருடிக் கொண்டு போனான்' என்று வாட்ச்மேன் சொன்னதை அவர்களில் பலர்

**எழுதுவது**
**சிவன்**

நம்பவில்லை. 'காவல்காரன் போதையில் இருந்திருப்பான். குமார் சாரோட பிரெண்டு, திருடற அளவுக்கு மோசமானவராக இருக்க மாட்டார்' என்று அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டனர்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த குமார், சிரித்த முகத்தோடு அவர்களை சமாதானப்படுத்தினார். "திருட வந்தது என் நண்பன் பிரபாகரனா இருக்க முடியாது! ஆனா, நம்ப காவல்காரரோ சத்தியம் பண்ணாத குறையா 'நான் பார்த்தேன்'னு சொல்றாரு. எதுக்கு இவ்வளவு பிராப்ளம்? தொலைஞ்சு போன எலும்புக் கூட்டுக்குப் பதிலா நானே வேற ஒண்ணு வாங்கி வச்சுடறேன்." என்றார்.

அப்போது அந்தப் பக்கம் வந்த பிரின்ஸிபால், "மிஸ்டர் குமார்! நடந்தது நடந்துடுச்சு. உங்க பிரெண்டு இதப் பண்ணியிருப்பார்னு நானும் நினைக்கலை. அதனாலதான் இது விஷயமா பொலிஸ்லேயும் புகார் கொடுக்கலை. நீங்க போய் உங்க வேலையைக் கவனிங்க." என்றார்.

பிரின்ஸிபாலின் தலையைப் பார்த்ததுமே பலர் அங்கிருந்து நழுவத் தொடங்கியிருந்தனர். அவர் பேசி முடித்த போது எல்லோரும் அந்த இடத்தை விட்டு அகன்றிருந்தார்கள். தனியாக நின்று கொண்டிருந்த குமாரிடம் பிரின்ஸிபால்



தோழமையோடு நெருங்கி, தோளில் கை போட்டுக் கொண்டார். "குமார்! உங்க டெடிகேஷனையும், வேலையையும் யாரும் குறை சொல்ல முடியாது. ஆனாலும் இப்பல்லாம் அடிக்கடி லீவு போடறீங்க. அதை மட்டும் கன்ட்ரோல் பண்ணீங்கன்னா நல்லா இருக்கும்" என்றார்.

குமாரின் கண்கள் கலங்கின. "ஸாரி ஸார். இவ்வளவு அன்பா என்னை நீங்க நடத்தறதுக்கு நான் கொடுத்து வெச்சிருக்கணும். ஒரு நல்ல ஆத்மாவுக்கு உதவி பண்ணப் போய், நான் வேற சிக்கல்ல மாட்டிக்கிட்டேன். சீக்கிரம் அந்தப் பிரச்சினையெல்லாம் 'ஸால்வ்' பண்ணிட்டேன்னா மறுபடியும் வழக்கம் போல காலேஜ்லயே குடித்தனம் நடத்த ஆரம்பிச்சிடுவேன்." என்றார்.

"நோ! நோ! இன்னும் எத்தனை நாளைக்குக் கட்டை பிரம்மச்சாரியா இருப்பீங்க? உங்க பிராப்ளம் முடிஞ்சிடுத்துன்னா, நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்குங்க. எத்தனை நாளைக்கு எலும்புக்கூடுங்களோட தூங்கப் போறீங்க?" என்று கண்ணைச் சிமிட்டியபடி சொல்லிவிட்டு, தனது அறையைப் பார்த்து நடக்க ஆரம்பித்தார் பிரின்ஸிபால்.

அன்று முழுவதும் குமாருக்கு பாடங்களில் மனம் ஓடவே இல்லை. கல்லூரி முடிந்ததும், நேரே லேபுக்குச் சென்றார். சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. அவர் மனம் என்னென்னவோ யோசித்தது.

'எனக்கும் சந்து நாயருக்கும் என்ன சம்பந்தம்? நான் எதற்காக இப்படி கிராமத்துக்கும், காலேஜுக்குமாக அலைகிறேன்? யாருக்காக வினோதமான ஆபத்துக்களை தைரியமாகச் சந்திக்கிறேன்? இதற்குப் பெயர்தான் விதியா? ஸ்ரீதேவி குட்டியையும், அவள் தாயையும் சந்து நாயர் கொன்றுவிட்டு சொத்தை அனுபவிக்கிறார். அவருடைய மருமகன், தன்னுடைய மாமனின் நடவடிக்கைகள் பிடிக்காமல் ஒதுங்கி வாழ்ந்தான்.

மந்திரவாதம் செய்யும் எதிரிகளோடு நான் மோதுவது யாருக்காக? ஸ்ரீதேவியின் சொத்தை மீட்டு யாருக்குத் தரப்போகிறேன்? இந்தப் போராட்டத்தில் பிரபாகரனை இழந்து விட்டேனா, இல்லையா என்றே தெரியவில்லை. அவனுடைய ஆத்மா எங்கே இருக்கிறது? அவனுடைய உடம்பில் புகுந்து கொண்டிருக்கும் கோவிந்தனை விரட்டியடித்தால், ஒருவேளை மறுபடியும் பிரபாகரனுக்கு உயிர் கிடைக்கலாம். ஸ்ரீதேவியோ இனி உடம்பு இல்லாமல் அலையவேண்டிய நிலைக்கு வந்துவிட்டதாகச் சொல்கிறாள்.

அமைதியாகப் போய்க் கொண்டிருந்த வாழ்க்கையில் புயலடிக்க வைத்துவிட்டாளே ஸ்ரீதேவி! யோசித்துப் பார்த்தால், அவளுக்காக, அவளுக்காக மட்டுமே தான் இத்தனை தூரம் போராடுகிறோம். அந்தக் களங்கமில்லாத ஆத்மா, சந்து நாயரை ஒழித்துக் கட்டினாள் நிம்மதி அடையும். அவளுடைய தாயையும், அவளையும் கொன்றவர்களைப் பழி வாங்க என்னுடைய உதவியை நாடி வந்திருக்கிறாள். அவளுடைய ஆத்மா சாந்தியடைய எத்தனை ஆபத்துக்கள் வந்தாலும் சமாளிக்க வேண்டியதுதான்...' குமார் ஒரு முடிவுக்கு வந்தபோது, லேபின் கதவருகே ஏதோ சத்தம் கேட்டது. இரவு விளக்கின் ஒளியில் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் 12.05 என்றது கடிகாரம்.

'யார் இந்த நேரத்தில் லேபுக்கு வராங்க...?' என்று யோசித்தபடி எழுந்தார் குமார். அப்போது திடீரென்று அந்தக் கதவு வெடித்துத் திறந்தது.

*(வாசனை வீசும்....)*

# மனதுக்கு நிம்மதி

# எதிர்ப்புக்களை வெல்ல ‘எலி’மையான வழி!

**எந்த** அலுவலகமாக இருந்தாலும் சரி, அங்கே இரண்டு விதமான ஊழியர்களைப் பார்க்க முடியும். ஒன்று - கருமமே கண்ணாயினார். என்ன வேலை வந்தாலும் இழுத்துப் போட்டுக்கொண்டு முடிக்கிற டைப்.

“அந்த மானேஜர் மனசுல என்ன நினைச்சுக்கிட்டு இருக்காரு? எனக்கு என்ன நாலு கையா இருக்கு? இதை எப்படி ஒரே நாள்ல முடிக்க முடியும்?”



என்பது மாதிரி எப்போதும் புலம்புகிறவர்கள் இன்னொரு வகை.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்... ஒருவர் எப்போது மற்றவர்களைக் குறை கூறுவார்?

ஒரு வேலையைச் செய்ய கையாலாகாமல் இருக்கும் போது, தனக்கு அதிகாரம் இல்லை என்று ஒருவர் நினைக்கும் போது - இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தான் இதுபோன்ற புலம்பல்கள் அதிகமாகக் கிளம்பும்.

“உங்களுக்குத் தெரியாது சுவாமி... நீங்க முன்னே பின்னே ஏதாவது ஆபீஸ்ல வேலை செஞ்சிருந்தாத்தானே இதெல்லாம் தெரியும்? எங்க ஆபீஸ்ல ஆயிரத்தெட்டு பாலிடிக்ஸ் இருக்கு சார்... என்னைவிடக் குறைவாப் படிச்சவன், திறமையே இல்லாதவனுக்கு எல்லாம் எங்க மானேஜர் பிரமோஷன் கொடுத்து, எனக்கு மேலே உட்கார வெச்சிருக்காரு... நான் எப்படி சுவாமி அவங்ககிட்ட உற்சாகமா வேலை செய்றது?” - சமீபத்தில் இளைஞர் ஒருவர் என்னிடம் இப்படிக் கேட்டார்.

திரும்பத் திரும்ப என்னிடம் வந்து இப்படி முறையிடுபவர்களிடம் நானும் திரும்பத் திரும்பச் சொல்கிற விஷயம் இதுதான்... உங்கள் பதவி என்ன என்பதை வைத்து யாரும் உங்களை மதிக்க மாட்டார்கள். நீங்கள் எப்படி வேலை செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே உலகம் உங்களை மதிக்கும்....

எந்த ஒரு வேலையைச் செய்யும் போதும் ஆயிரம் ஆயிரம் இடையூறுகள் வரத்தான் செய்யும். பிரச்சினைகளும், சிக்கல்களும், சவால்களும் வராமல் வாழ்க்கையில் முன்னுக்கு வந்தவர்கள் என்று யாருமே கிடையாது!

புதிய கடல் மார்க்கங்களைத் தேடி கொலம்பஸ், வாஸ்கொடகாமா போன்றவர்கள் பயணம் செய்த போது, அவர்களின் கப்பல்கள் எத்தனையோ முறை புயல்களைச் சந்தித்திருக்கின்றன. தோமஸ் அல்வா எடிசனின் பரிசோதனைக்கூடமே ஒருமுறை எரிந்து சாம்பலாகி இருக்கிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இறுதியில் அவர்கள் ஜெயித்தார்கள்.

மானேஜர் பற்றிக் குறைப்பட்டுக் கொண்ட நண்பரிடம் நான் தொடர்ந்து சொன்னேன்... இவர்களுடைய பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நீ சந்திக்கும் தடைக்கற்கள் எல்லாம் தூசு... செய்கிற வேலையை ஒரு தவம் மாதிரி எடுத்துக் கொண்டு செய்தால், நீ எதிர்பார்க்காத அளவுக்கு உன்னிடமிருந்து சக்தி வெளிப்படும். இதுதான் நிஜம்...

யோக சூத்திரத்தை இயற்றிய ‘பதஞ்சலி மாமுனிவர்’, இதை இன்னும் அழகாகச் சொல்வார். நீங்கள் என்ன நல்ல காரியம் செய்தாலும் சரி, அதைக் கர்ம சிரத்தையுடன் தவம் மாதிரிச் செய்தால், வானத்தில் இருக்கும் மாய சக்திகள் எல்லாம் அந்தக் காரியம் ஜெயமாக உங்களுக்கு உதவி புரியும்...”

அது சரி... நயவஞ்சகர்கள் நிறைந்த உலகத்தில், அவர்களை மீறி வேலை செய்வது எப்படி? இதோ இந்தக் கதையைப் படியுங்கள்.

ஒரு காட்டில் சுதந்திரமாக ஓடியாடிக் கொண்டிருந்த ஓர் எலியின் மீது ஒரு பூனை கொலைவெறியோடு பாய்ந்தது. மின்னல் வேகத்தில் தப்பியோடிய எலி, ஒரு பொந்துக்குள் புகுந்துகொண்டது. அதே சமயம், பூனை சற்றும் எதிர்பாராத விதமாக, வேடன் ஒருவன் விரித்து வைத்திருந்த வலையில் சிக்கிக்கொண்டது. இதைப் பார்த்துக் குஷியான எலி, சுதந்திரமாக வெளியே வந்து பூனையின் முன் ஆடிப் பாடியது.

அப்போது எலியை நோக்கி ஒரு கழுகு பசியோடு பறந்துவர, எலி பதறியது. பொந்துக்குள் ஓடி ஒளிந்து கொள்ளுமளவுக்கு அதற்கு நேரம் இல்லை. அதனால் புத்திசாலித்தனமாக வலையில் சிக்கியிருந்த பூனையைப் பார்த்து, “உன் மடியில் வந்து நான் உட்கார்ந்துகொள்கிறேன். இதற்கு நீ என்னை அனுமதித்தால், கழுகு இந்த இடத்தை விட்டுப் போனதும் நான் வலையை அறுத்து, உன்னை வெளியே கொண்டுவருகிறேன்..” என்றது.

பூனை ஒப்புக்கொள்ள, எலி ஓடிப்போய் பூனையின் மடியில் உட்கார்ந்து கொண்டது. இப்போது எலியிடம் வாலாட்டினால் பூனையால் நமக்கு ஆபத்து வரும் என்று அஞ்சி, அந்த இடத்தை விட்டே பறந்து சென்றுவிட்டது கழுகு!


அதன்பின், வலையை விட்டு வெளியே வந்த எலி, “கொஞ்சம் இரு! நான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். அப்போதுதான் என்னால் தெம்பாக வலையைக் கடித்து உன்னை விடுவிக்க முடியும்!” என்று சொல்லிவிட்டுப்போய் இரண்டு மணிநேரம் கழித்துத் திரும்பி வந்தது.

எலி ரொம்பவும் தாமதமாக வந்ததைப் பார்த்து ஆத்திரமடைந்த பூனை, “நீ வாக்குத் தவறிவிட்டாய்...” என்று திட்டியது. அப்போது வேடன் தூரத்தில் வர, பூனை பதறி, எலியைப் பார்த்து, “காப்பாத்து!காப்பாத்து!!” என்று பயத்தில் கத்த... எலியும் நிமிடத்தில் வலையை அறுக்க, வேடன் ஓடிவருவதற்குள் பூனையும் எலியும் திசைக்கு ஒன்றாக ஓடித் தப்பின!

அத்தனை விஷயங்களையும் மரத்தின் மீது அமர்ந்து நிதானமாகப் பார்த்துக் கொண்டிருந்த குரங்கு, அடுத்த நாள் எலியைப் பார்த்து நிதானமாகக் கேட்டது...

“கழுகு அந்த இடத்தைவிட்டுப் போன உடனேயே பூனையைக் காப்பாற்றி இருக்கலாமே... பூனையை ஏன் காக்க வைத்தாய்?”

“நல்ல கதை! வேடன் வருவதற்கு



முன்பே நான் பூனையைக் காப்பாற்றி இருந்தால், பூனை என்னைக் கொன்றிருக்காதா? வேடன் வந்த பிறகு, அதை நான் காப்பாற்றியதால் தான் பூனையும் பிழைத்தது...நானும் அதனிடமிருந்து தப்பித்தேன்!” என்றது எலி.

ஒரு வகையில் அலுவலகமும் காடு மாதிரித்தான். இங்கேயும் வேடர்கள், பூனைகள் உண்டு. நீங்கள் ஒரு சாதாரண எலியாக இருந்தால்கூடப் பரவாயில்லை...

சாமர்த்தியமாகச் செயற்பட்டால் எந்த எதிர்ப்புக்களையும் வெல்லலாம்!

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 195க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ஜே. மதன், ‘நீ ஜொய்ஸ்’ பியூட்டி சலூன், ஆஸ்பத்திரிச் சந்தி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. கே. எம். எஸ். ஆப்டீன், போல்ஸ் வீதி, புத்தளம்.
2. ச. சொ. மகிழ்ராஜ், 70/3A, அலன் ஒழுங்கை தெஹிவளை.
3. எஸ். மன்சூர், ஆலிம் வீதி, மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா - 03.
4. தி. கவிதா, பெண்கள் விடுதி, வந்தாறு மூலை, செங்கலடி.
5. கே. ரேவதி, 13/10, அலெக்ஸ்சாந்திர வீதி, கொழும்பு - 06.
6. எஸ். எப். ரம்சானி, டிமெல்வத்தை, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
7. எம். ஜே. பெர்னாண்டோ, 30/3 சென். லூசியஸ் ஒழுங்கை, கொழும்பு - 13.
8. எம். சி. கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை - 05.
9. தர்மிக்கா - தர்மதாஸ், புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.
10. என். பர்ஹானா, எருக்கலம்பிட்டி, மன்னார்.

## குறுக்கெழுத்துப் போட்டி 197

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | ■ | 22 | 23 | ■ |
| ■ | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1.கிறிஸ்தவர்களின் பண்டிகை.
7.அக்கிரமம் அல்லது தீய செயல் (குழம்பியுள்ளது).
11.அழுக்கு அல்லது குற்றம் என்று பொருள்படும் (திரும்பியுள்ளது).
13.பகல் பொழுதையும் குறிக்கும்.
22.சில பழங்களின் உள்ளீடு.
28.உயரமான இடத்தில் அமைக்கப்படும் தட்டு, அல்லது காவல் மேடை (குழம்பியுள்ளது).
31.பாம்பினங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
35.முன்னைய காலங்களில் இதற்கு புறாக்களைப் பயன்படுத்தினர் (திரும்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. இலங்கையிலிருந்து வெளியாகும் வாரப்பத்திரிகை ஒன்று
2. நீர்ப்பாசனத்துடன் தொடர்புடையது (குழம்பியுள்ளது).
3. விளையாட்டுகளில் உருட்டப்படும் கட்டை (குழம்பியுள்ளது).
6. அனுமானைக் குறிக்கும் (குழம்பியுள்ளது).
16. சங்கீதத்தில் முக்கிய அங்கம் வகிப்பது.
23. இலங்கையிலுள்ள மாவட்டங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
26. மூக்குத்துளையை இவ்வாறு கூறுவர். (தலைகீழ்)
30. கட்டிடத்தின் ஆதாரம் என்று கூறலாம் (தலைகீழ்)

**குறுக்கெழுத்துப் போட்டி 195 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ [1] | ர [2] | வு [3] | செ [4] | ல [5] | வு [6] |
| ந [7] | ரி [8] | ■ | தி [10] | ம [11] | ■ |
| ம் [13] | ம [14] | க [15] | ■ | க [17] | லி [18] |
| ■ | வு [20] | ■ | ச [22] | ம் [23] | வ [24] |
| ■ | ■ | ரு [27] | த [28] | ■ | ட [30] |
| வி [31] | ம் [32] | ம [33] | ம் [34] | ■ | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 12.12.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-197
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

## கிராமத்துச் சாசனம்

உன் கண்ணீரால் என்னைத் துடைத்துவிட்டு நீ இன்னொருவனுக்கு உன்னை ஒப்படைக்கப் போகின்றாய் என்ற உன் திருமணச் செய்தி எனக்கு நெருப்பு வைத்தது.

நீ இன்னொருவனுக்கு முத்தமிடப் போகின்ற நிகழ்ச்சி என்னைத் துண்டுதுண்டாக்கியது.

என் கனவுகள் காயப்பட்டன.

என் நினைவுகள் மிதிபட்டன.

என் கற்பனைகள் அத்தனையும் செத்துப் போயின.

உன் மணநாளுக்கு முதல் நாளே நான் ஊரைவிட்டு மறைந்தேன்.

உன்னை என்னிலிருந்து அழிப்பதற்காக நகரத்துக் காற்றுச் சுவாசித்தேன்.

உன் புன்னகை என் ஞாபகங்களில் தேங்கி நிற்கும் போது,

உன் வார்த்தைகள் அடைமழையாக என்னை நனைக்கும்போது, நான் உன்னிலிருந்து எப்படித் தப்பிச் செல்ல முடியும்?

ஐந்து வருடங்கள் உதிர்ந்துவிட்டன.

காதல் கல் எழுத்து என்று கற்றுக் கொண்டேன்.

அது கிராமத்துச் சாசனம் என்று ஒப்புக் கொண்டேன்.

ஐந்து வருடங்களின் அழிவிற்குப் பிறகு என் கிராமத்துத் தென்றலை உள்ளிழுக்கிறேன்.

என் பாதங்கள் அந்த மண்ணை வணங்கின.

அதோ அந்த ஆலவிருட்சம் என் ஞாபகத்திற்கு நீர்வார்க்கிறது.

உன் கவிதைகள் புடிச்சிருக்கு. உன்னையுந்தான்.

‘ஆல மரத்தடியில் சந்திக்கவும்.’

நீ என் மீதான காதலை வெளியே வைத்தாய்.

உன்னைப் பற்றி என் இதயம் செதுக்கிய கவிதைகள் உன்னோடு பேசியிருக்கின்றன.

‘நீ
விழுதில்
ஊஞ்சல் ஆடினாய்
ஆலமரம்
ரோஜாப் பூக்கள் பூத்தன.’

இப்பொழுதும் எனக்குள் நீ பூக்கள் செய்து கொண்டுதான் இருக்கிறாய்.

நான் நடந்தேன் உன்னைச் சுமந்து கொண்டு.

உன் வீட்டைக் கடப்பதற்கு என் கால்கள் மறுத்தன.

‘உன் கணவன், குழந்தைகள் இருந்தாலும் பரவாயில்லை. உன்னிடம் சில சொற்கள் சொல்லியாகணும்.’ என் மனம் கட்டளை செய்தது. உன் வீட்டுக்குள் நுழைந்தேன். நீ எழுதிக் கொண்டிருந்தாய்.

சரசு என்றேன்.

நீ கண்களால் என்னில் விழுந்தாய்.

அந்த நொடியில் உன் அம்மா வந்தாள்.

த...ம்...பி....! நீங்...களா...? கல்யாணத்தன்று விஷம் குடிச்சுட்டா! நீங்க...இல்லாம...வாழ்றதில்ல என்று இத்தன வருசமாக் காத்துட்டிருக்கா...! இதோ பாருங்க! ஐந்து வருசமா உங்களுக்குக் கடிதம் எழுதிக் கிட்டிருக்கா...அப்படி உங்க மேல்ல உசிரை வெச்சுருக்கா...தம்...பி! அம்மா உடைந்தாள்.

நீ...நீ...ங்...களா...? நீ ஓடிவந்து என்னை அணைத்தபடி அழுதாய்.

உன் காதலிடம் நான் தோற்றுப் போயிட்டேன்.

என்னை மன்னிச்சுடு! என்று நான் அழுதேன்.

‘மன்னிப்பால் நம்ம காதல் அவமானப்பட வேணாம் என்றாய் நீ!’

# வருங்கால வசந்தம்...!

**காலையிலேயே** மழையால் பூமி நனைக்கப் புறப்பட்டிருந்தது. மழைக்கு இதமாக வீதியோர டீக் கடைகள் சுறு சுறுப்பாக இயங்கத் தொடங்கியிருந்தன. சராலென்று




நீரைக் கிழித்தபடி வாகனங்கள் கடந்து போய்க் கொண்டிருந்தன. இந்த சூழலில் மழையை ரசித்தபடி பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸிற்காய் காத்துக் கொண்டிருந்தான் சுரேஷ்.

மெல்லிய மழையின் சாரலை விலக்கியபடி, தலையை எட்டி தூரத்தே வரும் பேருந்தை இனங்காண போனவனை சில்லென்று நனைத்துப் போட்டது கடந்து சென்ற லேடி மோட்டார் பைக்கின் அவசர பிரேக் அடிப்பு. "சே...என்ன பொம்பிள" என திட்டப் போனவனின் வாய் திறக்க இடம் தராமல் அவன் முன் ஆஜராகினாள் அந்தப் பெண். அவளின் தேவதைத் தனமான அழகின் முன் அடித்து மூட்டப்பட்டன அவனின் இதழ்கள். அவளே சொன்னாள் "ஐ ஆம் வெரி சொரி." கவனிக்காம செய்துட்டேன். ஒரு அவசரம் அதான். இவன் பரவாயில்ல என, சட்டென்று தனது கைப்பையை திறந்து தண்ணீர் போத்திலை எடுத்துக் கொடுத்தாள். இதால கழுவிக் கொள்ளுங்க, ஏதாச்சும் முக்கிய விசயமா போறீங்களா...? அவளே கேட்டாள். இவன் ஆமா ஒரு இன்டர்வியூவுக்குப் போறேன். அவள் அச்சோ, வெரி சொரி இந்த நேரத்தில நான் தான் சனியன் மாதிரி குறுக்கிட்டிட்டேன். மன்னிச்சிடுங்க என்றாள். அவன் மீண்டும் பரவாயில்லீங்க. அவளாகவே முடித்தாள் உங்க பஸ் வந்திட்டிது போல, அப்ப நான் வர்றேன் இன்டர்வியூவப் பயப்படாம ஃபேஸ் பண்ணுங்க. ஆல் தி பெஸ்ட். லேடி மோட்டார் பைக் அவனுக்கு அவகாசம் வைக்காமல் பறந்தது.

அவள் பேச்சில் அவன் மேல்பட்ட அரைவாசி சேற்றுத் துளிகள் அவிழ்ந்து கொட்டியிருந்தன. அவசரமாய் பஸ்ஸினுள் நுழைந்தான் சுரேஷ். தேவதை முகம் கனநேரம் நிலைத்துப் போனது அவன் மனத்தில். ஆனாலும் அடிக்கடி அவனை அடித்துப் போட்டது வீட்டு நினைவு. வீட்டில் ஒரே பிள்ளை. வேலையில்லாப் பட்டதாரி. வேலைக்கு முன் இவனுக்குக் கல்யாண கோலம் காண வேண்டும் என்பது பெற்றவர்களின் அவா. குடும்பத்திற்கேற்ற பிள்ளை என்பதால் மறுப்பேதும் இன்றி சம்மதித்து விட்டான். ஆனால் வேலை இடறியது. அதுதான் இப்போது அலுவலக வாயில்களை அளக்கத் தொடங்கியிருந்தான்.

இவன் ஒரு மாதிரியான இலட்சியவாதி. அதாவது தான் கட்டப் போகும் பெண்ணைத் திருமணத்தன்றே பார்ப்பதென்ற சபதம். சரியான தைரியசாலிதான். இதற்குப் பெண் வீட்டாரும் சம்மதித்து விட தனக்கென்ற உறுதியான வாழ்விற்காய் வேலை தேடி புறப்பட்டிருக்கிறான். இந்த நேரத்தில் இடையில் மாட்டிக் கொண்ட தேவதை முகம் அவன் நினைத்துப் பார்க்க சந்தர்ப்பமே இல்லை.

அலுவலகம் வந்து சேர 8.30 ஆகி இருந்தது. நேர்முகப் பரீட்சைக்கு வழக்கமான ஆள் கூட்டம் இல்லை. தனக்கான இருக்கையில் அமர்ந்து கொண்டான். அப்போது அவனைக் கடந்து அதே தேவதை முகம். ஆச்சரியம் இருவர் விழிகளிலும். "எங்க கம்பெனியில தான் என்று சொல்லவே இல்லையே" என்றவள் 'அவனின் அருகில் அமர்ந்து நான் இருந்த போஸ்ட்க்குத் தான் இப்ப இன்டர்வியூ எனக்குக் கல்யாணம் பேசியிருக்காங்க. அதனால தான் என் வேலையை விடப் போறேன் என்றாள். அவன் ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டும் வேர்க் பண்ணலாமே? என்றான். அப்பிடித்தான் எல்லா கணவர்மாரும் முதல்ல சொல்லுவாங்க. ஆனா அவங்கள சரியாக கவனிக்க முடியாம போகும் போது மனைவி மேல எரிஞ்சு விழுவாங்க. அதனாலதான் நிறைய குடும்பத்தில் பிரச்சினை. அதான் நான் என் வேலையை விட்டிட்டு என் குடும்பத்த கவனிக்கப் போறேன். என் கணவருக்கு நல்ல மனைவியாக இருக்கப் போறேன் என்றவள் மீண்டும் ஒருமுறை வாழ்த்துக் கூறிவிட்டு விடைபெற்றாள். ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான் சுரேஷ். கொடுத்து வைச்சவன் வாரவன் இவன் எண்ணிக் கொண்டான்.

நேர்முகப்பரீட்சை முடிந்து வீடு வந்து சேர 3 மணி ஆகியிருந்தது. நிச்சயம் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை சுரேஷிற்கு. ஏனெனில் அந்தப் பதவிக்கான அனைத்து தகைமைகளையும் இவன் பூர்த்தி செய்திருந்தமை தான். ஒருவித உற்சாகத்துடன் வீடு நுழையும்போதே ஹோலில் அதிகரித்த சிரிப்புச் சத்தம் கேட்டது. சந்தோஷமாக இருந்தது வீடு. கல்யாணத்திற்கு முன்பே யாரும் சொந்தக்காரர்கள் சந்தோஷம் பகிர வந்திருப்பார்களோ என எண்ணிக் கொண்டு உள் நுழைந்தவனை ஒன்றுவிட்ட தங்கையின் குறும்பு பேச்சு இழுத்தது. "என்ன மாப்ள பொண்ண பார்க்க மாட்டேன்னிட்டு, பார்த்து பார்த்து அசடு வழியிறீங்களாமே" என்றவளை மறுத்துப் பேச நினைத்து திரும்பிய சுரேஷ் ஆச்சரியத்தில் அசந்து போனான்.

அங்கே அதே தேவதை முகம் "நீங்க இங்க..." என்றவனை இடைமறித்தவள் "நான் தான் நீங்க கட்டிக்கப் போற மைதிலி. என்ன ஆச்சரியமா இருக்கா? உங்கள நான் தான் கவனிக்கோணும் எண்டு மட்டுமில்ல, உங்களுக்கு நல்ல வேல கிடைக்கணும். அதுக்காகவும் தான் என் வேலய விட்டேன்" என்றவளை பெருமிதத்துடன் பார்த்தான் சுரேஷ். அந்த சூழலில் தன் அவசியம் இன்மையை உணர்ந்து தங்கை நழுவினாள். இருவர் உள்ளங்களிலும் விட்டுக் கொடுப்பின் விளைவில் முளைக்கத் தொடங்கியிருந்தது ஒரு காதல் மரியாதை. வெளியில் மழை பலனை எதிர்பாராது மீண்டும் பொழியத் தொடங்கியிருந்தது.

# அப்பா

**தனியார்** வானொலி ஒன்றின் பாட்டொலியுடன் வேலை நடந்து கொண்டிருந்தது. மூன்று பேர் முடி வெட்டிக் கொண்டிருக்கவும், மேலதிகமாக இரண்டு பேர் காத்திருக்கின்ற நிலைமையில் சிவாவும் மகனும் சலூனுக்குள் புகுந்தனர்.



"ஆ...வாங்கோ...இருங்கோ..."

சலூன் காரனின் அன்பான உபசரிப்பு சிவாவுக்கு எப்போதும் பிடித்தமான ஒன்று.

இண்டைக்கு லீவு நாள் எண்டதாலை ஆக்களாக் கிடக்கு.

"ஓமோம்...ஓமோம்...இந்தா முடியுது."

"பரவாயில்லை அதுவரைக்கும் பேப்பரைப் பார்க்கிறன்" என்று சிவா நாளிதழ் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு மூலையில் இருந்த கதிரையில் இருந்து கொண்டான்.

அப்பா...வினோத் மாதிரி வெட்டச் சொல்லுங்கோ.

ஏன் வினோத் எப்படி...வெட்டியிருக்கிறான் என்று சிவா கேட்கவும் இரண்டு பக்கமும் காதுக்கு மேலாக கைகளை உரசியபடி மகன் சஜி,

இங்கே உப்பிடியே ரெண்டுபக்கமும் மட்டும் குறைச்சு வெட்டினால் போதும்.

ம்...ஹூம்...வேண்டாம் பிறகு டீச்சர் அடிப்பா.

அப்படியெண்டால் வினோத் மட்டும் அப்புடி வெட்டி இருக்கானே.

அவன் எப்புடியெண்டாலும் வெட்டியிருக்கட்டும், உமக்கு அப்புடி வெட்ட முடியாது என்று கூறிக் கொண்டிருந்த சிவாவை, இடைமறித்தது சலூன் காரரின் குரல்.

சரி...அண்ண வாங்கோ.

இந்தா வாரன்...சஜி இதில இருங்கோ.

என்ன சொல்லுறார் மகன்

என்னத்தச் சொல்லுறது. அவருக்கு அவரின்ர ஸ்கூல் பிரண்ட்மார் மாதிரி முடிவெட்டவேணுமாம்.

ஓம்...இப்ப தெரியாதே...பெடியள் புதுப்புது டிசைன்களில வெட்டினம்.

எண்டாலும் படிக்கிற வயசில அப்புடியெல்லாம் வெட்ட முடியுமே...நான் படிக்கிற காலத்தில அப்பா சலூனுக்குக் கூட்டிக் கொண்டு போனால் ஒரே வெட்டுத்தான். அதுவும் 'பொலிஸ் கட்' எண்டு சொல்வார்.

அந்தக் காலப் பிள்ளையள் மாதிரியே இப்ப பிள்ளையள்,

இல்லையே...அண்டைக்கு உங்கட அப்பா சொல்லேக்க உங்களுக்கும் உப்பிடித்தான் இருந்திருக்கும்.

உண்மைதான்...அதை விடுங்கோ என்ன நாட்டு நடப்பு.

என்ன நாட்டு நடப்பு...இவை பாதையை ஒரு நாளைக்குத் திறக்க முடியுமெண்டினம் அவை சண்டைதான் தீர்க்கமான முடிவு எண்டினம். உப்பிடி மாறிமாறி சொல்லினம். ஆனால் ஒண்டும் நடந்த மாதிரி இல்லையே.

அது தானே அண்ண...நாளைக்கு சண்டை துவங்கிச்சுதெண்டால் எங்களைக் கொழும்பிலையும் இருக்க விடமாட்டாங்கள் என்று சலூன்காரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஒலித்துக் கொண்டிருந்த வானொலியில் மணித்தியாலச் செய்தி சொல்லுது.

'யாழ்ப்பாணத்தில் இரண்டு இளைஞர்கள் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்' என்று.

சரி அண்ண சேவ் எடுக்கவோ?

ஓம் நம்பர் டூவைப் போட்டுப்பிடிச்சுவிடுங்கோ.

ம்...சரியா...மகனை வரச்சொல்லுங்கோ.

அப்பா பிளீஸ் சொல்லுங்கோவன்.

ம்...ஹூம்...பிறகு டீச்சர் எனக்கும் பேசுவா.

மேலால கொஞ்சமாக குறைச்சுப் போட்டு தம்பி சொல்லிற மாதிரி ரெண்டுபக்கமும் நோட்டில போட்டுப் பிடிச்சால் என்ன?

அவரோடை சேர்ந்து நீங்களும்...பேசாம 'ஸ்கூல் கட்' வெட்டி விடுங்கோ... என்று சிவா சொல்லவும் உதடுகளை உப்பிக்கொண்டு கண்ணாடிப் பக்கமாக திரும்பிக் கொண்டான் சஜி சலூன்காரன்.

'எத்தினையாம் வகுப்புப் படிக்கிறியள்.'

'இயர் சிக்ஸ்.'

'எந்த இஸ்கூல்'

'ஹிண்டு போயஸ்'

'உங்கட பிரன்ஸின்ர பெயர் என்ன,'

'வினோத்'

'டியூஸன் போறனீங்களோ'

'ஓம்'

'என்ன பாடம்'

'இங்கிலீஸ்'

சைட்டில் குறைச்சு லேஷா வெட்டவோ என்றதும் திரும்பி சிவாவைப் பார்த்துக் கொண்ட சஜி, ம்...ஹூம்...அப்பா சொன்ன மாதிரி வெட்டுங்கோ.

சஜியின் பதில் சலூன்காரருக்குக் கன்னத்தில் அடித்ததுபோல் இருந்தது. திரும்பி சிவாவைப் பார்த்தார். சிவா நாளிதழின் செய்திகளில் மூழ்கிப் போயிருந்தார்.

ஏன் அப்பா அடிப்பாரோ

ம்...ஹூம்...அப்பா ரொம்ப நல்லவர் என்ற பதில் கண்கலங்கச் செய்தது சலூன்காரருக்கு.

அப்படியெண்டால் வினோத்தின்ர அப்பா


அவனுடைய அப்பா செத்திட்டார்.

எப்புடி

யாரோ சுட்டிட்டினம் என்று கூறிவிட்டு, கதிரையை விட்டு சஜி இறங்கிய போது தன் சின்ன வயதில் தனது அப்பாவை இழந்து வளர்ந்த காலம் சலூன்காரருக்கு சுரீர் என்றிருந்தது.

# கடைசி நொடி

***இனியா*** பெயருக்கேற்பவே இவள் மிகவும் இனிமையானவள். படிப்பில் மிகுந்த கெட்டிக்காரி. சிறுவயதிலேயே யுத்தத்தில் தந்தையை இழந்தவள். தாயின் அரவணைப்பில் வாழ்ந்தவள். அவளது தாய் வீடு வீடாகச் சென்று கூலி வேலை செய்வதையும், அங்குள்ளவர்கள் தாயை அவமானப்படுத்துவதையும் பல முறை பார்த்து வேதனைப்பட்டவள், தான் நன்கு படித்து அம்மாவை ராணிபோல வாழவைக்கவேண்டுமென்று நினைத்தாள். வணிகப்பிரிவில் உயர்தரக் கல்வியை சிறந்த முறையில் நிறைவேற்றி, வங்கியொன்றில் வேலைக்கும் சேர்ந்தாள். ஆனால் அவள் வெளியூரிலேயே வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவள் தன் தாய்க்காகத் தனியே வெளியூர் சென்று வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வேலையும் பார்க்கிறாள். இரண்டு வருடங்களின் பின் தன் திறமையால் பல பதவி உயர்வுகளைப் பெற்றாள். தாயின் ஆசைக்கேற்ப வீடு கட்டினாள். தாயின் பிறந்த நாள் பரிசாக அந்த வீட்டைக் கொடுக்க ஆசைப்பட்டாள். தாயின் பிறந்த தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் ஊருக்குச் செல்லப் புறப்பட்டாள். பஸ்ஸில் ஏறி அமர்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்தாள். எல்லோரும் அம்மாவை எப்படி எப்படி எல்லாம் அவமானப்படுத்தினார்கள். அவர்கள் எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைக்கிற மாதிரி அம்மாவைக் கூட்டிக்கிட்டு வரணும். புது வீட்டைப் பார்த்தா அம்மா எவ்வளவு சந்தோஷப்படுவா? அவங்களைச் சந்தோஷப்படுத்திப் பார்க்கிறதுதான் இந்த ஜென்மத்துல எனக்குக் கிடைக்குற மோட்சம். என்னால அது முடியாமப் போயிருந்தா நிச்சயமா என்னால நிம்மதியா இருக்கவே முடியாது. செத்தாக் கூட முடியாது. திடீரென கேட்டது ஒரு பெரிய சத்தம். அக்கணமே அவள் தூக்கி வீசப்பட்ட உணர்வு, உடல் எங்கும்




தாங்க முடியாத வலி. இரத்தம் உடலிலிருந்து பீறிட்டது. பலரது உயிரற்ற சடலங்கள் அவளருகே. அவர்கள் வந்த பஸ்ஸிற்கும் பெரிய சேதம். இவளுக்கு வலி தாங்க முடியாதிருந்தது. சில நிமிடங்களில் அங்கே பொலிஸார் வந்தனர். அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து இங்கே குண்டு வெடிக்க வைக்கப்பட்டிருப்பதை இனியா உணர்ந்தாள். வைத்தியசாலையிலிருந்து ஆட்கள் வந்து அவளைத் தூக்கிக் கொண்டு சென்றனர். அப்போது அவளுக்கு உடல் வலியை விட, தாயைக் காணவேண்டுமென்ற எண்ணமே அதிகரித்திருந்தது. அந்த வலியுடன் "என்னை எப்படியாவது யாராவது காப்பாத்திடுங்க, பிளீஸ் நான் சாகக்கூடாது. சாகவே கூடாது. டொக்டர், டொக்டர் பிளீஸ் பிளீஸ் என்னை எப்படியாவது காப்பாத்துங்க. நா அம்மாவைப் பார்க்கணும் அவங்களைப் பாத்ததுக்குப் பிறகு எனக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை." அதற்கு மேல் அவளால் ஒரு வார்த்தை கூடப் பேசமுடியாமல் துடித்தாள், அலறினாள், அழுதாள். ஆனால் அவளைக் காப்பாற்ற கடவுளால கூட முடியல. அவளது கடைசி நொடியில் இறைவனைப் பிரார்த்தித்தாள் தாய்க்காக.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

கற்றவர்களிடம் மட்டுமல்ல, கல்லாதவர்களிடமும் இயல்பாகவே சில நல்ல பண்புகள் அமைந்து விடுவதுமுண்டு. கற்றவர்களிடமும், சிலருடைய பழக்க தோஷம் காரணமாகச் சில வேண்டாதவைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவைகளுக்கு முழுமுதற் காரணமாக இருப்பது, இயல்பான குணமே எனத் துணியலாம்.

இன்றைய சமுதாயத்தில் பல்வேறுபட்ட மனப்போக்கு, பல்வேறுபட்ட சிந்தனைகள், சமூகத்தில் கட்டுப்பாடு அற்றுவிட்ட தன்மை இவைகளால் தடம் மாறிப் போகும் வாழ்க்கை முறை - மனதில் தோன்றும் விரக்தி மனப்பான்மை - சகிப்புத்தன்மை இன்மை என்பவைகளால் வரையறை அற்றுப்போய் கீழ்த்தரமான எண்ணங்களில் ஊறிப் போனவர்கள், அதையே அறமாக மாற்ற முயல்கின்றபோது இடர்ப்பாடுகள் அதிகரிக்கின்றன. இதை மாற்றுவதற்கு சட்டம் அவசியமாகின்றது.

ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்குச் சட்டம் முக்கியமானதல்ல. ஏனெனில், அவர்கள் தர்மத்தையே துணையாகக் கொண்டு வாழ்பவர்கள். ஆதலால், தர்மத்தை மதிக்காதவர்களுக்கு கெதிராகவே சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.


**"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்"** குறள் : 1078

அறிவுள்ளவர்கள் தவறு விடும் போது, அத்தவறைப் பிறர் சுட்டிக் காட்டியபொழுதே உணர்ந்து திருந்திவிடுவர். அறிவற்ற கீழோர் தண்டித்தால்தான் திருந்துவர். கரும்பைக் கொன்றாலே பயன் தரும்.

## கண்ணீர் சிந்தும் கண்கள் காதற் கண்களோ?

**கீர்த்திவர்மனைக்** கண்டுபிடிக்கும் முயற்சியில் விக்கிரமன் தனது ஒற்றர்களை நாடு முழுவதும் அனுப்பி வைத்திருந்தான். அதன் பயனாக அவனுக்குக் கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி தரக்கூடியவையாக இருந்தன. ஆனாலும், மற்றவர்களிடம் அதை வெளிப்படுத்த முடியாதிருந்ததென்றால், ஒருவேளை அந்தச் செய்தி அங்கயற்கண்ணிக்குத் தெரிந்துவிடக்கூடாதே என்ற கலக்கத்தில்தான்.

தாக்கப்பட்டான் என்ற செய்தி காட்டுத் தீ போல் நாடெங்கும் பரவி, அது அங்கயற்கண்ணியின் காதிலும் பட்டபோது, அவள் துடியாய்த் துடித்தாள். ஆயினும் அவனைப் பார்ப்பதற்கு விக்கிரமன் அனுமதிப்பானா? என்ற தயக்கம் அவளைப் பெரும் துன்பத்தில் ஆழ்த்தியது. அது அவள் உள்ளத்தை மட்டுமல்லாது, உடலையும் வாட்டத் தொடங்கியதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முடியாவிட்டாலும், அவள் படுக்கை அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்ததை கயல்விழி மூலம் விக்கிரமன் தெரிந்து கொண்டான்.



நிலைமை மோசமடைவதற்குமுன், தான் நேரடியாக அவளோடு இது பற்றிப் பேசவேண்டும் என்ற எண்ணத்தோடு உப்பரிகையினுள் அவளது சயன அறையை நோக்கி நடந்தான்.

விக்கிரமன், அங்கயற்கண்ணியின் அறையை அண்மித்ததும், தான் வந்திருப்பதை அவள் ஏற்கனவே அறிந்ததுபோல் கதவைத் திறந்ததுதான் தாமதம் அவள் கண்களிலிருந்து கண்ணீர் ததும்புவதைக் கண்ட விக்கிரமன், "தங்கையே! கயல்விழி உன்னைப் பற்றிச் சொன்னாள். வீணாக ஏன் மனதை வருத்திக் கொள்கிறாய்? கீர்த்திவர்மன் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று வைத்தியர் கூறிவிட்டார். நீ விரும்பினால், அவனைப் பார்த்துவரலாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். ஆனால், இப்படி உண்ணாமல், உறங்காமல் உன்னையே நீ வருத்திக் கொள்வதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாதம்மா. இந்த அண்ணன் இருக்கும் போது நீ எதற்காகக் கண்கலங்கவேண்டும்?" என்று விக்கிரமன் கூறியதும்,

இந்த வேளையில்தான், கயல்விழி அவனைத் தேடிக்கொண்டு வந்தாள். "இளவரசே!" என்று அவள் அழைத்ததும், சட்டென்று திரும்பிய விக்கிரமன், "என்ன கயல்விழி, ஏதாவது அவசரமா?" என்று

### தருவது கற்பகன்

வினவியபோது, "மன்னிக்க வேண்டும் அரசே! தங்கள் நண்பருக்கு விழுப்புண் பட்டிருப்பது எப்படியோ தங்கள் தங்கைக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது" என்று கூறியதும், "நீ ஏதும் கூறவில்லையே?" என்று விக்கிரமன் கேட்டான்.

"தாங்கள் ஏற்கனவே இதுபற்றிக் கூறி இருக்கும் போது, நான் எப்படிச் சொல்வேன்?" என்று அவள் கூறியபோது, அவள் முகத்தில் ஏற்பட்ட கலவரம், நிச்சயமாக அவள் கூறவில்லை என்பத உணர்த்தியது. விக்கிரமன் தொடர்ந்தான்.

"யாருக்கு இந்தவிடயம் தெரியக்கூடாது என்று எண்ணினேனோ, அது தவறிவிட்டது. இனி எதுவும் செய்வதற்கில்லை. நான் உடனே தங்கையைக் காணவேண்டும்." என்று அவ்விடத்தை விட்டு அகன்றான்.

எதிர்பாராதவிதமாக கீர்த்திவர்மன்

"அண்ணா!" என்று நன்றிப் பெருக்கோடு அவனைப் பார்த்தாள் அங்கயற்கண்ணி.

"தங்கையே! உன்னைத்தவிர எனக்கு இந்த உலகத்தில் விலை மதிப்புள்ள பொருள் வேறு என்ன இருக்க முடியும்? உன் நலம்தானே எனது நலம்!" என்றவாறு அவள் கண்களைத் துடைத்துவிட்டான். "அண்ணா! நான் புறப்படட்டுமா?" என்ற கேள்வி எழும் முன்னமே, "நீ புறப்படலாம். அதற்கான ஆயத்தங்களைச் செய்து தருவார்கள்" என்று விக்கிரமன் கூறினான். அங்கயற்கண்ணி புறப்படத் தயாரானாள்.

சிங்கபுரத்து அரண்மனையில் பலத்த காவலுக்கு மத்தியில் பிரமாண்டமானதொரு அறையில் அமைக்கப்பட்டிருந்த மஞ்சத்தில் படுத்திருந்தான் கீர்த்திவர்மன். பணியாட்கள் புடைசூழ இருந்தபோதிலும், எவ்வித சந்தடியுமின்றி இருந்தது அந்தக் கூடம். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போதும், இடையிடையே உடல் வலி ஏற்படும் போதெல்லாம் அவனையறியாமலேயே முனகல் ஒலி எழத்தான் செய்தது. அந்த நிலையிலும், எதிரிகளின் நினைவு தோன்றும் போதெல்லாம் அவன் முகத்தில் தோன்றி மறையும் கோரம், அவனுக்கு எதிரிகளால் ஏற்பட்ட கோழைத்தனமான தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் நிலையில் இல்லையே என்பதை நினைத்துக் குமுறிக் கொண்டிருக்கிறான் என்பதைக் காட்டிற்று.

கோட்டையின் தலைவாயிலில் வந்து நின்ற வண்டியைக் காவலர்கள் சூழ்ந்து கொண்டு சாரதியிடம் ஏதோ வினவியபோது, அருகில் புரவியின் மேல் அமர்ந்திருந்த சேவகன் ஓலையைக் காட்டியதும், வண்டியை உள்ளே செல்ல அனுமதிக்கின்றான் கோட்டை வாயிற் காவலன். ரதம் உள்ளே நுழைந்த போது, மேற்தளத்தில் நின்றவர்களின் கண்கள் அதையே உற்று நோக்கியவண்ணமிருந்தன.

ரதம் அரண்மனை வாயிலில் வந்து நின்றதும், அரண்மனைக் காவலன் அருகில் சென்றான். தாங்கள் யார் என்பதை அடையாளம் காட்டியதும், அங்கயற்கண்ணிக்கு வரவேற்புக் கலந்ததோர் மரியாதை செலுத்திவிட்டு, ஒதுங்கி நின்றான் காவலன். இதைக் கண்டதும் இரு சேடிப் பெண்கள் படிகளில் இறங்கி வந்து, அங்கயற்கண்ணியை அழைத்துச் சென்று கீர்த்திவர்மன் படுத்திருந்த அறைக் கதவைத் திறந்துவிட்டார்கள், அங்கயற்கண்ணி மெதுவாக உள்ளே நுழைந்தாள். சேடியர் இருவரும் அறைக்கு வெளியே நின்று கொண்டனர்.

அடிமேல் அடிவைத்து கீர்த்திவர்மன் படுத்திருந்த கட்டிலருகில் சென்ற அங்கயற்கண்ணி, கீர்த்திவர்மனைக் கண்டதும், கதிகலங்கிப் போனாள். உடலெங்கும் இரத்தக் கறைகளும், கட்டு போட்ட இடங்களில் இரத்தம் கசிந்த வண்ணமும் இருந்தது கண்டு, அவள் என்றுமில்லாதவாறு துன்பக் கடலில் மூழ்கித் தவித்தாள். உள்ளத்தின் குமுறல் அவள் கண்களில் தாரை தாரையாகப் பெருக்கெடுத்தோடியது. அவள் மட்டும் அவனருகில் சிலை போல நின்றாலே தவிர, வாய் திறந்து அவனை அழைக்கக்கூட அவளுக்கு நா எழவில்லை. ஆனாலும் அவள் கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடிய நீர்த் துளிகள் அவன் மார்பில் விழுந்ததும், யாரோ கொதிநீரை மார்பில் கொட்டியது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது கீர்த்திவர்மனுக்கு. அவசரமாகக் கண்களைத் திறந்தவனுக்கு, அவனையே உற்று நோக்கியவண்ணம் நின்றிருந்த அங்கயற்கண்ணியின் கண்களில் இருந்த நீர்க்கோலம் அவன் இதயத்தையே தாக்கியது போலிருந்தது.

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்க மிம்மூன்றும் உடைத்து"**

அதிகாரம் : 109
குறள் : 1085

## சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! போவர் இனி எங்கே போவார்?

*- எஸ் கிருஷ்ணா, மருதானை.*

- முதலில் பாலஸ்தீனம், இப்போது இலங்கை. இரண்டு நாடுகளிலும் நோர்வேயின் சமரச முயற்சியில் சமாதானம் பிறந்து தேனும் பாலும் ஓடுகிறது. அடுத்து எங்கே ஒரு ஏமாளி நாடு இருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டால் அவர் அங்கே போவார்.

✉ "ரவிராஜ் கொழும்பில் சுடப்பட்டார். இந்த நாட்டில் பொலிஸ், சட்டம் இருக்கிறதா?" என்று கத்தியவர்கள், பத்துக் கிலோ குண்டு கொண்டுவந்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப் பட்டதை குறைந்த பட்சமாவது கண்டிக்கவில்லையே! என்ன ஆச்சு அந்த அநியாயவாதிகளுக்கு என்று நான் கேட்டால் துரோகியாகிவிடுவேனா?

*- எம். எம். நிலாம்டீன், தெமட்டகொட.*

நியாயமாகச் சிந்திப்பவர்களை அவர்கள் அப்படித்தான் நினைக்கிறார்கள். அதற்காக அவர்கள் நினைப்பதெல்லாம் சரியென்று ஆகிவிடுமா?

✉ மலையகத்தில் நடைபெறும் வேலை நிறுத்தப் போராட்டம்?

*- வி. இராமச்சந்திரன், கண்டி.*

முதலாளிமாரும், தொழிற்சங்கங்களும் முன்னுரிமை கொடுக்க வேண்டிய போராட்டம் இழுபடுவது அவர்களுக்குத்தான் அவமானம். அநியாயத்திற்கு இது ஒரு தேர்தல் களமாக இல்லாது போய்விட்டது. தப்பித்தார்கள் தலைவர்கள்.

✉ சிந்தியா! பறவைக் காய்ச்சல், சிக்குன் குன்னியா. அடுத்தது என்ன காய்ச்சல் வரும்?

*- ஆர். குமரேசன், கினலன் எல்ல.*

கொலைக் காய்ச்சல் வராமல் இருந்தால் சரி!


✉ இலங்கை விடயத்தில் இந்தியா என்னதான் செய்யப் போகிறது?

*- தி. வசந்தன், திருமலை.*

அனுபவமிக்க இந்தியாவின் நடவடிக்கைகள் சின்னச் சின்னதாக இருந்தாலும் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

✉ புரிந்துணர்வு உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டே பிரச்சினைக்கு திர்வு காண வேண்டுமென எதிர்கட்சித் தலைவர் கூறுவது பற்றி....?

*- சி. கஜேந்திரா, மட்டக்களப்பு.*


விசால்

தனக்கு முக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர உண்மையான விருப்பம் வெளிப்படவில்லை. ஏன் இவரே அதைச் செய்திருக்கலாமே!

✉ சிந்தியா! இலங்கை அரசாங்கம் புலிகளைத் தடைசெய்யுமா?

*- என். மேனன், வவுனியா.*

பயங்கரவாதத்தை நிச்சயமாகத் தடை செய்யும்.

✉ நடிகர் விஷாலினுடைய முகவரியைத் தந்துதவ முடியுமா?

*- கே. கௌதம், திருகோணமலை.*

VISHAL
No. 27, Senthil Andavar Street,
Vadapalani, Chennai - 600 026.
T.P - 23623823.

✉ சிந்தியா! எனக்குக் காக்கிச் சட்டையைப் பார்த்தால் தானாகவே உள்ளூரப் பயம் ஏற்படுகிறதே, என்ன காரணமாக இருக்கும்?

*- து. கெங்காதரன், யாழ்ப்பாணம்.*

போன ஜென்மத்தில் திருடனாக இருந்தீர்களோ என்னவோ! அது சரி தபால்காரரைக் கண்டாலுமா?

✉ இந்திய அணியின் பின்னடைவுக்கு என்ன காரணம்?

*- கு. துஷியந்தன், மன்னார்.*

இவ்வாறான கேள்விகள் காலத்திற்குக் காலம் வருவதுதான். நூறு கோடி பேருக்கு மேலுள்ள இந்தியாவில் 11 பேரை உருப்படியாகத் தெரிவு செய்ய முடியாத கிரிக்கெட் சபையையும், புதியவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காத ஓய்வூதியக்காரர்களையும் இந்தியா கொண்டிருப்பதைவிட கிரிக்கெட்டைக் கைவிடுவதே மேல்.

✉ சிந்தியா! மலரப் போகும் புத்தாண்டு இலங்கைக்கு எப்படி அமையுமென்று ஆருடம் கூறும் பார்க்கலாம்?

*- தி. கலைச்செல்வி, வெள்ளவத்தை.*

கடந்துபோகப் போகும் இவ்வாண்டு வசூலித்துக்கொள்ள முடியாதுபோன கடன்களையெல்லாம் வந்து விடியப் போகும் அடுத்த ஆண்டு வட்டி குட்டியோடு வசூலிக்கப் போகிறது.

✉ கொழும்பில் பல பாதைகள் ஒரு வழிப்பாதையாகக் கப்பட்டிருப்பதால் தாக்குதல்கள் குறையும் சாத்தியம் உண்டா?

*கே. விமல், பம்பலப்பிட்டி.*

பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு இப்படியொரு யுக்தி இருப்பதாக நான் அறியவில்லை.

✉ சிந்தியா! இக்காலத்தில் புறாவைத் தூது விடலாமா?

*எம். சங்கர், களுதாவளை.*

மனிதன் தூது போயே வேலைக்காகவில்லை. மீண்டும் இலை குழைக் காலத்திற்கா போகப் போகின்றீர்கள்.

✉ இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் சென்ற மாணவர்களுக்கும் இலங்கை அரசு பரீட்சை எழுத வசதி செய்துள்ளது பற்றி....?

*கே. மனோகரன், உவர்மலை.*

அகதிமுகாம் சூழல் கல்வி கற்ற ஏதுவானதாக இருக்காது என்றபோதும், கடந்த மூன்று தசாப்தத்திற்கும் மேலாக எம்மவர்களின் இடம் பெயர்வு வாழ்வில் இம் முயற்சி ஒரு மைல்கல்.

# 15ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி!

**இலங்கையின்** சார்பில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை பங்குபற்றிய வீர, வீராங்கனைகளில் இலங்கைக்குக் கூடிய பதக்கங்களைப் பெற்றுக் கொடுத்தவர் தமயந்தி தர்ஷாதான். இவர் 1994 ஆம் ஆண்டு ஜப்பானில் ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற 12 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் முதல் தடவையாக பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார். 1998 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்ற 13 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கங்களைப் பெற்றவர்.

2002 ஆம் ஆண்டு கொரியாவின் பூஷான் நகரில் நடைபெற்ற 14 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றவர். தற்போது டோஹாவில் நடைபெறும் 15 ஆவது ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் காலில் ஏற்பட்ட வலி காரணமாக இவர் போட்டியில் பங்குபற்றவில்லை. இது இலங்கைக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பாகும்.

இவரது இடத்தை நிரப்புவதற்கு இம்முறை அதிவேக ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க தயார் நிலையில் இருந்தார். ஆனால் இவர் தற்போது இலங்கையில் பரவிவரும், சிக்கன் குன்னியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதனால் போட்டிகளில் பங்குபற்றும் உடல்நிலை இவருக்கு இருக்குமா என்ற கேள்விக்குறி தற்போது எழுந்துள்ளது. இவர் இம்முறை 100, 200, 400 x 100 அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் தனது மனைவி சுசந்திகா டோஹா விளையாட்டுப் போட்டியில் நிச்சயம் பங்குபற்றி இலங்கைக்குத்தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொடுப்பார் என்று இவரது கணவரான தம்மிக இந்திக குமார தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இது எந்தளவிற்குச் சாத்தியமாகும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இலங்கைக்குத் தடகளப் போட்டிகளின் மூலம்தான் கூடிய பதக்கங்கள் கிடைப்பது வழக்கம். ஆனால் இம்முறை தர்ஷா, சுசந்திகா ஆகிய இருவரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இதே நேரம் மற்றுமொரு குறுந்தூர ஓட்ட வீராங்கனையான ஜான்ஸி தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பாவித்த குற்றச்சாட்டினால் ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே பெண்கள் பிரிவில் இலங்கைக்குப் பதக்கங்கள் கிடைப்பது தற்போது கேள்விக்குறியாகிவிட்டது.

ஆண்கள் பிரிவில் 100, 200, 400 மீற்றர் ஓட்டங்களிலும், 4x100, 4x400 அஞ்சல் ஓட்டப் போட்டிகளிலும் இலங்கைக்குப் பதக்கங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை பெற்ற பதக்கங்களின் விபரம்:

1951 ஆம் ஆண்டு இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரேயொரு வெள்ளிப் பதக்கம்.

1954 ஆம் ஆண்டு மணிலாவில் நடைபெற்ற இரண்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்கள்.

1958 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற மூன்றாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரேயொரு தங்கப் பதக்கம் மட்டும்.

1962 ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற நான்காவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்கள்.

1966 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்ற ஐந்தாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் நான்கு வெண்கலப் பதக்கங்கள்.

1970 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்ற ஆறாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள்.

1974 ஆம் ஆண்டு தெஹ்ரானில் நடைபெற்ற ஏழாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்கள்.

1978 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்ற எட்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு வெண்கலப் பதக்கங்கள்.

1982 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டியிலும், 1986 ஆம்ஆண்டு கொரியாவில் நடைபெற்ற பத்தாவது ஆசிய விளையாட்டுப் போட்டியிலும் இலங்கைக்கு எந்தவொரு பதக்கமும் கிடைக்கவில்லை.

1990 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற பதினோராவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்கள்.

1994 ஆம்ஆண்டு ஜப்பானில் ஹிரோஷிமாவில் நடைபெற்ற 12 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்கள்.

1998 ஆம் ஆண்டு பாங்கொக்கில் நடைபெற்ற 13 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் மூன்று தங்கம், ஒரு வெண்கலப் பதக்கங்கள்.

2002 ஆம் ஆண்டு கொரியாவின் பூசான் நகரில் நடைபெற்ற 14 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்கள்.


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையான

மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித்

தாயின் அருளைப்

பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அதிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

சந்திப்பு

பண்டாரவளையில்

திங்கள் முதல் சனிக்கிழமை வரை

காலை 8.00 மாலை 6.00

நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்

IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!

தொ. பே. +94-572232441

+94-773227005

சகலவிதமான வசிய மாந்திரீகம்

- வீடு, வியாபார விருத்தி • விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல் • பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83

Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441

Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...


## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

# இந்திய கிரிக்கெட் அணியின் மோசமான ஆட்டம்!

**செஞ்சூரியனில் நடந்த இந்தியா - தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 5 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தைப் பார்க்க இந்திய இரசிகர்கள் பலர் மைதானத்திற்கு வந்திருந்தனர். இந்த ஆட்டத்தில் தென் ஆபிரிக்க அணி துடுப்பெடுத்தாடிய போது தமது அணியினரின் பந்து வீச்சு மோசமாக இருந்தது. இதனால் ஆத்திரம் அடைந்த இந்திய இரசிகர்கள், வீரர்களுக்கு எதிராக**



**கூச்சல் போட்டனர்.**

**பவுண்டரி எல்லைக் கோடு அருகே பீல்டிங் செய்து கொண்டிருந்த வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர்கானையும் ரசிகர்கள் கிண்டல் செய்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த ஜாகீர்கான் கிண்டல் செய்த ரசிகரை நோக்கி தண்ணீர் பாட்டிலை எடுத்து வீசினார். ஜாகீர்கான் வீசிய பாட்டில் சரியாக அந்த ரசிகரின் மேல் பட்டது. இதுமட்டுமல்லாமல் போட்டி முடிந்த பின்னரும் அந்த ரசிகர் இந்திய வீரர்களின் அறைக்குச் சென்றார். இதனால் மேலும் ஆத்திரமடைந்த ஜாகீர்கான், அந்த ரசிகரைத் தாக்கியுள்ளார்.**

**சர்ச்சையைக் கிளப்பியுள்ள இந்த விவகாரத்திற்கு ஜாகீர்கான் மறுப்புத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'நான் யாரையும் தாக்கவில்லை. அவர் வீரர்களின் உடைமாற்று அறைக்குள் அத்துமீறி நுழைந்தார். இதனால் அவரை பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து விசாரித்தனர்.' என்றார்.**

**தாக்கப்பட்டதாகக் கூறப்படும் ரசிகரை பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாகக் கைது செய்தனர். இந்த விவகாரம் குறித்து அவர் கூறியதாவது :-**

**இந்திய அணியினரின் ஆட்டம் ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. அதைப்பற்றி நாங்கள் எங்களுக்குள் சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது பவுண்டரி எல்லைக்கோடு அருகே பீல்டிங் செய்து கொண்டிருந்த ஜாகீர்கான் தண்ணீர் பாட்டிலால் என்னைத் தாக்கினார். என்னை எதற்காகத் தாக்கினீர்கள் என்று கேட்பதற்காக வீரர்களின் அறைக்குச் சென்றபோது, அவர் மீண்டும் எனது சட்டைக் காலரைப் பிடித்துத் தள்ளித் தாக்கினார்.**

**இவ்வாறு அந்த ரசிகர் கூறினார்.**

**தென்னாபிரிக்காவுடனான ஐந்து ஒருநாள் போட்டிகளில் முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. ஏனைய நான்கு போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி அபார வெற்றியடைந்தது குறிப்பிடத்தக்கது.**

## ஜனாதிபதி - பிரதமர்...


*04 ஆம் பக்கத் தொடர்ச்சி....*


நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. "புலிகள் இயக்கத்தைத் தடைசெய்" என்ற கோஷம் உரத்து எழ ஆரம்பித்து விட்டது. இது தொடர்பாக ஆளுந் தரப்புக்குள் அபிப்பிராய பேதங்கள் காணப்படுவதால், மாற்று வழிகள் பற்றியும் யோசிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்து, பயங்கரவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதா? அல்லது இருக்கக் கூடிய அவசரகாலச் சட்ட விதிகளுக்கு மேலும் வலுவூட்டி நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதா என்பதே இன்று பாரிய கேள்வியாக எழுந்துள்ளது. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தைத் தாக்கிய புலி இயக்கத்தின் தலைவர்கள், கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாகச் செல்ல அரசு பாதுகாப்பும் பவிசும் வழங்குவது குறித்தும் காரசாரமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆறாம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கியமான முடிவுகள் எடுக்கப் படவுள்ளன. அரசாங்கம், சகட்டு மேனிக்குக் குறி வைக்காமல், புலிப் பாய்ச்சலைத் தடுத்து நிறுத்தி, தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும் மதித்து ஐக்கிய இலங்கையைக் கட்டிக் காக்க வேண்டும்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 8, கூட்டெண் - 1

8, 17, 26 போன்ற திகதியில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் சனி, சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பார்ப்பதற்குக் குறுகுறுப்பான முக அமைப்புடனும், சிந்தனா சக்தியுடனும், முன் பல் இரண்டு சற்றுப் பெரிதாகவும், சுமாரான உயரத்துடனும், காட்சியளிப்பர். சிலர் மெலிந்தும் இன்னும் சிலர் சதைப்பற்றுடனும் இருப்பர். இவர்களைப் பார்க்கின்றபோது சிறந்த ஞானம் உள்ளவர்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

சுமாராகப் படித்தவராக இருந்தாலும், புத்திக்கூர்மையுடையவராக விளங்குவர். "நூலறிவை விட நுண்ணறிவு சிறந்தது" என்ற கொள்கை கொண்டவர்கள். அன்புள்ளம் கொண்ட இவர்கள் இளமையிலேயே காதல் வயப்படக்கூடியவராதலால் பலர் காதல் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். பலருக்கு உதவுவதில் முன்நின்று நல்ல பெயர் எடுப்பர். யார் எதைச் சொன்னாலும் தன் மனதில் உதித்தபடியே செயற்படுவர்.

இவர்களது வயிறு அடிக்கடி கோளாறு செய்வதால் திடீரென்று சோர்வுறுவர். ஆனால் பெயர் நன்றாக அமைந்துவிடுமேயானால், இளமையிலேயே சகல வசதிகளும் பெற்று வாழ்கின்றனர். இன்னும் சிலர் இளமையில் கஷ்டப்பட்டாலும், தனது முயற்சியால் படிப்படியாகப் போராடி உழைத்து உயர்ந்த இடத்தை அடைகின்றனர்.

வாகனம், வீடு, கண்டிப்பாக இவர்களுக்கு அமைந்து விடுகிறது. அப்படி உயர்ந்த நிலையை அடைந்தாலும், தனது பழைய வாழ்க்கையை மறப்பதில்லை. செய்கின்ற தொழிலைத் தெய்வமாக நினைக்கும் இவர்கள், சிற்றின்ப வாழ்க்கையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். இதனால் கெட்ட பெயர் வர வாய்ப்பிருப்பதால் பெண்கள் விஷயத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். நண்பர்களிடத்தும், மனைவியிடத்தும் சிரிப்பூட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்தி, தானும் மகிழ்வதில் ஆர்வம் உடையவர்கள்.

பொதுவாக இவர்கள் உடன் இருப்பவர்களே இவர்களைப் புரிந்து கொள்ள முடியாது தவிப்பர். இப்பொழுது கூறியதை மறந்து பிறகு ஒன்று கூறுவர். இளகிய மனம் கொண்ட இவர்களுக்குத் தன் குடும்பத்திற்குத் தெரியாது மறைமுகமாகச் சிலருக்கு உதவும் நிலை வரும். இதனால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் வரும்.

தான் துன்பப்பட்ட காலத்தில் உதவி செய்தவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தத் தவறமாட்டார்கள். இயற்கைக் காட்சிகளையும், மலைப் பிரதேசங்களையும், ஆடம்பரப் பொருட்களையும், விஞ்ஞானக் கருவிகளையும் கண்டு மனம் அமைதி கொள்ளும். அழகான வீடு கட்டுவதிலும், ஆடம்பரப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் கொண்டவர்கள்.

பிறருக்குத் தீங்கு செய்யும் காரியங்களில் இறங்க மனம் கூசுவர். சம்பாதிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர்கள், தான் செய்வதுதான் சரியென்று அடித்துப் பேசுவர். இதனால் நண்பர்களிடத்தில் கருத்து வேறுபாடுகள் உருவாகும். புதிய புதிய திட்டங்களைப் போட்டு சமுதாயத்தில் உயர்ந்து நிற்க வேண்டும் என்று உழைப்பர்.

சில நேரங்களில் தகுதிக்கு மீறிய திட்டங்களில் இறங்கி தோல்வி கண்டாலும், மீண்டும் போராடி வெற்றி பெறுவர். எவ்வளவு வசதி பெருகினாலும் ஓய்ந்திருக்காது மீண்டும் முயன்று கொண்டிருப்பர். வசதி படைத்தவராக இருந்தாலும்கூட பிரச்சினைகளுக்கிடையில் சிக்கி மீள வேண்டியதிருக்கும். எவ்வளவு பணம் இருந்தாலும் திருப்தி காண முடியாது. பெரும் பணக்காரராக ஆகவேண்டும் என்பது இவர்கள் இலட்சியம். சிலர் திடீரென்று சமயத் தொண்டிலும் பக்தி மார்க்கத்திலும் இறங்கி விடுவர்.

இவர்களது பெயர் ஒழுங்காக அமையாவிட்டால், இவர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவது கஷ்டமாகிவிடும். வாழ்க்கை நிலை ஏறவும், இறங்கவும் இருக்கும். இன்னும் சிலருக்குப் போட்டிகளும் பொல்லாப்புகளும் வந்து சேரும். இதனால் பெயரைப் பொருத்தமான எண்களில் மாற்றிக் கொள்வது அவசியம்.

பெயர் நன்றாக அமைந்தவர்கள், பலவிதமான தொழில்களைச் செய்தும், டாக்டர், இஞ்சினியர், ஆசிரியர், எழுத்தாளர், கலை நிபுணர்களாகவும் பெரும் பணம் சம்பாதித்து விடுகின்றனர். உத்தியோகத்தில் இருந்து கொண்டு பல்வேறு தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். ஜோதிடம், சட்டம், மருத்துவம், அரசியல், பத்திரிகை விளம்பரம் சம்பந்தமானவைகளில் மனம் நாடிச் செல்லும். வெளிநாட்டுப் பயணங்கள், வெளியூர்ப் பயணங்கள் செய்யும் வாய்ப்பு அடிக்கடி வரும்.

இதனால் தன் தகுதியை உயர்த்திக் கொள்ளுவர். தன் தோழர்களிடம் அன்பாகப் பழகுவர். சிலருக்கு வாழ்க்கைத் துணைவர் இரண்டாக வருவதால் திருமணம் செய்பவர்கள் முதலிலேயே பொருத்தமான எண்களில் பிறந்தவரைத் தேர்ந்தெடுப்பதால் மறுமணத்தைத் தவிர்க்கலாம்.

பெயர் நன்றாக அமையாவிட்டால் போராட்டமும் கஷ்டமும் தொடர்ந்து வரும். இதனால் மனவேதனை அடைந்து நோயாளியாக மாற நேரும். பெயரை நல்ல எண்களில் மாற்றி அமைத்து நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

***தொழில் :*** இவர்களுக்கு காண்ட்ராக்ட், ஏஜென்ஸி, விளம்பரம், பப்ளிகேஷன், எலக்ட்ரானிக், கம்பியூட்டர், இரும்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும், பேசி சம்பாதிக்கும் தொழிலும், வாகன சம்பந்தமான தொழிலும், அச்சுத் தொழிலும் சிறந்தவை.

***நோய் :*** வயிற்றுக் கோளாறு, இடுப்புவலி, மனக்குழப்பம், இரத்த அழுத்தம், ஆஸ்துமா, கண்நோய் வந்து நீங்க வாய்ப்புள்ளது.

***பெயர் அமைக்கும் முறை :*** இந்த எண்காரர்கள் தனது பெயரை புதன், சுக்கிரன், சூரிய ஆதிக்கமான 5, 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களிலும் 6, 15, 24, 33, 42, 51, 60 போன்ற எண்களிலும் 10, 19, 37, 46, 64 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். புதன் ஆதிக்கம் சாலச் சிறந்தது.

***பின்பற்ற வேண்டியவை :***

யோகமான எண் - 5, 6, 1.

யோகமான திகதிகள் - 5, 14, 23; 6, 15, 24; 1, 10, 19, 28.

யோகமான மோதிரக்கல் - நீலக்கல், கனகபுஷ்பராகம், நீல அக்கோமரின்.

யோகமான நிறம் - நீலம், மஞ்சள்.

ஆகாத திகதி - 8, 17, 26.

ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.

*அடுத்த வாரம் பிறப்பெண் 8, கூட்டெண் 2 பற்றிப் பார்ப்போம்.*

# ஜோகன்னஸ் கெப்ளர் (1571 - 1630)

***வான்*** கோள்களின் இயக்க விதிகளைக் (The laws of planetary motion) கண்டுபிடித்தவர் ஜோகன்னஸ் கெப்ளர் (Johannes Kepler) ஆவார். அவர், ஜெர்மனியில் வெய்ல் டெர் ஸ்டாட் என்னும் நகரில் 1571ஆம் ஆண்டில் பிறந்தார். புகழ்பெற்ற பிரஸ்ஸிய வானியல் வல்லுநராகிய கொப்பனிக்கஸ், 'கோளங்கள் கதிரவனைச் சுற்றி வருகின்றனவேயன்றி, நிலவுலகைச் சுற்றி வரவில்லை' என்னும் தமது கோட்பாட்டினை விளக்கும் நூலை இவர் பிறப்பதற்கு 28 ஆண்டுகளுக்கு முன்னர்தான் வெளியிட்டிருந்தார். கெப்ளர், டியூபிங்கன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று, 1588 ஆம் ஆண்டில் இளங்கலைப் பட்டமும்,

# உலகை வியக்க வைத்தவர்கள்

மூன்றாண்டுகளுக்குப் பிறகு முதுகலைப் பட்டமும் பெற்றார். கொப்பனிக்கஸின் சூரிய மையக் கோட்பாட்டினை (Helio-centric Theory) அவர் காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானிகள் பலர் ஏற்க மறுத்தனர். ஆனால், கெப்ளர், டியூபிங்கனில் படித்துக் கொண்டிருக்கும் போதே சூரிய மையக் கோட்பாடு மிகத் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டதைக் கவனமாகக் கேட்டார். விரைவிலேயே அந்தக் கோட்பாட்டில் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கையும் ஏற்பட்டது.

டியூபிங்கன் பல்கலைக் கழகத்தை விட்டு நீங்கிய பின்பு, கெப்ளர், கிராஜ் நகரிலிருந்த கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் ஒரு பேராசிரியராகப் பணியாற்றினார். அங்கு பணிபுரியும் போது அவர் வானியல் பற்றிய தமது முதலாவது நூலை எழுதினார்(1596). அந்த நூலில் அவர் விளக்கிய கோட்பாடு முற்றிலும் தவறாகிப் போய்விட்ட போதிலும், கெப்ளரின் கணிதத் திறனையும், தற்சிந்தனையாற்றலையும் அந்த நூல் வெளிப்படுத்தியது. அந்த நூலைப் படித்த புகழ் பெற்ற வானியல் அறிஞராகிய டைக்கோ பிராகி (Tycho Brahe), பிரேகு நகர் அருகிலிருந்த தமது ஆராய்ச்சிக் கூடத்தில் தமக்கு உதவியாளராக வருமாறு கெப்ளரை அழைத்தார்.

டைக்கோவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட கெப்ளர், 1600 ஆம் ஆண்டு ஜனவரியில் அவருக்கு உதவியாளராகச் சேர்ந்தார். எனினும், இடைப்பட்ட மாதங்களில், புனித ரோமானியப் பேரரசர் இரண்டாம் ரூடால்பை இவருடைய ஆற்றல் வெகுவாகக் கவர்ந்து விடவே, அவர், இவரை டைக்கோவுக்கு அடுத்தபடியாக அரசவைக் கணித மேதையாக (Imperial Mathematician) நியமித்தார்.

டைக்கோ பிராகிக்குப் பின்வந்தவர் என்ற முறையில், டைக்கோ பல்லாண்டுகள் கோளங்கள் குறித்து கவனமாக ஆராய்ந்து எழுதி வைத்திருந்த ஏராளமான ஆராய்ச்சிக் குறிப்புகள் கெப்ளருக்கு வந்தடைந்தன. தொலை நோக்காடி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பிருந்த தலைசிறந்த வானியலறிஞர்களில் இறுதியானவராக விளங்கிய டைக்கோ, உலகம் கண்டிராத உன்னிப்பான துல்லியமான கூர்நோக்கு ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்தார். அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் அனைத்தும் அருமதிப்புள்ளவையாக விளங்கின. கெப்ளரின் காலத்தில், கோளங்களின் இயக்கம் குறித்து, கொப்பனிக்கசின் சூரிய மையக் கொள்கையும், டாலமியின் பழைய பூவுலக மையக் கொள்கையும் (Gocentric theory ) வழக்கில் இருந்தன. இவை தவிர, மூன்றாவது கொள்கை ஒன்றினையும் டைக்கோ வகுத்திருந்தார். டைக்கோவின் ஆராய்ச்சிக் குறிப்புகளை மிகக் கவனமாகக் கணித முறைப்படி பகுப்பாய்வு செய்வதன் மூலமாக இவற்றுள் எந்தக் கொள்கை சரியானது என்பதைத் துல்லியமாக உறுதியிட்டு விடலாம் என்று கெப்ளர் நம்பினார். ஆனால், பல ஆண்டுகள் அரும்பாடுபட்டுக் கணிதக் கணிப்புகள் செய்து பார்த்தபோது டைக்கோவின் ஆராய்ச்சிக் குறிப்புகள் அந்தக் கொள்கைகளில் எதனுடனும் ஒத்திருக்கவில்லை என்பதைக் கண்டு கெப்ளர் மனக்குழப்பம் அடைந்தார்.

இறுதியில், சிக்கல் என்ன என்பதைக் கெப்ளர் உணர்ந்து கொண்டார். அவரும், டைக்கோ பிராகி, கொப்பனிக்கஸ் போன்ற மரபு வானியலறிஞர்கள் அனைவரையும் போன்றே, கோளங்களின் சுற்றுப் பாதைகள்(ழுசடிவைள), வட்டங்களை அல்லது வட்டங்களின் தொகுதிகளைக் கொண்டிருப்பதாக அனுமானித்திருந்தார். ஆனால், உண்மையில் கோளங்களின் சுற்றுப் பாதைகள் வட்டவடிவில் இல்லாமல், நீள்வட்ட வடிவில் (Elliptical) இருக்கின்றன என்பதைக் கெப்ளர் அறிந்தார்.

இந்த அடிப்படையான தீர்வைக் கண்டுபிடித்த பின்னருங்கூட, தமது கோட்பாடு, டைக்கோவின் ஆராய்ச்சிகளை ஒத்திருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பல மாதங்கள் வரை மனச்சோர்வூட்டக்கூடிய மிகச் சிக்கலான கணிப்புக்களில் கெப்ளர் ஈடுபட்டிருந்தார். அவருடைய சிறந்த நூலாகிய



'புதிய வானியல்' (Astronomia Nova) 1609 ஆம் ஆண்டில் வெளியாகியது. அதில் வான்கோள்களின் இயக்கம் பற்றிய தமது முதல் இரு விதிகளை அவர் விளக்கியிருந்தார். 'ஒவ்வொரு கோளமும் சூரியனைக் குவிவு மையமாகக் கொண்டு, சூரியனைச் சுற்றி ஒரு நீள்வட்டப் பாதையில் இயங்குகிறது' என்பது முதல் விதியாகும். இரண்டாம் விதி, 'ஒரு கோளம், சூரியனுக்கு அருகில் இருக்கும் போது அதிக விரைவாக இயங்குகின்றது கோளத்தையும், சூரியனையும் இணைக்கும் கோடு, சமகால அளவுகளில் (Equal Length of Time) சம அளவுப் பரப்புகளை (Equal Areas) அளாவிச் செல்லும் வகையில் ஒரு கோளத்தின் வேகம் வேறுபடுகிறது' என்று கூறுகிறது. பத்தாண்டுகளுக்குப் பிறகு கெப்ளர் தமது மூன்றாவது விதியை வெளியிட்டார். "ஒரு கோளம்" சூரியனிலிருந்து எவ்வளவு அதிக தூரத்தில் இருக்கிறதோ, அவ்வளவு அதிக காலம் அது அதன் ஒரு சுழற்சியை முடிப்பதற்குப் பிடிக்கிறது. ஒரு சுழற்சிக்கான கால அளவின் இருமடிப் பெருக்கம் (Square), சூரியனிலிருந்து கோளத்தின் தொலைவின் மும்முடிப் பெருக்கத்திற்கு (Cube) சரிசம விகித அளவில் (Proportional) இருக்கும்" என்பது இந்த விதியாகும்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

**நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

**வணக்கமுங்கோ!**

ரவிராஜ் எம்.பி. செத்து ஒரு மாதமும் ஆகையில்லை. அதுக்குள்ள அவரின்ர இடத்துக்கு ஆளை நியமிச்சுப் போட்டினம். இந்த ரவிராஜ் இல்லாட்டில் இன்னொரு சிறிகாந்தர் எண்ட மாதிரிப் போகுது. செத்த வீடெண்டது ரவிராஜின்ர குடும்பத்துக்கே தவிர, தமிழ் தேசத்துக்கு இல்லை எண்டதுதான் தெளிவாகத் தெரியுது. ஜோசப்பர் செத்தவுடன பதவியை வழங்கினதில இருந்த இழுபறி ரவிராஜின்ர இழப்பில இருக்கயில்லை எண்டதே கண்ட மாதிரியெல்லாம் யோசிக்க வைக்குதுங்கோ. கோட்ஸில ஆளைக் கண்டால் இயக்கத்தைப் பற்றி விமர்சனங்களைக் கூட கேட்காது பயந்து கொண்டு ஓடிற மனிசன் சிரிகாந்தா, இண்டைக்கு எம்.பி.யாயிற்றார். அதுவும் உந்த சிங்கள அரசாங்கத்தின் மீது புலிகளின்ர தலைவர் துப்பரவாக நம்பிக்கை இல்லை எண்டும் நம்பவும் போறதில்லை எண்டும் அறுதியும், உறுதியுமாக சொன்னாப்பிறகு பாராளுமன்றத்தில் போய் நிண்டு உந்த நாட்டின்ர இறைமையையும், பாதுகாப்பையும் ஏற்றுக்கொண்டு செயல்படுவேன் என்ற உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார். உது டோட்டலாக பித்தலாட்டமாக இருக்குதே எண்டு யோசிக்கேக்க முடிவு ஒண்டும் தெரியுதில்லை. சரி நானே எதையாவது யோசிச்சு சொல்லுறதை விடவும் சிறிகாந்தரிட்டையே கேட்பம் எண்டு கேட்டனுங்கோ.

"என்ன சிறி அண்ண உங்கட நீண்ட நாளையக் கனவு நிறைவேறிட்டது போலை."

ஓமோம்...ஓமோம்...உது ஜோசப்பர் செத்த மூட்டம் கிடைக்க வேண்டியது...அதில கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்குத்தான் கொடுக்கவேணுமெண்டு குழப்பிப் போட்டினம்... பிறகு இவர் செல்வத்தாருக்கு ஏதாவது நடந்தால்தான் உது நடக்குமெண்டு நினைச்சனான். விதி ரவியிட்ட விளையாண்டிட்டுது...

"சரி கூட்டமைப்பு எம்.பி.மாரே இனி என்ன செய்யிறதெண்டு முடியைப் போட்டுப் பிச்சுக் கொண்டிருக்கேக்க நீங்களும் சேர்ந்து என்ன செய்யப் போறீங்கள்."

நான் மட்டும் என்ன செய்யிறது. அவையோடை சேர்ந்து தலைக்கறுப்பைக் காட்டிக் கொண்டு திரிய வேண்டியதுதான்.

"அதுசரி ரவியின்ர பதவியைத் தந்திச்சினம். ஆனால் அவர் பாவிச்ச வாகனத்தை தாரதில ஏதோ சிக்கல் எண்டு கதை அடிபடுகுதே."

எப்படித்தான் உதுகளை மணந்து புடிக்கிறியளோ தெரியாது. உங்கட சிந்தியா ஒரு கேள்வி பதிலில அடுத்த எம்.பி.யார் எண்டதுக்கு என்னுடைய பெயரைத்தான் முதலில குறிப்பிட்டுப் பதில் சொன்னார். நீங்கள் என்னடாவெண்டால் உந்த வாகனப் பிரச்சினையை கேக்கிறியள்.

"அதை விடுங்கோ...அப்புடி ஒரு பிரச்சினை இருக்கோ இல்லையோ!"

இருக்குதுதான்...அவைக்கு இன்னொரு காரும் இருக்குது... அது சம்பந்தமாக கதைக்கினம். பாப்பம் என்ன முடிவு வரப்போகுதெண்டு.

ஏன் முதலில அவரின்ர திருமதியைத்தானே எம்.பி. பதவிக்குக் கேட்டிச்சினம்.

அது....அது...வந்து...உண்மையைச் சொல்ல வேணுமெண்டால்...ரவியின்ர உடலை வன்னிக்குக் கொண்டு செல்ல வேணுமெண்டோ யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல வேணுமெண்டோ அவை விரும்ப இல்லை. இயக்கம் அவையின்ர விருப்பத்துக்கு மாறாக, கட்டளை போட்டதில அவவுக்குப் பிடிக்கயில்லை. சரி தன்ர கணவர் எண்டுதான் கடைசி நேரத்தில சில முடிவுகள் எடுக்கப்பட்டது. இதுகளும் ஒரு காரணம் எண்டு வச்சுக் கொள்ளுங்கோவன்.

"சரி நீங்கள் எம்.பி.யானதில செல்வத்தாருக்கு விருப்பமா?"

எங்க விருப்பம்... அறைகுறையாகத்தான் விரும்பினவர். எங்க தன்னை விஞ்சிப் போயிடுவேனோ எண்ட பயம்தான்...ஆனாலும் பாருங்கோ. நான் ஒரு சட்டத்தரணி எண்டதாலை...சில சுழிப்புகளைக் சழிச்சுப்போடுவன். அவைக்கு அதுகள் தெரியாது.

உங்கட சட்டத்தரணி வேலைகளையெல்லாம் தொடர்ந்து செய்வீங்களோ?

ஓமோம்...ஓமோம்...அதுதானே நான் படிச்சு கஷ்டப்பட்டு, எடுத்த உத்தியோகம், அதைவிட்டால் நாளைக்கு நான் நடுத்தெருவிலதான் நிக்க வேணும்.

பின்ன ஏன் எம்.பி.பதவியையும் எடுத்தீங்கள்.

அது வந்து பாருங்கோ. சிறியத்தாருக்கு உந்த யோகம் இல்லை. அவர் சும்மா புருடா விட்டுக் கொண்டு திரியிறார் எண்டெல்லாம் வாய்க்கு வந்தபடி சில பேர் கதைச்சிச்சினம். அவைக்கு பதில் சொல்லத்தான் மாமனிதராக ஆனாலும் பரவாயில்லை எண்டு பொறுப்பு எடுத்தனான்.

சரி இருபத்திரெண்டாம் புலிகேசியாக சொரி மன்னிச்சுக்குங்கோ. 22ஆவது எம்.பி.யாக பதவி ஏற்றிருக்கியள். இந்தச் சந்தர்ப்பத்தில தமிழ் மக்களுக்கு என்ன சொல்லிக்கொள்ள விரும்புறியள்.

என் அன்பான தமிழ் மக்களே; சகோதர முஸ்லிம் மக்களே...போன தேர்தலுக்குப் பிறகு நான் ஓரம் கட்டப்பட்டுவிட்டதாக கனவு கண்ட என் அரசியல் நண்பர்களே. உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள். நான் இன்று எம்.பி.பதவியை ஏற்றுக் கொண்டிருப்பது வெறுமெனவே சாவுக்கு முன்னர் எம்.பி.யாகி விட வேண்டும் என்ற ஆசையில் இல்லை. தமிழ் மக்களுக்கு சேவை செய்யத்தான். எத்தகைய சேவை என்று நீங்கள் என்னைப் பார்த்துக் கேட்கலாம். உங்கள் கேள்வி நியாயமானது தான். ஆனால் நான் பதில் சொல்வதை விடவும் அதை நடைமுறையில் அல்லது செயல் வடிவத்தில் நடத்திக் காட்டவே விரும்புகின்றேன்.

அன்பார்ந்த தமிழ் மக்களே! சிங்களத்தின் பாராளுமன்றத்தில் ஒரு தமிழன் எம்.பி.யாகப் போனால் அங்கு என்னென்ன செய்வான் எப்படியெல்லாம் நடந்து கொள்வான் என்பதை இனித்தான் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அதற்காக என் சகாக்கள் இருபத்தி ஒரு பேரும் தமிழர்களில்லையா என்று கேட்டுவிடாதீர்கள். அப்படி கேட்பீர்களாக இருந்தால் அது என் சகாக்களையும், என்னையும் பிளவுபடுத்த நினைக்கும் ஒரு சதி கலந்த கேள்வியாகத்தான் இருக்கும்.

மானமுள்ள தமிழன் யாரும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்க மாட்டான். எந்த விடயத்துக்காகவும், எந்த அநியாயத்துக்காகவும் கேள்வி கேட்காத மானமுள்ள தமிழினமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மானமுள்ள தமிழினமே நீங்கள் நீடுழிகாலம் வாழ வேண்டும். என்றும் உங்களில் ஒருவனாக நானும் வாழ்ந்து கொண்டிருப்பேன்.

ஆஹா...ஆஹா...என்ன ஒரு பேச்சு அப்புடியே மேடையில பேசிற மாதிரியே புல்லரிக்கிற விதமாக பேசினீர்கள். ஆளை விடுங்கோ பிறகு சந்திப்பம் பாய்...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(07.12.2006 தொடங்கி 13.12.2006 வரை)**

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம் - சூரியன், வியாழன், செவ்வாய், புதன், வெள்ளி. கும்பம் - இராகு. சிங்கம் - சனி, கேது. சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை உயர்ச்சி, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, பணவரவு கஷ்டம், குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, பதவிகளில் மாற்றம், மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பகை, வெளியிட வாழ்க்கை, தேகசுகக் கஷ்டம், பிரயாண மிகுதி, மனக்குறையதிகம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி முயற்சி, புதிய கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், பணச்செலவு, மனக்குறை நீங்கும், பெரியோர் சகவாசம், தேகசுக நன்மை, வெளியிடப் பயணம், உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, பணவரவு, செய்தொழில் விருத்தி, பெரியோர் நட்பு, வெளியிட வாசம், அந்நியர் நட்பு, குடும்பச் சுகம், உத்தியோகக் கலக்கம், மாணவர்க் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் அலைச்சல், எதிர்பாரா செலவு, பெரியோர் சகாயம், இனசன மகிழ்ச்சி, துயர் நீங்கும், உறவினர் உதவி, குடும்பப் பாரம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பயம், வீண்செலவு, மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, தூர இடப்பயணம், அந்நியர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர்க் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரிய சித்தி, பெரியோர் உதவி, பொருள்வரவு, உயர்ந்த நட்பு, எதிர்பாரா பிரயாணம், குடும்பப் பயம், உத்தியோக அலைச்சல், மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் கலக்கம், பொருள் செலவு, புதிய முயற்சி, வீண் குறை கேட்டல், தேகசுகக் கஷ்டம், குடும்பத் தொல்லை, வைத்தியச் செலவு, உத்தியோக நன்மை, மனமகிழ்ச்சி, மாணவர்க் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 06.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் மந்தம், பணவிரயம், எதிர்பாரா செலவு, மனக்குறையதிகம், அந்நியர் சகாயம், தேகசுகக் குறைவு, குடும்பச் செலவு, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பலிதம், பணவரவு, பெரியோர் சகாயம், உயர்ந்த எண்ணம், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, பணவரவு தடை, குடும்ப மேன்மை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியசித்தி, உயர்ந்த நிலை, பெரியோர் நன்மை, புதிய முயற்சி, பணச்செலவு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர்க் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)

# போட்டி

**வெ**ளியுலக சமாச்சாரங்களைத் தெரிந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத மனிதர்களைக் 'கிணற்றுத் தவளை' என்பார்கள். இடைவிடாது கத்திக் கொண்டிருப்பவர்களை 'மாரித் தவளைகள்' என்பார்கள். தவளைகளை இலங்கையர்களாகிய நாம் உண்ண மாட்டோம். அது எமக்கு அருவருப்பு. ஆனால், சீனா, தாய்வான், ஹொங்கொங் போன்ற நாடுகளில் தவளைக் கறிக்கு பெரும் மவுசு. சரி, இன்னுமொரு சமாச்சாரத்தைப் பார்ப்போம். உலகிலேயே மிகப் பிரமாண்டமான தவளை கமரூன் என்ற ஆபிரிக்க நாட்டின் சனகா ஆற்றுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது கண்டுபிடிக்கப்பட்டு 116 ஆண்டுகள் கடந்தோடி விட்டன. 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட இந்தத் தவளை, கொன்ட்ரௌ கோலியாத் என்ற விலங்கியல் பெயரால் அழைக்கப்படும் தவளை வர்க்கத்தைச் சேர்ந்தது. எடை 3.6 கிலோகிராம் (8 இறாத்தல் ஒரு அவுன்ஸ்)நாசித்துவார நுனியிலிருந்து உடற்பகுதியின் அடிப்பாகம் வரை அதன் நீளம் 36.8 சென்ரிமீற்றர் (14.5 அங்குலம்) பின்னங்கால்கள் நீட்டப்பட்ட நிலையில் இதன் நீளம் 87.6 சென்ரிமீற்றர்கள். அதாவது, 34.5 அங்குலம். இந்த தவளையின் நீளம் முப்பது சென்ரிமீற்றர்கள் அல்லது 11.8 அங்குலம். அதாவது இந்த இனத் தவளைகள் சராசரியாக ஒரு முயலையொத்த பருமனையுடையவை.






உலகிலேயே மிகச் சிறிய தவளைகள் கியூபா நாட்டில் காணப்படுகின்றன. "அலுத்தொடடாக்றிடலஸ் லிம்பாட்டலஸ்" என்ற விலங்கியல் பெயர் கொண்ட இத்தவளைகள் 8.5 இலிருந்து 12 மில்லிமீற்றர் வரை வளரக் கூடியவை. அதாவது, 0.3 - 0.5 அங்குலம் வரை நீளம் கொண்டவை. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியவை இந்த வகைத் தவளைகள்.

**வே**கமான உலகத்திலே எதற்கு எடுத்தாலும் போட்டியென்றாகிவிட்டது. அதிலும் ஜெயிப்பதென்றால் அதிமாகப் போராட வேண்டியுள்ளது. குறிப்பாக உலக அழகு ராணிப்போட்டிகளில் இடம்பிடிப்பதற்காக உலக அளவில் அழகிகள் அதிக பிரயத்தனம் எடுத்துக்கொள்கிறார்கள். அந்த வகையில் இம்பாலில் நடைபெற்ற மிஸ் ஜெட்ரோபா நோர்த்ஈஸ்ட் 2006 அழகிப்போட்டியில் முதலாமிடம் பிடித்த நாகலாந்து அழகியுடன், இரண்டாவது, மூன்றாவது இடம் பிடித்த மணிப்பூர், மேகாலயா அழகிகள்.

# பதிவு



Chewing Gum என்ற ஆங்கில வார்த்தையை நாம் அப்படியே 'சுவிங்கம்' என்று அழைக்கிறோம். சிறுசுகள் சுவிங்கத்தை வாயில் போட்டுச் சப்பிக் கொண்டேயிருப்பார்கள். சில வேளைகளில் பலூன்களைப் போன்ற வடிவில் பபிள்கம்களை ஊதி விளையாடுவார்கள். அமெரிக்கரான சாட் பெல் என்பவர் பபிள்கம்மை ஆகக் கூடிய சுற்றளவுக்கு ஊதிச் சாதனை படைத்துள்ளார். கைகளைப் பயன்படுத்தாமல், அல்லது வேறு எந்த உதவியுமின்றி 50.8 சென்ரிமீற்றர்கள் (20 அங்குலம்) சுற்றளவு வரை பபிள்கம்மை ஊதிப் பெருப்பித்துள்ளார். அமெரிக்காவின் அலபாமா மாநிலத்திலுள்ள வின்ஸ்ரன் கன்ரி உயர்நிலைப் பாடசாலையில் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி சாட்பெல் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். உங்கள் வெற்றியின் இரகசியம் என்னவென்று சாட் பெல்லைக் கேட்டபோது, "ஒன்றுமில்லை, டபிள் பபிள்கம் மூன்று துண்டுகளை வாயில் போட்டுச் சப்பிய பின்னர் ஊதிப் பாருங்கள். சில வேளைகளில் உங்களாலும் இச் சாதனையை நிகழ்த்த முடியும்." என்று குறிப்பிட்டார்.



# பெருசு!

தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.
கொவிசெத லொத்தரின் அடுத்த
கோடீஸ்வரரா நீங்களா ?

கோடீஸ்வரராகுங்கள்,
மென்மேலும் கொவிசெத
டிக்கெட்டுகளை
வாங்குங்கள்!



கொவிசெத
இலங்கையரின் அபிமானத்திற்குரிய
மகத்தான லொத்தர்

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம www.nlb.lk